www.padippakam.com

MR. K. JUDE

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

දිනමුරසු වාරමලර් ஜன.10–16,1999

ரூபா 12/00

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 291

## வாஜ்பேயி சொன்னது என்ன?



## சந்திரிக்காவின் இந்திய விஜயம்!



## மறுபடி மோனிக்கா

## பெரியாரின் சீடர்

## வித்தியாச சோதிடம்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

# முரசம்

## உண்மையான ஜனநாயகத்திற்காக...

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

கொழும்பு மொரட்டுவ
பல்கலைக்கழக
தமிழ் மாணவர்கள்
தொடர்ச்சியாகக்
கைது செய்யப்படுகின்றனர்!

பல்கலைக்கழகத்தில்
நவராத்திரி விழாவை
அவர்கள் நடத்தியதிலிருந்தே
புலி முத்திரை
குத்தும் வேலையை
பேரினவாதிகள் ஆரம்பித்தனர்!

தமிழ் மாணவர்களை
புலிகள் என்று
பல்கலைக்கழக சுவர்களில்
எழுதினார்கள்!

மொட்டைக் கடிதங்கள்
பொலிசாருக்கும்
பறந்திருக்கின்றன!

அதன் பின்னரே
தொடர்ச்சியான
கைதுகள் நடக்கின்றன!

குறிப்பாக
பொறியியல் கற்கும்
மாணவர்கள்மீது
கூடுதல் சந்தேகம்!

போர் நடப்பதால்
தமிழ் மாணவர்கள்
பொறியியல்
கற்பதும் குற்றமா?

தமிழ்ச் சமூகத்தின்
ஆற்றல்கள், வளர்ச்சிகள்
என்பவையும்
அச்சத்துக்குரியனவாகத்தான்
நோக்கப்படுகின்றன!

'எமது பல்கலைக்கழகத்தில்
தமிழ மாணவர்கள்
விழா நடத்துவதா?'
என்று இனவாதமாக
சிந்தித்த சிலரே
புலிச்சாயம் பூசுவதில்
முன்னின்றுள்ளனர்!

பேரினவாத சிந்தனைக்கு
கொம்பு சீவிவிடுவது போன்றே
பொலிசாரினது
நடவடிக்கையும் அமைந்துள்ளது!

தரப்படுத்தல்தான்
தமிழ் மாணவர்களை
ஆயுதங்களை நோக்கி
அழைத்துச் சென்றது!

மாணவர்கள்
பயமறியாதவர்கள்!

அடக்குமுறைகளும்,
அனாவசிய சீண்டுதல்களும்
வம்பை விலைகொடுத்து
வாங்குவதைப் போன்றதே!

தேன்கூட்டைக்
கல்லெறிந்து
கலைப்பது போன்று,
அமைதியாக இருந்து
கல்வி கற்பவர்களை
சந்தேகப் பார்வையால்
வெறுப்புற வைக்கின்றனர்!

ஜனநாயகம் பேசும்
தமிழ்க் கட்சிகளும்
இந்தக் கைதுகளைமிட்டு
கவனம் செலுத்தவில்லை!

ஒட்டுமொத்தமாக
தமிழ்ச் சமூகத்துக்கு
ஜனநாயகம் மறுக்கப்பட்டுள்ளது!

தனது தேவைக்கேற்பவும்
நலனுக்கேற்பவுமே
அவ்வப்போது
அரசு ஜனநாயகம்
வழங்குகிறது!

அதனையே
ஜனநாயகம் என்றும்,
அதற்கு எதிரானவை
ஜனநாயக விரோதமானவை
என்றும் தமிழ்க்கட்சிகளும்
தம் நலனுக்கு
ஏற்ப கூறிவருகின்றன!

அதனால்
மறுக்கப்பட்டு வரும்
உண்மையான ஜனநாயகம்
பற்றி இக்கட்சிகள்
கவலை கொள்வதில்லை!

தேர்தல்களில்
நின்று பதவியடையவும்,
அடுத்த தேர்தலுக்காக
வாக்கு வங்கிகளைத்
திரட்டவும்
தமக்கு சந்தர்ப்பம்
இருந்தால் போதும்
என்று நினைக்கின்றனர்!

அவ்வாறான சந்தர்ப்பத்துக்காக
எத்தகைய நாடகத்திலும்
பங்கேற்றுக் கொள்ளவும்
தயாராக உள்ளனர்!

இவர்களது 'ஜனநாயகம்'
என்பது மேற்கண்ட
வரையறைக்குள் அடக்கம்!

தமது சமூகம்
ஜனநாயக உரிமைகள்
யாவும் இழந்து
சந்தேகப் பிராணிகளாக
நடத்தப்படுவது
ஜனநாயக விரோதமாக
இவர்களுக்குத் தெரியாமல்
போவது அதனால்தான்!

இக் கட்சிகள்
உண்மையான ஜனநாயகத்திற்காக
போராடப் போவதில்லை;
ஜனநாயகம் என்றால்
என்ன என்றுகூட
இவைக்கு தெரியவில்லை!

பகிரங்க அரசியலில்
ஜனநாயகக் குரல் கொடுக்க,
தேர்தல் ஆசையற்ற
மனிதாபிமான அமைப்புகள்-
ஜனநாயக விரும்பிகள்
ஒன்று திரள வேண்டும்!

தமிழ் பேசும் மக்களின்
அனைத்துப் பிரிவினரும்
எதிர்கொள்ளும்
உண்மையான பிரச்சனைகளை
உலகுக்கு வெளிப்படுத்த
உரிய 'ஜன்னல்களும்'
வழிமுறைகளும்
இன்று அவசியத் தேவை!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## ஆனந்தமளிக்கும் ஸ்ரீ ஆறுமுக வழிபாடு

ஆதங்கம் இல்லாத மனிதர்களே இல்லை எனலாம். அடுத்த வேளைச் சாப்பாட்டிற்கு என்ன செய்வது என்று கவலைப்படுவோர்க்கும், உண்ட சோறு சீரணிக்கவில்லையே என்று உருகுவோருக்கும் அவரவர் நிலையில் தனித்தனியான ஆதங்கம் இருப்பது கண்கூடு.

தம்பக்கம் நியாயம் இருக்கும் பட்சத்தில் தமக்கு வரவேண்டியதை யாராலும் தடுக்க முடியாது என்பது மரபு. ஆனால் அது வந்து சேரும்வரை நம்மிடம் இருப்பது ஆதங்கம். அந்த ஆதங்கம் ஆனந்தமாக மாறுவது ஆறுமுக வழிபாட்டால்.

நியாயப்படி தனக்குக் கிடைக்க வேண்டிய ஞானப்பழம் கிடைக்காத காரணத் தால்தான் பழநியிலே ஆண்டியாய் நின்றார் முருகப் பெருமான். அம்மையப்பனும் முருகனிடம் ஓடோடி வருகிறார்கள். "நீயே ஞானப்பழந்தானே... அந்தப் பழம் (மாம்பழம்) இல்லாவிட்டால் என்ன. 'பழம் நீ'" என்று அன்பொழுகக் கூறுகிறார்கள்... கந்தப்ப சுவாமிக்கு கலியுக வரதன் என்றும் திருநாமம் உண்டு.

வேண்டுவோர்க்கு வேண்டுவன ஈயும் ஆறுமுகப் பெருமானின் அவதாரமே அற்புதமானது. தீப்பிழம்பாய்த் தோன்றி கங்கையிலே மிதந்து சரவணப் பொய்கையிலே குளிர்ந்ததைப் போல, கட்டெரிக்கும் தீமை பல வந்தாலும் நாம் ஆறுமுகப் பெருமானை நெஞ்சுருகிப் பிரார்த்திப் போமானால் தகிக்கும் உள்ளத்து தணலை படிப்படியாகக் குளிர்வித்து நெஞ்சத்திலே 'அஞ்சேல் என்றருள்த் தென்றலை' வீசச் செய்வார்.

தொகுப்பு: அ. அரசரெத்தினம், சேனையூர்-06.



## ஸஹர் சாப்பிடுவதின் சிறப்பு

எம்மை வந்தடைந்த புனித றமழான் மாதத்தைக் கண்ணியப்படுத்துவதும், அம்மாதத்தில் நோன்பு நோற்று அளவற்ற நன்மைகளைப் பெற்றுக்கொள்ள நபி (ஸல்) அவர்கள் காட்டிய சிறப்பான வழிமுறைகளில் இந் நோன்பை நோற்பது எமது கடமையாகும். ஆனால், நோன்பு நோற்கும் நம்மில் சிலர் ஸஹர் நேரத்தில் கண் விழித்தெழுந்து நோன்பு நோற்பது சற்றுக் கடினம் என்றெண்ணி அன்று இரவு தராவீஹ் தொழுகை முடிந்த உடனேயே ஏதாவதை சாப்பிட்டுவிட்டு நோன்பை நோற்கிறார்கள். இது நபி காட்டிய முறைக்கு வேறுபாடானது.

ஹிப்னு ஹாரிஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் ஸஹர் சாப்பிட்டுக்கொண்டு இருக்கும்போது நான் அன்னாரிடம் சென்றேன். அப்பொழுது அவர்கள் "இது அல்லாஹு தஆலா உங்களுக்கு அருளிய பரக்கத்தான பொருளாகும் இதனை விட்டுவிடாதீர்கள்," என்று கூறினார்கள்.

"ஹரீத் என்ற ஸஹர் நேர உணவைச் சாப்பிட்டு நோன்பு வைக்கச் சக்தியை உண்டாக்கிக் கொள்ளுங்கள். ஏனெனில் இந்த உணவில் அல்லாஹ்வின் பொருத்தமும் மிகுந்த பரக்கத்தும் நிறைந்திருக்கிறது. மேலும், மத்தியானம் சற்று நேரம் தூங்கி இரவின் கடைசியில் எழுந்திருக்க அல்லாஹ்விடம் உதவி தேடிக்கொள்ளுங்கள்." (நபி மொழி)

வை.எம். தாஹிர்கரீம், கல்முனை-06.

# கவிதைப் போட்டி இல.288



### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

### பரிசுக்குரிய கவிதை

**செம்மணி**

**வதையுண்டு சிதையுண்டு**
**செம்மணி வெளியில்**
**புதையுண்டு போன**
**நம் உறவின் மகன்!**

பொ. மணிமாறன்-
தன்னீரூற்று, முள்ளியவளை.

**ஓயாத அழுகை**

சோகம் விளைந்த
வன்னிப் பூமியிலே
சொந்தம் கொண்டாடும்
சின்னப் பூ இதுவோ....?

செ. ஞானராசா-
சின்னப்பண்டிவிரிச்சான், மடு.

**வண்ணமுகம்**

உண்டு கொழுத்து
தெற்கிலிலே உலாவர,
பஞ்சடைந்த கண்ணோடும்
பசிகிடந்த வயிறோடும்
வட-கிழக்கில் வாடுகின்ற
வண்ணமுகம் தேயுதையோ!

பனங்காமம் கு. பகீரதன்-
மாங்குளம்.

**ஏக்கம்**

ஷெல் அடி,
கண்ணி வெடி,
குண்டு வீச்சு,
சுற்றி வளைப்பு,
தேடுதல் நடவடிக்கை
இல்லாத நாளையெண்ணி
ஏங்கி அழுகின்றாயோ?

எம். ராமமூர்த்தி-வெலிமடை.

**இதுவும் சுதந்திரம்**

தமிழனுக்கு இன்று
இந்நாட்டில் இருக்கின்ற
ஒரேயொரு சுதந்திரம்-
அழுகை!
ஒரேயொரு அந்தஸ்து-
அகதி!

சாமிஷ் யோகேந்திரன்- ஆரையம்பதி-02.

**என் அழுகிறாய்?**

என் நிவாரணத்தையும்
தின்று விட்டு,
அந்த வெண்புறாவையும்
வெட்டுகிறார்களே!

கா. சுஜந்தன்- கிளிநொச்சி.

**பசிக்கொடுமை**

பட்டாடை கேட்டு நான் புலம்பவில்லை
பாவையொன்று வேண்டுமென்று
அழவுமில்லை;
புசிப்பதற்கு ஏதுமில்லாக் காரணத்தால்
பசிதாங்க முடியாமல் கதறுகின்றேன்!

செல்வி மதுரா யோகேந்திரன்- திருக்கோவில்.

**பசி**

கட்டியணைக்க தாயில்லை;
புட்டிப் பாலும் எனக்கில்லை;
வெட்டி விட்டான் தடைபோட்டு-
பட்டினியால் அழுகின்றேன்!

க. சேது- தேற்றாத்தீவு-02,
களுவாஞ்சிக்குடி.

**அனாதைகள்**

ஆறாண்டு
ஆட்சியின்
நான்காண்டு
அறுவடை!

'ஆதிரன்'-
ஆரையம்பதி-01.

**அழாதே!**

அம்மா போனது
குவைத்திற்கு-
ஈராக்கிற்கு அல்ல!

சுஜோ- மல்லாவி.

**'கை'**

இரு'கை' போய்
அழு'கை' வரினும்
இறவாது நம்பிக்'கை'!

எஸ். பிரபா- பதுளை.

# கவிதைப் போட்டி இல.291



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 16.01.1999

**முகவரி:** கவிதைப் போட்டி இல.291
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

அன்பின் முரசே!

நீ ஏந்தி வரும் அனைத்து அம்சங்களும் பிரமாதம். உன்னில் என்னால் எக் குறையும் காணமுடியவில்லை. ஏன் எவராலும் காணமுடியாது. உண்மை என்பதற்கு முரசு என்றால் அது மெத்தச் சரி. ஆகையால்தான் நீ சிறு பிள்ளை முதல் முதியோர்வரை கொள்ளை கொள்கின்றாய்.

சி. சந்திரகுமார், அக்கரைபற்று.

என் இனிய முரசே!

'உன்னில் அடங்கிவரும் அனைத்து அம்சங்களும் பிரமாதம். அதிலும் அற்புதன் தரும் 'அரசியல் தொடர்', நாரதரின் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', 'முரசம்' என்பவை எம்மைச் சிந்திக்க வைப்பதுடன் மகிழ்ச்சி யையும் தருகின்றன.

கு. சிவகாந்தன், இறால்குடி.

இனிய முரசே!

அதிரடி அய்யாத்துரை அலசும் விடயங்கள் சூப்பர். கவியரசுவின் சுயசரிதை, 'கண்ணீரில் கரைந்த இரவுகள்', 'இடி அமீன்' அனைத்து அம்சங்களும் சுவாரஸ்யமாக இருக்கின்றன.

யாதுமூரான், கொழும்பு.

முக்கூலவையில் இனிமை சொட்டச் சொட்ட நகரும் விறு விறு தொடர் 'டிசம்பர் பௌர்ணமி.' கதாசிரியர் ராஜேஸ்குமார் ஒருவரால் மட்டுமே இப்படி எழுத முடியும் என நிரூபித்து வருகிறார். ஒரு வேண்டுகோள். 'முள் நிலவு' தந்த வடு இன்னும் மனதை விட்டு மறையவில்லை. நித்தியனையும் சாந்தாவையும் பிரித்துவிடாதீர்கள். இன்னொரு பிரிவைத் தாங்க உள்ளத்தில் உரம் இல்லை. கவியரசுவின் 'சுயசரிதை 24' அபாரம். அத்தனை வேகம். பல தடவை படித்துவிட்டேன். வசனம் ஒவ்வொன்றும் முத்தென ஜொலிக்கின்றது. பாராட்டுக்கள்!

மர்லியா முஹாஜிரீன், மீவலதெனிய.

### நயத்தோடு செறிவு

முரசே! சமீபகால 'இலக்கிய நயம்' புதியதொரு களத்தில் கால் பதித்திருக்கிறது. முன்னர் படித்திட இனித்தது. இப்போது தித்திப்போடு காலத்துக்கேற்ற கருத்துச் செறிவும் கலந்திருக்கிறது. நயம் என்றும் சுகமே.

தா. மோகனதாஸ், முந்தல்.

"இந்தியா மத்தியஸ்தம் வகிக்கக் கூடிய நிலை தற்போதைக்கில்லை" என இராஜதந்திரி கூறினார் அன்று! அதையே வாஜ்பேய் கூறியதாக செய்திகள் கண்டோம் இன்று!

எஸ். செந்தூரன்-கொழும்பு-06.

இந்தியா
எமது பிரச்சனையில்
மத்தியஸ்தம் வகிக்காமல்
இருப்பது நல்லதே.
இந்தியாவை பகைக்காது
தென்னாபிரிக்கா
மத்தியஸ்தம் பெறுவதே
ஏற்றது என்று
இராஜதந்திரி
கூறிய காரணங்கள்
ஏற்கத்தக்கவையே!

வி. சிவதர்சன், திருமலை.

முத்தான முரசுக்கு

எனது முதல் வணக்கங்கள்! முரசே நீ சுமந்து வரும் கவியரசுவின் சுயசரிதை, 'இடி அமீன்', 'கண்ணீரில் கரைந்த இரவுகள்' போன்ற அத்தனை விடயங்களும் என்னை கவர்ந்துள்ளது. அத்தோடு அரசியல் அலசலும் எனக்கு மிக்வும் பிடித்துள்ளது.

சி. சிவகுமாரன், கொழும்பு-11.



### கிளின்ரன் மட்டுமல்ல

மோனிகா விவகாரத்தைத் திசை திருப்புவது மட்டும்தான் ஈராக்மீது நடத்திய தாக்குதலுக்குக் காரணம் என்பது ஓரளவே உண்மை. இத் தாக்குதலில் அமெரிக்க நலனும் கலந்திருக்கிறது என்பதே முக்கிய காரணம். கிளின்ரன் மட்டும் தான் நினைத்ததைச் செய்ய முடியாது. அப்படிச் செய்தால் அமெரிக்கப் பிரதிநிதிகள் சபை மௌனமாக இருக்காது. கிளின்ரன் மோசமான மனிதர்தான். அமெரிக்க ஆளும் வர்க்கமும் அதைவிட மோசமானதுதான்.

சி. ராம்குமார், சுவிற்ஸர்லாந்து.

### இடி அமீனை மிஞ்சும் கிளின்ரன்

இடி அமீனையும் மிஞ்சிவிடும் ஈவிரக்கமற்றவர் கிளின்ரன். ஈராக்மீது தாக்குதல் என்ற போர்வையில் மக்களைக் கொன்று குவித்திருக்கிறார். முஸ்லிம் உலகை முடமாக்கிப் போடுவதே அமெரிக்கா? பிரிட்டன் போன்ற நாடுகளது அபிலாசை. இங்குள்ள முஸ்லிம் தலைவர்கள் அரசுக்குப் பயந்து, அமெரிக்கக் கொலைகாரர்களைக் கண்டிக்கத் தவறிவிட்டனர்.

எஸ். வாகீசன், நுவரெலியா.

### தலைகீழ் கிளின்ரன்

முரசே! இனிய முரசே!

சர்வதேசப் பயங்கரவாதி பில் கிளின்ரனை தலைகீழாகப் போட்டிருந்தாய். மனம் திறந்து, உள்ளத்தின் ஆழத்தில் இருந்து பாராட்டுகிறோம். சபாஷ் முரசே. சபாஷ்!

எம். நிசார்தீன், கிண்ணியா.

### பொருத்தமான கண்டனம்

தலைகீழான காரியம் செய்த அமெரிக்க ஜனாதிபதிக்கு 'முரசு' கொடுத்த வித்தியாசமான கண்டனம் அருமை. குண்டு வீச்சுக்களை அனுபவிக்கும் தமிழ் பேசும் மக்களின் பத்திரிகையில் ஈராக்மீதான குண்டுவீச்சுக்கு கொடுத்த கண்டனம் பொருத்தமானதே!

எஸ். குமாரலிங்கம், திருமலை.

### பயங்கரவாதி

முரசே! சதாமை 1997ம் ஆண்டின் சிறந்த மனிதராகத் தெரிவு செய்தாய். மகிழ்ந்தோம். ஈராக்கைத் தாக்கிய கயமைத்தனத்தை கண்டித்து சர்வதேசப் பயங்கரவாதியை தலைகீழாகக் காட்டி விட்டாய். எங்கள் உணர்வுகளை உன் வழியாக வெளிக்காட்டிவிட்டாய்.

எ.ஃப். உதுமாலெப்பை,
மட்டக்களப்பு.

### வாசகர்களின் பிரகடனம்

சாத்தான் அமெரிக்காவின் அதிபர் கிளின்ரனை சர்வதேசப் பயங்கரவாதி என்று 'முரசு' செய்த பிரகடனம் முரசின் பிரகடனம் மட்டுமல்ல, 'முரசு' ஒரு தடவை பிரகடனம் செய்தால், அது பல இலட்சம் வாசகர்கள் பல இலட்சம் தடவை கூறியது மாதிரித்தான்.

செல்வி இ. ராஜலட்சுமி, கொழும்பு-09.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல்:- 074-513266

www.padippakam.com

# "புலிகளின் நோக்கம் அகண்ட தமிழகமா?"

## அமெரிக்க அதிகாரிகள் வை.கோவிடம் கேள்வி!

**அமெரிக்கா சென்று அங்கு இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக பிரசாரம் மேற் கொண்டார் மறுமலர்ச்சி தி.மு.க. தலைவர் வை.கோ. தனது சுற்றுப் பயணம் குறித்து தமிழக சஞ்சிகையான 'நந்த' னுக்கு விரிவான பேட்டி ஒன்றை வழங்கியுள்ளார்.**

அப்பேட்டியில் அவர் கூறியுள்ளதாவது: "இந்தப் பயணத்தின்போது, அமெரிக்காவில் இலங்கைப் பிரச்சனை குறித்து கவனிக்கின்ற அமெரிக்க அதிகாரிகளுடன் உரையாட விரும்பினேன்.

அக்டோபர் 7ம் திகதி பிற்பகல் 2 மணி அளவில் 'ஸ்டேட் டெஸ்க்' இல் இலங்கை, இந்தியா குறித்து கவனிக்கும் அதிகாரிகள் மூவரைச் சந்தித்து இரண்டரை மணி நேரம் கருத்துப் பரிமாற்றம் செய்யக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது.

அவர்களிடம் தமிழீழப் போராட்ட நியாயங்களையும், தமிழீழம் என்பது எப்படி தவிர்க்க முடியாதது என்பதனையும் விரிவாக விளக்கினேன்.

இலங்கை அரசாங்கம் பொய்ப் பிர சாரத்தைக் கட்டவிழ்த்துவிடுகின்ற அதே வேளையில், மனித உரிமைகளை எப்படி யெல்லாம் மீறுகிறது என்பதையெல்லாம் பட்டியலிட்டு விளக்கினேன்!" என்று கூறினார்.

### அகண்ட தமிழகம்?

விடுதலைப் புலிகள் குறித்தும் அமெரிக்க அதிகாரிகளுடன் பேசினீர்களா? என்ற கேள்விக்கு வை.கோ பதிலளிக்கும்போது,

"அகண்ட தமிழகம் என்கின்ற கருத்திலே விடுதலைப் புலிகள் இருக்கிறார்களா? தமிழ கத்தையும் பிரிக்க அவர்கள் முயலுகிறார் களா? என்று கேட்டார்கள்.

நான் சொன்னேன், இலங்கை அரசு இத்தகைய பொய்ப் பிரசாரத்தைக் கட்ட விழ்த்துவிட்டுள்ளது. இந்தியாவில்கூட இத் தகைய பிரசாரம் திட்டமிட்டு செய்யப்படு கிறது என்று சொன்னேன்.

இலங்கையில் ரோமானிய அடிமைகள் போல நடத்தப்பட்ட தமிழ் தேசிய இனமக்கள் தங்கள் தேசிய உரிமைக்காக ஆயுதம் ஏந்தினர். ஆனால் தமிழகத்தில் அந்த நிலை இல்லை.

இந்தியாவில் தமிழுக்கும், தமிழர்களுக்கும் இன்னும் கூடுதல் உரிமை தேவை என்று கோரி அரசியல் ரீதியாகப் போராடிவரு கிறோம். இந்திய ஒருமைப்பாட்டை ஏற்றுக் கொண்டுதான் அரசியல் நடத்தி வருகிறோம் என்று சொன்னேன்.

### ஐ.ஆர்.ஏக்கு ஆதரவு

நீங்கள் எப்படி வட அயர்லாந்தில் இருக்கக்கூடிய கத்தோலிக்கர்களுக்கு, வட அயர்லாந்தில் போராடக்கூடிய ஐரிஷ் வழி வந்தவர்களுக்கு, அமெரிக்காவில் இருக்கிற ஐரிஸ் வம்சாவழியினர் (கிளின்ரன் உட்பட) ஆதரவு தெரிவிக்கிறீர்களோ, அது போலத் தான் இந்தியத் தமிழரும் தமிழீழ மக்களுக்கு ஆதரவு தெரிவிப்பது நியாயம்தானே என்று கூறினேன்.

அது மட்டுமல்ல ஐரிஸ் குடியரசு படையினர் (ஐ.ஆர்.ஏ.) பல படுகொலைகளைச் செய்துள்ளனர். மௌண்ட் பேட்டனை கொலை செய்தது, மார்க்ரெட் தட்சரை கொலை செய்ய முயற்சித்தது போன்றவை களை செய்துள்ளனர்.

அப்படியான ஐ.ஆர்.ஏ. இயக்கத்துக்கு எல்லாவிதமான தகவலும் வெள்ளை மாளிகையில் இருந்து தரப்பட்டது என்பதை வெள்ளை மாளிகை அதிகாரிகளே ஒப்புக் கொண்டுள்ளனர். இப்படியான சூழலில் ஈழத் தமிழர்களுக்கு நாங்கள் தரும் ஆதரவு இயற்கைதானே என்றேன்.

### அதிகாரி கூறிய பதில்

அதற்கு பின்பு, ஈழத் தமிழர்களுக்கும் புலிகளுக்கும் தமிழ்நாட்டில் ஆதரவு இல்லை யாமே? என்று கேட்டனர்.

அதுவும் தவறென்று எடுத்து விளக்கி னேன். தமிழ் இளைஞர்கள், தமிழர்கள் மனதில் நீறுபூத்த நெருப்பாக இருக்கிறது. உரிய நேரத்தில் வெடிக்கத்தான் போகிறது என்பதையும் சொன்னேன்" என்றும் வை.கோ. தெரிவித்திருக்கிறார்.

சர்வதேச மனித உரிமைக் கமிஷன், இலங்கை அரசின் மனித உரிமை மீறலை எப்படிப் பார்க்கிறது? என்ற கேள்விக்குப் பதிலளித்த வை.கோ: "ஜெனிவாவில் உள்ள மனித உரிமை கமிஷனில் ஈழத் தமிழர் பிரச் சனையை பதிவு செய்ய எண்ணினேன். சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரி களைச் சந்தித்தேன்.

"இந்த அரங்கத்தில் காலடி எடுத்து வைக்கும் முதல் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் நீங்கள்தான்" என்று கூறினார்கள்.

ஏறத்தாழ ஒன்றரை மணிநேரம் உரை யாடினேன். பலாலி சம்பவங்கள், நவாலி புனித பீட்டர் தேவாலய சம்பவங்கள் பற்றி எடுத்துக் கூறினேன். இவற்றை உலகின் பார்வைக்குக் கொண்டுவந்தது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்தான். அதனால் சர்வ தேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரியையே அரசு நாட்டைவிட்டு வெளியேற்றிவிட்டது என்று கூறினேன்.

இதனையெல்லாம் கேட்டுக் கொண்டி ருந்த அந்த அதிகாரி கூறினார்: **"நவாலி படுகொலையை உலகுக்கு தெரியப்படுத்தி, அரசால் கண்டிக்கப்பட்டு, வெளியேற்றப் பட்ட அதிகாரி நான்தான்!"** என்று. இதனால் என் வேலை அங்கு சுலபமாகிவிட்டது!" என்றும் வை.கோ. கூறியுள்ளார்.

# ஒட்டுசுட்டானில் பாதுகாப்பரண்கள்

## படை நகர்ந்தால் எதிர்கொள்ள ஆயத்தம்!

(நமது நிருபர்)

ஒட்டுசுட்டான் பகுதியில் தற்போது படையினர் நிலைகொண்டுள்ளனர். இங்கி ருந்து படையினர் குழுவாக இரவு நேரங்களில் காடுகள்- வயல்கள் வழியாக அடுத்த கிராமமான முள்ளியவளைக்கு சென்று வந்தனர்.

இதனையடுத்து அப்பகுதியில் பலமான காப்பரண்களை புலிகள் நிறுவியுள்ளனர். பீரங்கிப் படையணியும் அப்பகுதியில் நிறுத்தப்பட்டுள்ளது.

வடமேல் மாகாணசபைத் தேர்தல் நடைபெற உள்ளதால், அதற்கான பரபரப்பு நடவடிக்கையாக நகர்வு ஏதாவது மேற்கொள் ளப்படலாம் என்றும் புலிகள் எதிர்பார்த்தே, காப்பரண்களை அமைத்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

அண்மையில் நெடுங்கேணி வீதியில் நடைபெற்ற கிளைமோர் தாக்குதலும் புலி களை உஷார்படுத்தியுள்ளது.

படையினரும் குழுக்களாக இரவில் தமது நிலைகளில் இருந்து முன்னேறி நடமாடுவதை அவதானித்த புலிகள், அந்த நடமாட்டங் களைக் கட்டுப்படுத்தவும் காப்பரண்களை நிறுவி கண்காணிப்புக்களை அதிகப்படுத்தி யுள்ளனர்.

### யாழில் எச்சரிக்கை

கூட்டணி யாழ் மாவட்ட அமைப்பாளர் மதிமுகராசா கொல்லப்பட்டதையடுத்து உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு 'தமிழின விடுதலை விரும்பிகள்' என்ற பெயரில் எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பப் பட்டுள்ளது தெரிந்ததே.

யாழ் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டி யிட வேண்டாம் என்று பிரசுரம் வாயிலாக இப் பெயரிலேயே முன்பு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. தேர்தல் முடிந்த பின்னரும் இந்த அமைப்பின் பெயரிலேயே எச்சரிக்கைகள் அனுப்பப்பட்டு வந்தன.

இதேவேளை யாழில் பொதுமக்களிடம் இலஞ்சம் பெறும் கிராம சேவையாளர்கள் உட்பட பல அதிகாரிகளுக்கு புலிகளால் எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள் ளன.

# உணவு லொறி தாமதம்

## மழைதான் காரணமா?

(நமது நிருபர்)

வன்னிப் பகுதிக்கு உணவு அனுப்புவ தில் இழுத்தடிப்பும், அலட்சியமும் தொடர் கிறது.

வன்னிக்கு டிசம்பர் மாதத்தில் 125 லொறிகளில் உணவுப் பொருட்கள் அனுப்பப் படவேண்டி இருந்தது.

04.01.99 அன்று 15 லொறிகள் வன்னிக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இதுபற்றி செய்தி தெரிவித்த வவுனியா செயலக வட்டாரங்கள், கடும் மழை காரணமாக லொறிச் சேவை பாதிக்கப்பட்டிருந்தது என்று கூறியுள் ளன.

இது ஏற்கமுயாத காரணமாகும். வன்னியில் அடைமழை 27.12.98 அன்றுதான் ஆரம்பித்தது. அதாவது டிசம்பர் மாதக் கடைசியில் ஆரம்பித்தது.

டிசம்பர் மாதத்துக்கான உணவை அனுப்பிவைக்க அந்த மாதக்கடைசி வரை காத்திருப்பானேன்? அதுமட்டுமன்றி டிசம்பர் மாத இறுதிவரை வாகனப்போக்கு வரத்து நடக்கக்கூடிய சாத்தியம் இருந் தது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து ஆம்புலன்ஸ் வண்டிகூட வவுனியா வுக்கு வந்துள்ளது.

வவுனியா செயலக வட்டாரங்கள்தான் தாமதத்துக்குக் காரணமா? இல்லையெனில் யார் காரணம்? அசிரத்தையை மறைக்க மழைமீது பழிபோடுவானேன்? இப்படி பல கேள்விகள் எழுந்துள்ளன.

இனிமேல்தான் லொறிகள் ஓடமுடியாத் வெள்ள நிலை ஏற்படக்கூடும். அப்படியொரு நிலை ஏற்பட்டால் வன்னி மக்களின் பட்டினிக்கு டிசம்பர் இறுதிவரை தாமதம் செய்தவர்களே பொறுப்பாவர்!

# இராணுவ உதிரிப்பாகங்களா?

## வெளிநாட்டு சிகரெட் வகைகளா?

சிறிலங்கா இராணுவத் தொடர்புச் சாதனங்களுக்குரிய உதிரிப்பாகங்கள் என்ற பெயரில் வெளிநாட்டு சிகரெட்டுகளை இறக்கு மதி செய்தமை தொடர்பாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்கு இராணுவ அதி காரிகள் சிலரும் உடந்தையாக இருந்தது தெரிய வந்துள்ளது.

துபாயிலிருந்து கொள்கலன்களில் டிசம்பர் 18ம் திகதி விமானமூலம் வந்திறங்கிய பொருட்கள் சுங்க அதிகாரிகளுக்குச் சந்தே கத்தை ஏற்படுத்தவே அவற்றைப் பரிசீலித்த போதுதான் உண்மை வெளிப்பட்டுள்ளது.

இராணுவத்துக்குரிய பொதிகள் என்று கணக்கிடப்பட்டவை வெளிநாட்டு உயர்தர சிகரெட்டுகளை உள்ளடக்கியதாகக் காணப் பட்டன. தனிப்பட்ட முதலாளிகள் சில இரா ணுவ அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இத் தகைய இறக்குமதிகளை கடந்த இரண்டு வருடங்களாகச் செய்து வந்துள்ளனர்.

இந்த இறக்குமதியுடன் தொடர்புடைய இராணுவத்தைச் சேர்ந்த கோர்ப்ரல் ஒருவர் கொழும்பு நகரின் சுற்றுவட்டாரத்தில் பல இலட்சக்கணக்கான ரூபா செலவில் இரண்டு மாடிக் கட்டடத் தொகுதி ஒன்றையும் நிர்மாணித்துள்ளாராம்.

இராணுவ சார்ஜன்ட்டும் கோர்ப்ரலும் மேஜர் ஜெனரல் சி.எஸ்.வீரசூரியவின் கையெ ழுத்தை மோசடியாக இட்டு, இந்த இறக்கு மதிகளை ஏற்பாடு செய்துள்ளனர். சார்ஜன்ட் தற்பொழுது கைது செய்யப்பட்டு விசா ரணைகள் நடைபெற்று வருகின்றன. கோர்ப் ரல் தனது பதவியைவிட்டு வெளியேறித் தலைமறைவாகிவிட்டார்.

இது இவ்வாறிருக்க, கொழும்பை அடுத் துள்ள மகாறகமையில் வட்டிக்குப் பணம் கொடுப்பவரின் பணப் பரிமாற்றங்கள் பற்றிய சந்தேகங்கள் எழுந்துள்ளன. இவர் பல இலட்சக்கணக்கான ரூபாய்களை பலருக்கும் வட்டிக்குக் கொடுத்து வந்துள்ளார் என்ற உண்மை புலப்பட்டது.

துப்பறியும் நிபுணர்களின் விசாரணை யின் பின்னர், இவர் வட்டிக்குக் கொடுக்கும் பணம், இராணுவத்திலிருந்து அண்மையில் ஓய்வுபெற்ற பிரிகேடியருக்குச் சொந்த மானது என்று தெரியவந்தது. வட்டிப் பணத்தை அறவிட்டு இவர் பிரிகேடியருக்குக் கொடுத்து வந்தாராம்.

# உடன்பாட்டால் பயன் உண்டா?

## உள்நாட்டு உற்பத்தியாளர் சந்தேகம்

இந்தியாவுடன் சிறிலங்கா அரசு செய்து கொண்டுள்ள சுதந்திர வர்த்தக உடன் படிக்கை எந்தவகையிலும் இலங்கைக்கு சாதகமாக அமையப்போவதில்லை என்று உள்நாட்டு உற்பத்தியாளர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர். இதனால் தெற்காசிய நாடுகளிலும் சிக்கல் தோன்ற வாய்ப்புள்ளது என்றும் கூறப்படுகிறது.

இருநாடுகளுக்குமிடையில் ஏற்படுத்தப் பட்டுள்ள உடன்படிக்கையில் என்ன விவரங் கள் அடங்கியுள்ளன என்பதும் இதுவரை தெளிவாகத் தரப்படவில்லை என்று வர்த்தக சபைகளினதும் தொழிற் கூடங்களினதும் சம்மேளனத்தின் தலைவர் பற்றிக் அமரசிங்க கருத்துத் தெரிவித்துள்ளார். இவ்வுடன் படிக்கை பற்றி தங்களிடம் முன்கூட்டியே தகவல் தரவோ அல்லது ஆலோசனை பெறவோ இல்லை என்றார் அவர்.

கடந்த காலங்களில் இந்தியாவிலிருந்து இலங்கைக்குத்தான் அநேகமான இந்தியப் பொருட்கள் ஏற்றுமதியாயின. இலங்கையி லிருந்து இந்தியா இறக்குமதி செய்வதற்கான பொருட்கள் மிகவும் குறைவானவையே.

பொதுவாக இலங்கையிலிருந்து இந்தியா வுக்குத் தேவைப்படும் பொருட்கள் மிகக்குறை வானவையே; இதனால் இலங்கைக்கு இந்த உடன்படிக்கையினால் எதிர்பார்த்த பலன் கிடைப்பது துர்லபமே, என்று இலங்கையின் பொருளாதார நிபுணரான டாக்டர் ஜே.பி.கெலேகம கருத்து வெளியிட்டுள்ளார்.

தொழிற்துறையிலும் உற்பத்தியிலும் இலங்கையைவிட பல மடங்கு இந்தியா முன்னணியில் நிற்கிறது. தவிர இந்தியாவில் மூலவளங்களும் ஏராளமாக உள்ளன. இதனால் இவ்வுடன்படிக்கையினால் இந்தியாவே நன்மை அடையும் என்று வர்த்தகத்துறையினர் சுட்டிக்காட்டியுள் ளனர்.

> வடக்கு-கிழக்கிலும்
> நாடெங்கும்
> பொழிந்த மழையின்
> பெரு வெள்ளத்தால்
> பாதிக்கப்பட்ட
> மக்களுக்கு
> 'முரசு' தன் அனுதாபத்தை
> தெரிவித்துக்கொள்கிறது.
> அவர்கள் துயரங்களில்
> முரசும்
> பங்காளியாகிறது.
> -ஆசிரியர் பீடம்-

# யாழில் நடந்த மரணச்சடங்கு

## சம்பந்தன் கலந்து கொள்ளவில்லை!

யாழ்ப்பாணத்தில் கூட்டணிப் பிரமுக ரான மதிமுகராசாவின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள அக் கட்சியின் தற்போதைய தலைவர் சம்பந்தன் மறுப்புத் தெரிவித்து விட்டதாகக் கூறப்படுகிறது.

மதிமுகராசா மரணமானதை அறிந்த தும் இந்தியாவில் இருந்த ஆனந்தசங்கரி உடன் கொழும்பு திரும்பி, விமானப்படை விமானத்தில் யாழ்ப்பாணம் சென்றார்.

ஆனால் இரா.சம்பந்தனை இறுதிச் சடங்கில் கலந்துகொள்ளுமாறு கூட்டணிப் பிரமுகர்கள் வற்புறுத்தி அழைத்தும்கூட அவர் மறுப்புத் தெரிவித்துவிட்டார்.

இதற்கு முன்னதாக முன்னாள் மேயர் சிவபாலனின் மரணச் சடங்கில் கலந்து கொள்ளவும் சம்பந்தன் மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிவபாலன், மதிமுகராசா போன்றோ ரின் மரணம் தொடர்பாக கட்சித் தலைவர் என்ற ரீதியில் சம்பந்தன் எக்கருத்தையும் கூறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. ஆனந்தசங்கரி மட்டுமே கருத்துக்கள் கூறி வருகிறார்.

தமது உறுப்பினர்களின் மரணம் தொடர் பாக பத்திரிகைகளை ஆனந்தசங்கரி திட்டித் தீர்த்துள்ளார்.

தமது கட்சித் தலைவரே பலியான உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்த செல்ல மறுத்ததைப் பற்றி ஆனந்தசங்கரி என்ன கூறப்போகிறார்?

கூட்டணியின் முக்கிய பிரமுகரான மாவை சேனாதிராஜாவும் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளவில்லை. அவர் இந்தியாவில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

# நள்ளிரவில் நோயாளி இருந்த மாட்டு வண்டிமீது சூடு

## விளக்கு வெளிச்சத்தைக் கண்டு சுட்டனர்-ஒருவர் பலி!

மட்டக்களப்பு-ஏறாவூர் ஆறுமுகத்தான் குடியிருப்பில் நோயாளியை ஏற்றிய மாட்டு வண்டிமீது சோதனை அரணில் இருந்த பொலிஸார் சுட்டத்தில் ஒருவர் பலியானார்.

கொல்லப்பட்டவர் நா.சபாநாயகம் (49) என்பவராகும். ஆஸ்த்மா நோயால் அவதிப் பட்ட க.விஜயராணி (25)என்பவரை மாட்டு வண்டியில் ஏற்றி ஒரு விளக்கைப் பற்றவைத் துக் கொண்டு ஏறாவூர் ஆஸ்பத்திரியை நோக்கி வரத் தயாரானபோதே துப்பாக்கிச் சூடு இடம் பெற்றுள்ளது. அந்த இடத்திலேயே அவர் பலியானார். கூடவே உதவிக்கு நின்றி ருந்த அயலவரான இ.இராஜேந்திரம் (38) என்பவர்மீதும் துப்பாக்கிச் சூடுபட்டு மோச மான காயங்களுக்குள்ளானார்.

அதனால் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப் புறப்பட்ட ஆஸ்த்மா நோயாளியைக் கைவிட்டு துப்பாக்கிச் சூடு பட்டு வீழ்ந்தவர் மடிய, காயப்பட்டுத் துடித்துக் கொண்டி ருந்தவரைக் கொண்டு செல்ல வழிதேடி, மைலம்பாவெளி படை முகாமுக்கு ஓடினர். அங்குள்ள படையினர் இரக்கப்பட்டு ஏறாவூர் பொலிஸ் நிலையத்திற்கு நிலைமையை விளக்கினர்.

பின்னர் ஏறாவூர் பொலிஸ் சாவடியைத் தவிர்த்து முஸ்லிம் மக்கள் வாழும் ஊர்ப் பகுதிக்கூடாகக் காயப்பட்டவர் எடுத்து வரப்பட்டு அதிகாலை மூன்று மணியளவில் ஏறாவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார். அதன் பின்னரே ஆஸ்த்மா நோயாளி வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டார்.

இச்சம்பவம் 04.01.99 அன்று பகல் நள்ளிரவு 12.40 க்கு இடம் பெற்றது. அன்று 2.30 க்கு படை, பொலிஸ் உயரதிகாரிகள் மரண வீட்டுக்குச் சென்று நடந்தவற்றை விசாரித் தறிந்தனர்.

# மண்சரிவு, இடம் பெயர்வு, உடைமை அழிவு!

## வடக்கு-கிழக்கு உட்பட பல பகுதிகள் பாதிப்பு!

சென்ற மாத இறுதிச் சில தினங்களிலி ருந்து தொடர்ந்து பெய்துவரும் பெரு மழையினால் வடக்கு-கிழக்கு உட்பட நாட் டின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கிப் பாதிக்கப்பட்டுள்ளன.

மலையகப் பகுதிகளில் மண்சரிவு ஏற் பட்டதால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள் ளன. போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது. பொத்துவில், அம்பாறை, மட்டக்களப்பு, பொலன்னறுவை, திருமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பலத்த மழை காரணமாக வெள்ள நீர் அதிகரித்த தால் தாழ்ந்த பிரதேசங்களில் உள்ள பல குடும்பங்கள் இடம் பெயர்ந்து அகதிகளாகி யுள்ளன. மகாவலி கங்கை பெருக்கெடுத்த தால் கொழும்பு-மட்டக்களப்பு வீதியில் மன்னம்பிட்டிப் பிரதேசம் 5 அடிக்கு மேலான வெள்ளநீரால் கரை புரண்டு ஓடியது. கிழக்கு மாகாணப் போக்குவரத்துத் தடைப்பட்டது. பெருமளவில் பயிரழிவுகளும் ஏற்பட்டுள்ளன.

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் ச.தர்மலிங்கம் (28) என்பவர் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டு மரணமானார். மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக மின்சாரமும் இல்லாத நிலையில் எரிபொருளுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவி வருகிறது. பலபொருட் களுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது.

# குடும்பமாது கொலை

## சுட்டது யார்?

யாழ் குடாநாட்டில் மூன்று பிள்ளை களின் தாயான குடும்பப் பெண் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

29.12.98 அன்று இவரது வீட்டுக்குச் சென்ற புலிகள் விசாரணைக்காக அழைத் துச் சென்றனர்.

அப்பகுதியில் புலிகளது நடமாட்டங்கள் தொடர்பான தகவல் படையினருக்கு கொடுத் தது பற்றியே இவர் விசாரிக்கப்பட்டார்.

பின்னர் சனசமூக நிலையம் அருகே வைத்து இவரைச் சுட்டுக் கொன்றனர்.

சந்திரசேகரம் செல்வமலர் (36) என்னும் பெண்மணியே கொல்லப்பட்டவராவார். படை யினருடன் தொடர்பு வைத்திருந்து, தகவல் கொடுத்ததற்காகவே மரண தண்டனை வழங் கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


படிப்பகம்

www.padippakam.com

# புதிய அஞ்சலகக் கட்டடம்

## 37 இலட்சம் ஒதுக்கீடு

(திருமலை நிருபர்)

திருகோணமலை நிலாவெளியில் புதிய அஞ்சல் அலுவலகக் கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்படவிருக்கிறது. இக் கட்டடம் அஞ்சல் அதிபருக்கான விடுதியையும் கொண்டதாக இருக்கும்.

திருகோணமலை அஞ்சல் அத்தியட்சகர் திரு. நல்லதம்பியின் முயற்சியின் பலனாக கிழக்குப் பிராந்திய பிரதி அஞ்சல்மா அதிபர் திரு. ஆர்.தியாகலிங்கத்தின் வேண்டுகோளின் பேரில் தபால், தொலைத்தொடர்புகள் பிரதி அமைச்சர் திரு.ஹிஸ்புல்லாவினால் இதற்கென முப்பத்தேழரை இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

புதிய கட்டடம் அமைப்பதற்காகக் குச்சவெளி பிரதேச சபை பதினேழு பேர்ச் காணியை அஞ்சல் திணைக்களத்துக்கு இலவசமாக வழங்கியுள்ளது. தற்போதுள்ள நிலாவெளித் தபாலகம், திணைக்களத்துக்குச் சொந்தமில்லாத கட்டடத்திலேயே இயங்கி வருகின்றதென்பதும் குறிப்பிடத்தக்கது. கட்டட வேலைகள் விரைவில் ஆரம்பமாக உள்ளன.

இவ்வாறிருக்க ஆலங்கேணி, அண்ணல்நகர், வானாறு ஆகிய உபதபாலகங்களுக்குத் தொலைபேசி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# சினிமாவுக்கு அலைமோதும் கூட்டம்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களாக மின்சாரம் புலிகளால் துண்டிக்கப்பட்டுள்ளபோதிலும் ஜெனரேற்றர் மூலமான மின்சார உதவியால் உல்லாசப் பொழுதுபோக்குகள் களை கட்டுகின்றன.

சினிமாத் திரையரங்குகளும், படக் கொட்டகைகளும் இரசிகர் கூட்டத்தால் நிரம்பி வழிவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

சென்ற கிறிஸ்மஸ் தினத்தன்று மட்டக்களப்பு இராஜேஸ்வரா படமாளிகையில் 'அரவிந்தன்' எனும் திரைப்படம் காண்பிக்கப்பட்டது. இந்தப் படத்தைப் பார்ப்பதறகென தூர இடங்களிலிருந்தும் கார்,வேன், ஓட்டோ வண்டிகள் சகிதம் சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இரசிகர் கூட்டம் படையெடுத்தது. டிக்கற் ஏற்கனவே தீர்ந்துவிட்டதால் ஏராளமான இளைஞர்களும், இளைஞிகளும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

தரையில் அமர்ந்து கொண்டும், நின்று கொண்டும்கூட படம் பார்ப்பதற்கு இளைஞர்களும், இளைஞிகளும் சித்தமாயிருந்தனர். முதியவர்கள்கூட புதிய திரைப்படங்களைப் பார்க்கும் ஆவலை இலேசில் விட்டு வைக்கவில்லை என்பதை அங்கு முண்டியடித்த இரசிகர் கூட்டத்தைப் பார்த்த போது அவதானிக்க முடிந்தது.

# சுவிஸில் திரண்ட நிதி

## பெரியார்தாசன், தியாகு பங்கேற்பு



சுவிஸில் மாவீரர் தினத்தை முன்னிட்டு 5.12.98 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் நிதி சேகரிப்பும் நடைபெற்றது. நிதியளிக்க சுவிஸ் தமிழர்கள் முண்டியடித்தனர். மொத்தம் 5 இலட்சத்து 43 ஆயிரம் சுவிஸ் பிராங்குகள் புலிகளுக்கான நிதியாகச் சேர்ந்தது. இலங்கைப் பெறுமதியில் சுமாராக இரண்டு கோடியே 71 இலட்சம்.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள தமிழ் நாட்டிலிருந்து பெரியார்தாசன், (கண்ணாடி அணிந்திருப்பவர்) தியாகு ஆகியோர் சென்றிருந்தனர். இருவரும் மேடையில் கௌரவிக்கப்பட்ட காட்சியையே படத்தில் காண்கிறீர்கள்.

பெரியார்தாசன் 'கருத்தம்மா' உட்பட பல படங்களில் நடித்தவர். தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகளை பிரசாரப்படுத்தி வருபவர்.

தியாகு இந்திய பாட்டாளிவர்க்க போராட்டத்தில் பல ஆண்டுகள் சிறையில் இருந்தவர். சிறையில் இருந்தபோது ஒப்பற்ற காரியம் ஒன்றைச் செய்திருந்தார். கார்ல் மார்க்ஸ் எழுதிய மூலதனம் நூலை தமிழில் மொழிபெயர்த்து முடித்தார். தற்போது ஐந்து பாகங்களாக தமிழில் வெளியாகியுள்ளது.

திலீபன் மன்றத் தலைவராகவும் இருப்பதோடு, தனித் தமிழ் பள்ளி நடத்தி சிறுவர் சிறுமிகளுக்கு கல்வி கற்பித்து வருகிறார்.

மூலதனம் நூலை மொழிபெயர்த்து தியாகு கூற, அதனை குறிப்பெடுத்தவர் பெயர் லெனின். தியாகுவின் சிறைத் தோழரான லெனின் இப்போது உயிருடன் இல்லை.

சிறையில் இருந்து விடுதலையான பின்னர் தமிழ்நாட்டில் தமிழர் விடுதலைப் படையின் குண்டுத் தாக்குதல் ஒன்றுக்குச் சென்றபோது, குண்டு தற்செயலாக வெடித்ததில் லெனின் இறந்துபோனார்.

# இலக்கிய நிகழ்வு

பாரிஸிலிருந்து தினந்தோறும் வெளிவந்துகொண்டிருக்கும் 'சுட்டு விரல்' பத்திரிகையின் ஆதரவில் மக்கள் எழுத்தாளர் எஸ். அகஸ்தியர் அவர்களின் மூன்றாவது ஆண்டு நினைவும் நூல் வெளியீடும் 107 AVENUE GABRIL PREL SAINZOUEN. முகவரியில் 13.12.1998 ஞாயிறு மாலை 4 மணியளவில் நடைபெற்றது. இவ் விழாவில் புலம் பெயர்ந்து வாழும் இலக்கிய நண்பர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.


BRIGHT NEW METHOD

SPOKEN ENGLISH

பேச்சு ஆங்கிலம்

தபால் மூலமும் நேரிலும் நடைபெறும்



ஆங்கிலம் பேச வேண்டும் என்று விருப்பம்

ஆனால்......

ஏதாவது தவறாகப் பேசி விடுவோமா என்ற தயக்கம், பயம்.

மற்றவர்கள் ஆங்கில மொழியைப் பேசும் போது புரிந்து கொள்ள முடிகிறது

ஆனால் பேசும் போது தயக்கம்

இது தானே உங்கள் பிரச்சினை

கவலையை விடுங்கள்!

மிக குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் பேசப் பழக முடியும் நேரில் கற்க விரும்புவோர் தொலைபேசி மூலமோ, நேரிலோ தொடர்புகொள்ளவும். தபால்மூலம் கற்க விரும்புவோர் கீழ்க்காணும் விண்ணப்பப்படிவத்துடன் சுயவிலாசமிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்ளவும்.

பெயர்: ....................

விலாசம்: ....................

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S- 27 FIRST FLOOR, COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX. P.O. BOX NO: 162, COLOMBO - 11 TELE: 434770, 074 - 718592



மனோதத்துவ வைத்தியம்

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களை

வவுனியாவில் ஜனவரி 10,11,12,13ம் திகதிகளில் சந்திக்கலாம்

(முன்கூட்டியே பதிவுசெய்யவும்)

(HOTEL VASANTHAM), கண்டி வீதி, வவுனியா. T.P.024-22583, 024-22366

கொழும்பில் ஜனவரி 24 முதல் 31 வரை சந்திக்கலாம்

Dr. P.Arumugam S.A.M.P. REG.9492

BEAUTY LODGE, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.

(5 லாம்புச் சந்தியிலிருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது) (ஆட்டுப்பட்டித் தெரு) T.P:- 338165-338166

கொழும்பு நாட்கள் மட்டும் செல்டெல் No. 072-609388

கல்முனையில் பெப்ரவரி 6,7ம் திகதிகளில் சந்திக்கலாம்

T.M.M. பார்மசி-கல்முனை. T.P. 067-29329

கடிதத்தொடர்பு:- Dr. P.Arumugam S.A.M.P.

No. 33, Tissa Weerasingam sq, Boundary Road, Batticaloa . SRI LANKA.



O/L மாணவர்களுக்கு!!!

* குறும் கால தொழிற்கல்விகள்
* தமிழ், சிங்கள, ஆங்கில மூலம்

பாடநெறிகள்

Δ DIPLOMA IN COMPUTER STUDIES
Δ DIPLOMA IN MICROSOFT OFFICE
Δ DIPLOMA IN PROGRAMMING
Δ AAT (LONDON) Δ IABK (LONDON)
Δ SPOKEN ENGLISH COURSE

ஆரம்பம் 18 01 1999

(எல்லா பாடநெறிக்கும் ஆங்கில பாடநெறி இலவசம்)

MICS 3 வருடகாலமாக வெற்றி நடை போடும்....

36, 2nd Cross Street, Puttalam. ☎ 032-65370



அஸ்மா நோய்க்கு வைத்தியம்

* தொய்வு
* இளைப்பு
* மூச்சுத்தட்டல்
* சளி
* தலைவலி
* இழுப்பு
* மாய்ச்சல்
* இருமல்
* மூக்கடைப்பு
* தும்மல்
* பீனிசம்

போன்ற குணங்களுக்கு முழு சுகமடைய உடலுக்கு பாதுகாப்பான, பக்க விளைவுகள் அற்ற மருந்துகளைக் கொண்டு கிரந்தியான, குளிரான, சமிபாடு அடையாத உணவுகளை உண்ணுதல் மற்றும் குளித்தல் போன்ற பல விளக்க முறைகளுடன் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ஒருமுறை வைத்தியம் செய்து பாருங்கள் பலன் தெரியும்.

30.10.97 வீரகேசரி - தினக்குரல் பேப்பரில் வெளிவந்தது.

அஸ்மா நோயைக் குணப்படுத்திய டாக்டருக்கு நன்றி

பலவருடங்களாக இரவு பகலாக நித்திரையின்றி அமைதியின்றி அஸ்மாவால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்த நான் தற்சமயம் இல.25, சென் சில்வெஸ்டர் றோட், கல்கிசையிலுள்ள அஸ்மா சிகிச்சை நிபுணர் Dr சுறாஜ் சோமசுந்தரம் அவர்களிடம் சிகிச்சை பெற்ற பின்னர் பூரண சுகமடைந்து மறுபிறவி எடுத்துள்ளேன் என்பதனை இந்நோயால் கஸ்டப்படும் பிறருக்கு தெரிவிப்பதன் மூலம் டாக்டருக்கு எனது நன்றிக்கடனைச் செலுத்துகின்றேன். இப்படிக்கு ராஜ் பொன்னன்டோ 156/44, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு-13.

டாக்டர் சுறாஜ் சோமசுந்தரம்

அஸ்மா சிகிச்சை நிபுணர்

Ph.DH(Ind), M.B.B.SCH (Cey)
Govt. Reg. No : A 1553 (1970)

25, சில்வெஸ்டர் வீதி, கல்கிசை மவுண்ட்லேவினியா - (கொழும்பு)

(பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் ஓடியன் தியேட்டர்)

தினமும் மாலையில் 4மணிமுதல் 7மணிவரை

02.05.98 வீரகேசரி பேப்பரில் வெளிவந்தது.

அஸ்மா நோயைக் குணப்படுத்திய டொக்டருக்கு நன்றி

பலவருடங்களாக அஸ்மா நோயினால் மிகவும் கஷ்டப்பட்டு மூன்று நேரமும் மருந்துகள் பாவித்தும் நேர காலமின்றி அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்து நடக்கவும் முடியாத நிலையில் சென்ற என்னை 25, சில்வெஸ்டர் வீதி, மவுண்ட்லேவினியா (கல்கிசை) இல் வைத்தியம் செய்யும் அஸ்மா சிகிச்சை நிபுணர் Dr. சுறாஜ் சோமசுந்தரம் அவர்கள் சிகிச்சை அளித்து முழுக்குணமடைய வைத்துள்ளார். பல மாதங்களாக மருந்தே பாவிக்காமல் ஒருகாலத்தில் இப்படியான நோயாளியாக இருந்தேனா என்ற நினைப்புக்கூட இல்லாமல் சந்தோஷமா இருக்கிறேன் என்பதை இந்நோயால் கஷ்டப்படும் பிற நோயாளர்களுக்கு அறிவிப்பதன் மூலம் என் கண் கண்ட தெய்வமான டொக்டருக்கு நன்றியைத் தெரிவிக்கிறேன். க. மகேஸ்வரி 221/6 நாயககந்த வீதி, ஹெந்தலை, வத்தளை. TP 933012

தூர மாவட்டத்தில் உள்ள நோயாளர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு தொலைபேசி மூலம் பதிவு செய்தால் காலை நேரங்களிலும் பார்வையிடப்படும். சனி, ஞாயிறு, விடுமுறைநாட்களில் நோயாளர்கள் அதிகம் இருப்பதினால் புதிய நோயாளர்கள் தொலைபேசி மூலம் பார்வையிடப்படும் நாளையும் நேரத்தையும் பெற்று வரவும்.

☎ 074-201582



விளம்பரப் பகுதி

G.C.E. (A/L)-2000

மேற்படி பரீட்சையில் 3ஏ சித்திபெற்றாலும் பொதுச் சாதாரண (பொது அறிவுப்) பரீட்சையில் சித்தியடையாவிட்டால், பல்கலைக்கழகம் செல்ல முடியாது என்பதை அறிந்துள்ளீர்களா? இதற்காக உங்களுக்கென்றே விசேடமாக உருவமைக்கப்பட்ட தபால் மூல கற்கை நெறியில் இணைந்து சிறப்புச் சித்தி பெறுவதை விரும்புகிறீர்களா? (ஆசிரியர், எழுதுவினைஞர் தெரிவுப் போட்டிப் பரீட்சை போன்றவை எழுதவுள்ளவர்களுக்கும் இதில் சேர்ந்து பயன்பெற முடியும்) இலவச மேலதிக விளக்கங்களுடன், சுய முகவரி எழுதப்பட்ட முத்திரை ஒட்டிய கடிதவுறையொன்றை உடன் அனுப்பி பெற்றுக் கொள்ளுங்கள்.

M.I. Abdul Jaleel B.Sc.

"Riffa Nest", Sammanthurai-02

Tel: 067-60368



மலையாள மாந்திரீகம்



மலையாள மாந்திரீகத்தில் எண்ணங்களை எண்ணிய வாறு மின்சார வேகத்தில் வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வெற்றிபெற்றவர்கள் எத்தனை எத்தனையோ. இனி உங்கள் குறை என்ன. கணவன் மனைவி பிணக்கா. காதல் தோல்வியா. பிரயாணத் தடையா. இன்னும் அனேக குறைகளுக்கு உங்கள் பிறப்பு திகதியுடன் தொடர்பு கொள்ளவும். வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகள் இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே ஏற்றுக் கொள்ளப்படும். தேவை எனில் உலக மாந்திரிக ஜோதிட சக்கரவர்த்தி.

P. K. Samy (J. D. G. A. N) J.P
162, Kotahena Street, May Feild Road, Clombo 13.
Tel: 342463, 344831, 431137
Fax: 0094 1 342464


## 45ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 12. 08. 1958



மறைவு: 21. 11. 1998

### அமரர் திருநாவுக்கரசு-சிவராசா (சந்திரன்)

[மின்சாரசபை ஊழியர் - யாழ்/மல்லாகம்] (திதி: 03.11.1998)

அன்னார் திருநாவுக்கரசு-சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் சதாசிவம் சுகுணாம்பிகையின் அன்புக் கணவரும், பிரணவன்,சபிர்ணா, பிரவினா ஆகியோரின் அன்புத் தந்தையும், வரதராசா, சறோயினிதேவி சரஸ்வதிதேவி, இலட்சுமிதேவி, தேவராசா, மகாதேவி, தவராசா (சுவிற்ஸர்லாந்து) ஆகியோரின் அன்பு சகோதரனும், நகுலாம்பிகை, பவானி, கமலராணி (சுவிற்ஸர்லாந்து), சபாரத்தினம், கதிரமலை, யோகநாதன், பரமசாமி ஆகியோரினது அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றி ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் 03.01.99 அன்று நடைபெற்ற அந்தியேட்டி சபிண்டீகரனத்திலும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்தனையில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியை தெரிவிக்கிறோம்.

தகவல்: MR. T. THAVARAJAH
GOTTHARD STR-35
6415 ARTH, SWITZERLAND
0041418555363

குடும்பத்தினர்.
தி. வரதராசா
பிள்ளையார் கோவில்,
கல்கமுவ. 037-53335

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 08. 03. 1929 புங்குடுதீவு



உதிர்வு: 19. 12. 1997 சாவகச்சேரி

### அமரர். குலநாயகம் பசுபதிப்பிள்ளை

(ரூபன்) இளைப்பாறிய அதிபர்

அன்பும் பாசமும் ஊட்டி வளர்த்தாய் அப்பா,
பண்பின் உறைவிடமாகவும் குடும்பத்தின்
ஒளி விளக்காயும் இருந்தாய் அப்பா.
உற்ற துணையாய் உடனிருந்து
ஆறுதல் கூறுவாய் அப்பா.
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு கடந்தாலும்
உங்களது இனிய நினைவுகள்
எங்களை விட்டுப் பிரியாது அப்பா.
என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்தித்து நிற்கும்.

தகவல்: மகன்-ரகு, சூரிச், சுவிஸ்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


கண்டியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்குவதில் முன்னோடி .........

சாஜி இன்டர்நெஷனல் ஏஜென்சி

✈குவைத் ✈ டுபாய் ✈ டோகா ✈ மாலைதீவு நாடுகளில் ஆண், பெண் இருபாலாருக்கும் ஏராளமான வேலை வாய்ப்புக்கள் !

சப் ஏஜன்டுகளுக்கு விசேட சலுகைகள்

Reg. No. 1361

SAAJI International Agency

483 Peradeniya Road, Kandy.
☎08/228648

Royal -071-735132




படிப்பகம்

www.padippakam.com

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# நாடி பிடித்தறியும் நகர்வும் — வளைவில் நின்ற புலிகளும்

**நாரதர்**

கிழக்கில் புலிகளின் நாடிபிடித்தறியும் படை நடவடிக்கை ஒன்று 31.12.98ல் மேற்கொள்ளப்பட்டது.

புத்தாண்டை வெற்றிகரமாக கொண்டாட கிழக்கில் உள்ள படைத்தலைமை நினைத்ததோ தெரியவில்லை.

தளபதி ஜானக பெரேராவின் வழி நடத்தலில் மேற்கொள்ளப்பட்ட அந்த நடவடிக்கைக்கு 'தரசர' என்று பெயர் சூட்டப்பட்டிருந்தது.

கிழக்கில் உள்ள புலியணிகள் வன்னிக்கு சென்றுவிட்டன. அதனால் கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் முக்கிய தாக்குதல் அணிகள் எதுவுமில்லை என்று படைத்தரப்பு நினைத்திருக்கலாம். அப்படியொரு தகவலை கிழக்கில் படையினருடன் இணைந்து செயற்படும் இயக்கங்களும் கூறிக் கொண்டிருந்தன.

அத் தகவல் படையினருக்கும் நிச்சயமாக கிட்டியிருக்கும்.

கிழக்கில் மின்மாற்றிகள் தகர்ப்பு உட்பட அரச நிர்வாகத்தை சீர்குலைக்கும் வேலைகளிலே புலிகள் ஈடுபட்டிருந்தனர்.

புலிபாய்ந்தகல்லுடன் நடவடிக்கையை முடித்துக்கொண்டு படையினர் முகாம் திரும்பினர்.

இம் முறை புலிகள் புதிய உத்தி ஒன்றை வகுத்துவிட்டனர் என்பதை படையினர் அறியவில்லை.

படையினரை உள்நுழைய அனுமதித்த புலிகள், புலிபாய்ந்த கல் பகுதியில் உள்ள 'எஸ் கேவ்' என்று அழைக்கப்படும் (எஸ் சுற்றுவளைவு) இடத்தில் நூற்றுக்கணக்கான புலிகள் பதுங்கி இருந்தனர்.

அந்த வளைவில் பதுங்கி இருப்பது எதிர்பாராத தாக்குதல் நடத்த மிக வசதியானது.

முகாம் திரும்பிய படையினர் எஸ் சுற்று வளைவில் திடீர் தாக்குதலை எதிர் கொண்டனர். எனினும் அதிக சேதமில்லாமல் பதிற் தாக்குதல் நடத்தி பொறியிலிருந்து மீண்டு முகாம் திரும்பினர்.

மேற்படி நடவடிக்கையில் கிரான், கும்புறுமூலை, வாழைச்சேனை ஆகிய முகாம்களைச் சேர்ந்த படையினர் கூட்டாக மேற்கொண்டனர்.

படைகளும், புலிகளும் மோதிய புலி பாய்ந்த கல் படையினரின் கிரான் முகாமில் இருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரத்திலேயே அமைந்திருக்கிறது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் புலிகளின் தாக்குதல் அணிகள் எதுவுமில்லை என்ற கணக்கையும், அங்கு பலவீனமான அணிகளே உள்ளன என்ற கணிப்பையும் 'தரசர' நடவடிக்கைக்கு புலிகள் காட்டிய எதிர்ப்பு பொய்யாக்கியுள்ளது.

●●●

**வ**ன்னியில் 'ஜயசிக்குறுய்' படை வெள்ளம் ஒய்ந்தபின்னர், மாரி மழை வெள்ளம் கடுமையாகியுள்ளது.

படை நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் படும் அவலம் எழுத்தில் வடிக்க முடியாதது.

கூரைவிரிப்புக்களால் கொட்டும் மழையை தாக்குப் பிடிக்க முடியவில்லை.

குழந்தைகள் பாடும், தள்ளாத வயதினர் நிலையும் பெரும் கொடுமை.

வெள்ளத்தால் சிதைவுறும் அரண்களை மீள அமைக்கவேண்டும். காவல் பணிகளிலும் ஈடுபட வேண்டும்.

ஜனவரி மாதம் முடிந்த பின்னர்தான் இந்த வெள்ள நெருக்கடியால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தணியும். அதுவரை படைத்தரப்பு பெரு நகர்வுகளில் ஈடுபட முடியாது.

இதற்கிடையே ஜனவரி 25ம் திகதி வடமேல் மாகாண சபைத் தேர்தல் நடைபெற உள்ளது.

இத் தேர்தலில் ஆளும் தரப்புக்கு நெருக்கடி கொடுக்கும் விதமாக புலிகள் எங்காவது தாக்குதல் நடத்தக்கூடும் என்ற சந்தேகமும் இருக்கிறது.

தேர்தல் வெற்றிகளுக்கு போர் முனை வெற்றிகளையே ஆளும்தரப்பு மூலதனமாகவும், சாதனைப் பட்டியலாகவும் கூறி வருகிறது.

எனவே புலிகள் அதற்கு பதிலடியாக தாக்குதல் நடத்தக்கூடும் என்ற பீதியும் இருக்கிறது.

வடமேல் மாகாண சபைத் தேர்தலை ஆளும் தரப்பு பரீட்சைக் களமாகவே கருதுகிறது.

இந்தப் பரீட்சையில் விடைத்தாளை திருத்தி புள்ளி போடும் ஆசிரியர்கள் வாக்காளர்கள்தான்.

யிலே, தமது கட்சிகளது தொண்டர் படை, குண்டர் படைகளை கொண்டு சென்று குவித்துள்ளது ஆளும் தரப்பு.

ஏற்கனவே அங்கிருந்த பொலிஸ் அதிகாரிகள் மாற்றப்பட்டுள்ளனர். மேலும் சில அதிகாரிகள்மீது விசாரணை நடத்துமாறு ஜனாதிபதியே கோரியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு சார்பாக நடப்பதாக பொலிஸ் அதிகாரிகள்மீது ஜனாதிபதியே புகார் கூறுவதால், பொலிஸ் அதிகாரிகள் பாடு தர்மசங்கடம்தான்.

ஆளும் கட்சிக்காரர்கள் குழப்பம் செய்தாலும் கைது பண்ணத் தயங்குவர். ஐ.தே.கட்சிக்கு சார்பானவர்கள் என்று நடவடிக்கை வருமோ என்று அஞ்சுவர்.

ஆளும்தரப்பார் பொலிசாரை மிரட்டத் தக்க சூழலே ஏற்பட்டுள்ளது.

மொத்தத்தில் வெற்றியைப் பெற்றே தீருவது என்ற வெறியுடன், ஐ.தே. கட்சியுடன் பொதுஜன முன்னணி நடத்தும் 'ஜயசிக்குறுய்' தான் வடமேல் மாகாண சபைத் தேர்தல்

இதில் மாபெரும் வெற்றி பெற்றால், பொதுத் தேர்தலுக்கு துணியலாம். தப்பிப் பிழைக்கும் ரகமான வெற்றி என்றால்,







ஒட்டுசுட்டான், முத்தையன் கட்டு பகுதிகளில் இருந்து மக்கள் இடம் பெயரும் காட்சி. மரநிழலில் இடம் பெயர்ந்த மாணவர்களுக்கு பாடசாலை நடக்கிறது. தற்போதைய மழையில் இவர்கள் எங்குதான் போவர்?

ரோந்து செல்லும் படையினர்மீது கைக்குண்டுத் தாக்குதல்களும் நடத்தினார்கள்.

இவையெல்லாம் ஒருவரோ அல்லது சிலரோ மட்டும் பங்குகொள்ளும் தாக்குதல்களே. எனவே புலிகளின் தாக்குதல் அணிகள் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தற்போது இல்லை என்று கணக்குப் போடப்பட்டது.

ஆனால், தொப்பிகலை காட்டுக்குள் முன்னேறிய படையினருக்கு அந்தக் கணக்குகளுக்கு மாறான களநிலவரம் காத்திருந்தது.

தொப்பிகலை காட்டுப்பகுதிக்குள் இதற்கு முன்னரும் பலதடவை படையினர் முன்னேற்ற முயற்சிகளை மேற்கொண்டனர். அவ்வாறான பல சந்தர்ப்பங்களில் புலிகள் சண்டையிடாமல் விலகிக் கொள்வர். படையினரும் முகாம் திரும்பிவிடுவர்.

ஆனால் இம்முறை களநிலவரம் வேறு விதமாக இருந்தது.

கனரக வாகனங்களுடன் நகர முடியாத தரைச் சூழல் காரணமாக, பீரங்கிப் படையணிகளின் உதவியுடன் படையினர் முன்னேறினர்.

தொப்பிகலை காட்டுக்குள் புலி பாய்ந்தகல்வரை படையினர் சென்றனர். புலிகள் தரப்பில் இருந்து எவ்வித எதிர்ப்பும் இருக்கவில்லை.

படையினர் சென்ற பின்னர் அவர்களது மூன்று சடலங்களை புலிகள் மீட்டனர். பின்னர் ஆற்றுப் பகுதியில் தேடிய போது மேலும் ஒரு சடலத்தை கண்டெடுத்தனர்.

புத்தாண்டு அன்று பொது மக்களின் பார்வைக்கு படையினரின் சடலங்களும், அவர்களது ஆயுதங்களும் வைக்கப்பட்டன. புலிகளின் புத்தாண்டு கிழக்கில் இவ்வாறுதான் ஆரம்பமானது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் இலுப்பையடிச் சேனையில் உள்ள தமது அலுவலகத்தில் வைத்து சடலங்களை புலிகள் ஒப்படைத்தனர்.

தமது தரப்பில் பலியான வசந்தன் என்னும் உறுப்பினரது உடலுக்கும் புலிகள் மரியாதை செலுத்தினர்.

இச் சண்டை தொடர்பாக படைத்தரப்பு வெளியிட்ட அறிக்கையில் 4 படையினர் பலியானதாகவும், எட்டுப்பேர் காயமடைந்ததாகவும் 58 புலிகள் பலியானதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

58 புலிகள் பலியானதாக படையின் கூறும் சண்டையில் தமது தரப்பில் பலியானவர்களது உடல்களை படையினர் மீட்கமுடியாமல் இருந்தது பற்றி என்ன கூறலாம்? தணிக்கை இருப்பதால் எதுவும் கூறக்கூடாது.

வன்னியில் உள்ள குளங்கள் நிரம்பி வெள்ளம் பாய்கிறது. இரணைமடுக் குளத்தின் பதினொரு வான் கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளன.

முத்தையன் கட்டு குளத்தின் வான் கதவும் திறந்து விடப்பட்டுள்ளது. இந்தக் குளம் உடைப்பெடுத்தால் ஒட்டுசுட்டானில் உள்ள படையினரும் வெள்ள அபாயத்தில் மாட்டிக்கொள்வர்.

வான் கதவுகளை புலிகள் திறந்து விட்டதால் வெள்ள அபாயம் ஏற்படவில்லை.

வன்னியில் தாழ்ந்த நிலப் பகுதியில் நிலைகொண்டிருந்த படையினர் மேட்டு நிலம் நோக்கி செல்ல வேண்டிய கட்டாயம். பங்கர்கள், காப்பரண்கள் உள்ளே வெள்ளம் ஊடறுப்பு நடத்துகிறது.

புலிகளும் வெள்ளத்தால் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர். அவர்களது காப்பரண்களுக்குள்ளும் வெள்ளம் பாய்கிறது.

கடந்த நான்காண்டு கால பொது ஜன முன்னணி ஆட்சியில் முதல் மாகாணசபைத் தேர்தல் இதுதான்.

இதற்கு முன்னர் உள்ளூராட்சித் தேர்தல் நடந்தபோதும், இந்த மாகாண சபைத் தேர்தலுக்கு அதைவிட முக்கியத்துவம் இருக்கிறது.

அங்குள்ள வாக்காளப் பெருமக்களின் நாடி பிடித்தறிந்துவிட்டுத்தான், அடுத்த கட்ட தேர்தல் வியூகத்தை பொதுஜன முன்னணி தீர்மானிக்கப்போகிறது.

மாகாணசபைகளுக்குள் கூடுதல் வெற்றி வாய்ப்பு உள்ள சபை எதுவென்று, ஆராய்ச்சி செய்துவிட்டு நடத்தப்படும் தேர்தல் இது.

ஆளும்கட்சிக்கே தன் செல்வாக்கில் சந்தேகம் வந்துவிட்டதால்தான் இப்படி முதலில் ஒரு சபைக்கு நடத்தி நாடிபிடித்துப் பார்க்கிறது.

பாதுகாப்புக் காரணம் என்பது ஏற்கத்தக்கதல்ல. அப்படியே இருந்தாலும் குறைந்தது இரண்டு சபையிலாவது ஒரே சமயத்தில் தேர்தல் நடத்தியிருக்கலாம்.

வன்னியிலே ஜயசிக்குறுய் படைகளை குவித்ததுமாதிரி, வடமேல் மாகாணசபை

இதே அணுகுமுறைகளோடு ஏனைய மாகாணசபைத் தேர்தல்களை நடத்தலாம்.

வெளிநாடுகளில் கடன் பெறுவது, முதலீடுகளை ஊக்குவிப்பது போன்றவற்றுக்கும் தம்மை ஒரு ஸ்திரமான அரசாங்கம் என்று காண்பித்தாக வேண்டும். அதற்கும் இத் தேர்தல் வெற்றி அவசியம்.

இந்நிலையில் புலிகள் தாக்குதல் எதனையும் மேற்கொண்டால் அதனை எதிர்க்கட்சி துருப்புச் சீட்டாக பயன்படுத்தும் என்ற கலக்கமும் ஆளும்தரப்புக்கு இல்லாமலில்லை.

ஆகவே, தலைநகர் முதற்கொண்டு வடக்கு-கிழக்கு உட்பட சகல பகுதிகளிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் உஷார் படுத்தப்பட்டே இருக்கின்றன.

ஜனவரி 25வரை புலிகளின் தாக்குதல்கள் எதுவுமில்லாமல், எந்த சறுக்கலும் இல்லாமல் வெற்றிக் கோட்டைத் தாண்டி விடவேண்டும் என்பதுதான் பொதுஜன முன்னணியின் பிரார்த்தனை. ▬

## அதிரடி அப்பாத்துரை



***முரசால் விமர்சிக்கப்படுபவர்களுக்கு***-முரசுக்கு பதில் சொல்லத் தக்க நியாயங்கள் இல்லை. துள்ளுகிறார்கள். சில பத்திரிகைகளுக்கு 'முரசு'மீது பொல்லாத பொச்சரிப்பு. எந்தப் பேயுடன் சேர்ந்தாவது முரசைக் காயப்படுத்த ஆசைப்படுகினம். ஒரு பத்திரிகையில் 'முரசு'மீது சீண்டல் வந்துள்ளது. சக பத்திரிகைகளை நாம் இதுவரை விமர்சித்ததில்லை. குறிப்பிட்ட பத்திரிகையின் அதிபர் பற்றியும் அவரது சுருட்டல் பற்றியும் கிடைத்த தகவல்களை முரசும் வெளியிடலாம். பத்திரிகையுலக நாகரிகம் கருதி இதுவரை வெளியிடவில்லை. நாகரிகத்தைப் பலவீனமாக நினைக்கினம் போல கிடக்கு. போட்டி நன்று. பொறாமை?!

***சுட்டது யார்?*** என்று கேட்டால் "பிஸ்டல் எல்லோர் மடியிலும் இருக்கிறது" என்று பி.பி.சிக்கு பேட்டி கொடுத்தார் ஒரு பிரமுகர். "அண்ணே எங்களையும் மாட்டிவிட்டுப் போட்டியள். செத்தவீட்டு வேலை செய்ய எங்கள் உதவி வேண்டாமோ?" என்று தமிழ்க் கட்சிப் பிரமுகர்கள் கேட்டனராம். "நான் பிஸ்டல் குழு எல்லா இடத்திலும் இருக்கிறது என்றல்லோ சொல்ல நினைச்சனான்!" என்று கூறிச் சமாளித்தாராம் பிரமுகர். அது சரி அண்ணே, "சனம் ஆயுதம் வைச்சிருக்கிறவையை ஏற்றுக்கொள்ளவில்லை. எங்களிடம்தான் வருகினம்" என்றும் அதே பேட்டியில் சொன்னீர்களே! அதுக்கும் விளக்கம் வைச்சிருக்கிறியளோ? அண்ணர் அந்தக் காலத்தில் 'கல்யாணப் பரிசு' படம் பார்த்திருப்பார் போல கிடக்கு. தங்கவேலு கேட்பார் பாருங்கோ "நீங்கள் எந்த மன்னார் அன்ட் கொம்பனியை சொல்லுறியள்?" என்று! அந்த ஜோக்கை ஞாபகம் வைத்திருந்து குழப்புகிறார்.

***கனடா பத்திரிகை*** ஒன்று ஜனநாயகக் கட்சியினரின் முகாம் எப்படித் தாக்கப்பட்டது; எந்தெந்த முறையில் அணிகள் முன்னேறின; என்றெல்லாம் விலாவாரியாக விவரித்திருந்தது. போதாக்குறைக்கு தமது நெடுந்தீவு நிருபர் அனுப்பும் செய்தி என்றும் தூள் கிளப்பியிருந்தனர். இப்போது ஒரே ஒரு கேள்விதான் பாக்கியிருக்கிறது. எந்த நெடுந்தீவைப் பற்றி செய்தி போட்டவை? முரசைத் திட்டுகிறவைக்கு, 'முரசு' மாதிரி தம்மால் 'ரிப்போர்ட்'தர இயலவில்லையே என்று எரிச்சல்தான். அதுக்காக உப்பிடியோ கற்பனைக் கோட்டை கட்டுறது?!

***வவுனியாவில் ஏட்டிக்குப்*** போட்டியான நிதி திரட்டல்! முந்தி இவை ஈழம் கேட்டுப் போராடும்போதுகூட இந்தளவு சுறுசுறுப்பாக நிதி திரட்டவில்லையே என்று சனம் அங்கலாய்க்குதுகள். 50 ஆயிரம் தரமறுத்தவர்களும் கடத்தப்படுகின்றனராம். கொஞ்சம் பசை இருப்பதாகத் தெரிந்தால் 'வை பத்தாயிரம்' என்று கேட்கினமாம். யாரிடம் முறையிடுவது என்று தெரியாமல் சனம் கலங்கி நிற்குது. இவையெல்லாம் ஜனநாயக மீறல்கள் இல்லாமல் தூறல்களோ?

***யாழில்*** தேவகுமாரனின் பிறந்த நாளை கொண்டாடக்கூட அனுமதியில்லை. நள்ளிரவில் பூஜை கிடையாது. "மக்களை மீட்க யுத்தம்" என்றனர். மீட்பரை (யேசுவை) வழிபடக்கூட இந்த மீட்பாளர்கள் அனுமதிக்கவில்லையே என்று சனம் சலிச்சுப்போச்சுதாம்.

***தலைநகரில் பிரசித்தி*** பெற்ற மயூராபதி ஆலயத்தில் பெரும் தொகைப் பணத்தை அபேஸ் செய்து போட்டார்களாம். சுருட்டியவர் உள்ளேயா? வெளியேயா? என்பது சிதம்பர இரகசியம்.

***அந்தக் காலத்தில்*** கோவிலில் கற்பூரம் விற்று பணம் சம்பாதிப்பர். திருவிழாக் காலத்தில் 'சைக்கிள் பாதுகாப்பு' போட்டால் நாலு காசு சேரும். இந்தக் காலத்தில் கோவில்களில் 'காலணி பாதுகாப்பு' நடத்தியே ஆயிரமாயிரமாய் சம்பாதிக்கினம். கிட்டத்தட்ட இராமரின் பாதணிக்கு உள்ள மரியாதை கிடைக்கிறது. நம்பர் பிளேட் போட்டல்லோ பாதுகாக்கினம்! அப்படியே காதணி, கழுத்தணி போன்றவற்றுக்கும் பாதுகாப்புக் கொடுக்கும்காலம் வரக்கூடும்.

***யாழில் நீதிமன்றம்*** இல்லை என்று சாட்டாக வைத்து. கைதான சிருடையினர் சிலர் விடுதலை செய்யப்பட்டதாகத் தகவல். சந்தேக கேஸில் பிடிபடும் பொது சனத்தை மட்டும் அனுராதபுரத்தில் ஆஜர் செய்கினம். சிருடையினர் என்றால் மட்டும் நீதி வேறாகுதோ?!

***செம்மணியில் இரகசியப்*** பொலிசார் விசாரணை என்று செய்திகள் வந்ததல்லோ? அங்கு எதை, எவரிடம் விசாரிப்பது? காணாமல் போனோரின் உறவினர்களிடம் காணாமல் போனோரின் அடையாளங்கள் கேட்கப்போகினமாம். 'வட்டுக்கோட்டைக்கு போற வழி கேட்டால் துட்டுக்கு ரெண்டு கொட்டைப் பாக்கு' என்ற கதைதான். குழியை தோண்டுங்கோ என்றால் உறவினர்களைப் போய் ஏன் நோண்ட வேணும்?!

***இந்த வாரம் ரஷியப் பொன்மொழி***

> **"சண்டையிடும்போது**
> **பணக்காரன்**
> **தன் முகம் கிழியாமல்**
> **இருக்க கவலைப்படுவான்!**
> **ஏழையோ — தன்**
> **உடை கிழியாமல்**
> **இருக்க கவலைப்படுவான்!"**



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## அரசியல் தொடர்

எழுதுவது அற்புதன்

215

# தோல்வியில் முடிந்த புலிகளுக்கு எதிரான பெரும் பிரசாரம்!

விடுதலைப் புலிகளுக்கு எதிராக பிரசார இயக்கம் ஒன்றை நடத்த ஈ.பி.டி.பி. முன் வந்தது.

ரஞ்சன் விஜயரத்ன உயிரோடு இருந்த போதே அதற்கான ஏற்பாடுகள் நடந்தன.

தினகரன் பத்திரிகையை பொறுப் பேற்று நடத்துமாறு ரஞ்சன் ஈ.பி.டி.பி. யினரை கேட்டிருந்தார்.

ஈ.பி.டி.பி. அதனை விரும்பவில்லை. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஊடாக புலிகளுக்கு எதிரான பிரசாரம் நடத்த ஏற்பாடு செய்து தருமாறு ஈ.பி.டி.பி. ஜனாதிபதி பிரேமதாசாவிடமும் ரஞ்சனிடமும் கேட்டிருந்தது.

அதற்கு உடன்பட்டார் ரஞ்சன் விஜயரத்ன. அவ்வாறு பிரசாரம் நடத்துவதானால் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் எவரும் தலையிடக்கூடாது, எப்படி நிகழ்ச்சிகளை நடத்துவது என்பதை நாமே தீர்மானிப் போம் என்று ஈ.பி.டி.பி. கூறியது.

அப்போது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன இயக்குநராக இருந்தவர் ஹட்சன் சமரசிங்கா.

ஈ.பி.டி.பி. கேட்கும் வசதிகளை செய்து கொடுக்குமாறு பிரேமதாசாவே நேரடியாக ஹட்சனுக்கு உத்தரவிட்டார்.

அதன்பின்னரே 'மக்களின் குரல்' என்ற பெயரில் வாரத்தில் நான்கு நாட்கள் மாலை ஐந்து மணி முதல் ஆறு மணிவரை வானொலி நிகழ்ச்சி ஒன்றை ஈ.பி.டி.பி. நடத்தியது.

இதற்கு ரமேஷ் பொறுப்பாக இருந்தார். நாடகங்களிலும் ரமேஷ் உட்பட ஈ.பி.டி.பி. யினரும் பங்கேற்று நடித்தனர்.

இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவிலும் சர்வதேச சேவை ஊடாக மக்களின் குரல் ஒலித்தது.

புலிகளுக்கு எதிரான பிரசாரம் செய்வதற்கு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு சென்ற ஈ.பி.டி.பி.யினரும், அங்கு காவலுக்கு நின்ற கடற்படையினருக்கு புலிகளாகவே தெரிந்தனர்.

### உள்ளே புலிகள்

ஒருமுறை ரமேஷ், அசோக் இருவரும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு சென்ற போது வாயிலில் வைத்து கடற்படையினர் மறித்தனர். சோதனையிடப்பட்ட பின்னரே உள்ளே செல்லலாம் என்று சோதனையிட நெருங்கினார்கள்.

"எம்மை சோதனையிட முடியாது. எம்மில் சந்தேகம் என்றால் நாம் இந்த நிகழ்ச்சி செய்வதற்கே வரமாட்டோம்" என்று அவர்கள் கூறியதையும் பொருட்படுத் தாமல்,சோதனையிட முயன்ற கடற்படை சிப்பாயை பிடித்து பின்னோக்கி தள்ளி விட்டு, உள்ளே போய்விட்டனர்.

அதனையடுத்து மக்களின் குரல் பதிவு செய்யப்பட்டுக் கொண்டிருந்த 'ரெக்கோடிங் ஸ்ருடியோவை' கடற்படையினர் சுற்றி வளைத்ததோடு, உள்ளே இரண்டு புலிகள் வந்திருப்பதாக ஊழியர்களிடம்கூறி புரளியைக் கிளப்பினார்கள்.

அந்த நேரம் ஹட்சன் சமரசிங்க அவ் விடத்துக்கு சென்றார்.

"மக்களின் குரல் நிகழ்ச்சிக்கு வருபவர்களது பெயர்கள் முன்கூட்டியே கேற்றில் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினரால் தெரிவிக்கப்படும். அவர்களை சோதனையிடக்கூடாது" என்று ஹட்சன் கூறியதால், பிரச்சனை தீர்ந்தது.

### கொழும்பில் தேடுதல்

'மக்களின் குரல்' செய்தது ஒரு புறமிருக்க கொழும்பில் புலிகளின் நடவடிக்கைகளை தடுப்பதிலும் ஈ.பி.டி.பி. முன்னின்றது.

பொலிசாருடனோ, இராணுவத்தினருடனோ இணைந்து நடவடிக்கையில் ஈடுபடமாட்டோம். கொழும்பில் புலிகள் நின்றபோது எவ்வாறு ஏனைய இயக்க உறுப்பினர்களை கைது செய்ய சுதந்திரம் தரப்பட்டதோ, அதுபோன்ற சுதந்திரம் எமக்கும் தரப்பட வேண்டும் என்று ஈ.பி.டி.பி. கோரியது.

அதன்படி கொழும்பு பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு முன்கூட்டியே தகவல் கொடுத்துவிட்டு ஈ.பி.டி.பி. தனித்து செயற்படலாம் என்று முடிவானது.

அப்போது கொழும்பு டி.ஐ.ஜியாக இருந்தவர் செனிவிரத்ன. ரஞ்சனின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர்.

தாம் எங்கு சென்று தேடுதல் நடத்தப் போகிறோம் என்பதை ஈ.பி.டி.பி.யினர் தெரியப்படுத்துவர். அப் பகுதி பொலிசாருக்கு தகவல் கூறி, அங்கு தலையிட வேண்டாம் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டு விடும்.

இத் தேடுதல் நடவடிக்கைகளும் ரமேஷின் பொறுப்பிலேயே மேற்கொள்ளப்பட்டன.

ரஞ்சன் விஜயரத்தினா கொலைக்கு சூத்திரதாரியாக இருந்தவர் வரதன். ரஞ்சன் கொலைக்கு முன்னரே அவர் பற்றி ஈ.பி.டி.பி.க்கு தகவல் வந்தது. அவர் வேலை செய்த வீடியோக் கடைக்கு தேடிச் சென்றனர். அச் சமயம் அவர் அங்கிருக்கவில்லை.

வரதன் பற்றி கிடைத்த தகவலை பொலிசாருக்கு ஈ.பி.டி.பி. தெரிவிக்கவில்லை. தெரிவித்திருந்தால்கூட வரதன் புலி என்று நிரூபிப்பதற்கான ஆதாரம் எதுவும் அப்போது பொலிசாருக்கு கிடைத்திருக்காது.

புலிகள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப் பட்டவர்கள் ஈ.பி.டி.பி. முகாமில் வைத்து விசாரிக்கப்பட்டனர். பின்னர் விடுவிக்கப் பட்டனர்.

ஈ.பி.டி.பி.யினரால கொழும்பில் புலிகள் என்ற சந்தேகத்தில் பிடிக்கப்பட்ட எந்தவொரு இளைஞரும் கொல்லப்படவில்லை.

இதனை புலிகளும் அறிந்திருந்ததாலோ என்னவோ, ஈ.பி.டி.பி.மீது புலிகளும் அப் போது தாக்குதல் எதனையும் நடத்தவில்லை.

புலிகளும் தமது புலிகளின் குரல் மூலமாகவே மக்களின் குரலுக்கு பதிலடி கொடுத்ததுடன், ஈ.பி.டி.பி.பற்றியும் கண்டனம் தெரிவித்து வந்தனர்.

ரஞ்சன் விஜயரத்தினா மரணத்தின் பின்னர் கொழும்பில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை ஈ.பி.டி.பி. குறைத்துக் கொண்டது.

பிரேமதாசா பலியான பின்னர் டி.பி. விஜதுங்கா ஜனாதிபதியானார். சிங்கள இனம் மரம், தமிழ் மக்கள் அந்த மரத்தைச் சுற்றிப் படரும் கொடி என்று கூறினார்.

"இனியும் மக்களின் குரல் செய்வதில் அர்த்தமில்லை. நிறுத்திவிடலாம்" என்று ஈ.பி.டி.பிக்குள் அபிப்பிராயம் எழுந்தது. அதனை தமது தலைவர் தேவானந்தாவிடம் ரமேஷ் கூறினார்.

"உடனே நிறுத்தினால் நன்றாக இருக்காது. படிப்படியாக நிறுத்தலாம்" என்பது டக்ளஸ் தேவானந்தாவின் விருப்பம்.

நிகழ்ச்சிகள் தயாரிக்கும் பொறுப்பிலிருந்து ரமேஷ் விலகிக்கொண்டார். கொழும்பில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளும் முற்றாக நிறுத்தப்பட்டன.

மக்களின் குரலில் தொடர்ந்து ஒரு மாதத்திற்கும் மேலாக மறு ஒலிபரப்பாகவே நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

மாலை ஐந்து மணிக்கும் ஆறு மணிக்கும் இடைப்பட்ட நேரம் பிரதான நேரமாகும். வர்த்தக விளம்பரங்கள் அதிகமாக இடம்பெறத்தக்க நேரமாகும்.



அந்த நேரத்தை இப்படி மறு ஒலிபரப்பு நிகழ்ச்சிக்காக வீணடிக்கலாமா? என்று ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினர் குறைப்பட்டார்கள். இறுதியில் 'மக்களின் குரல்' தொடர்ந்து செய்ய இயலாத நிலையில் இருப்பதாக டக்ளஸ் தேவானந்தா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு தெரியப்படுத்தினார். மக்களின் குரல் அப்படியே ஓய்ந்து போனது.

### படிப்பினை

புலிகளுக்கு எதிரான மிகப் பாரிய பிரசாரமாக 'மக்களின் குரல்' விளங்கியது. ஆனால் பரிதாபகரமான தோல்வியைச் சந்தித்தது.

விடுதலைப் புலிகளும் பிரேமதாசா அரசுடன் பேச்சு நடத்தியபோது, கொழும்பில் ஏனைய இயக்கங்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

'உண்மை' என்ற பத்திரிகை மூலம் ஏனைய இயக்கங்களுக்கு எதிரான பிரசாரத்தையும் மேற்கொண்டனர்.

எனினும் புலிகளிடம் சொந்தப் பலம்இருந்தமையால், அந்தப் பிரசாரங்களும், நடவடிக்கைகளும் இயக்கத்தை மேலும் பலப்படுத்தவே உதவின.

புலிகள் அரசுடன் பேச்சு நடத்தியபோது அரசாங்கமோ படையினரோ தமிழ் மக்களுக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதில்லை. அவ்வாறு ஈடுபட்டால் தாமும் திருப்பித் தாக்குவோம் என்று புலிகளால் கூறவும் முடிந்தது.

ஆனால் ஏனைய இயக்கங்கள் எந்த அரசை ஆதரித்தனவோ, அதே அரசு அந்த இயக்கங்களின் கருத்துக்களையும் மீறி குடிமனைகள்மீது குண்டு போட்டது. அடக்கு முறைகளை தொடர்ந்தது. அவற்றை கண்டித்து எதிர்த்து நிற்குமளவுக்கு அரசியல் ரீதியாக என்றாலும் ஏனைய இயக்கங்கள் தம்மை திடப்படுத்தவில்லை.

அவற்றை தடுக்க முடியாத சூழலில் இருந்தபடி, புலிகளை மட்டுமே எதிர்த்து இவர்கள் செய்யும் பிரசாரம் மக்களாலும் ஏற்கப்படமாட்டாது.

ஏனைய இயக்கங்கள் அரசுகளுடன் கொண்ட நட்புறவு எவ்வகையிலும் அந்த இயக்கங்களை உண்மையான பலமிக்கதாக மாற்ற உதவவில்லை. அதற்கான வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை.

புலிகள் எம்மை போராட அனுமதிக்கவில்லை. எமது போராடும் உரிமையை தடைசெய்தனர், என்ற உணர்ச்சியிலேயே ஏனைய இயக்கங்களில் இருந்த போராளிகள் பலர் புலிகளுக்கு எதிரான நிலைப்பாடுகள் எடுத்தனர்.

ஆனால் அதே இயக்கங்கள் அரசுடன் கொண்ட நட்புகள் காரணமாக போராட்டத்தையே கைவிடும் அளவுக்கும், அடிப்படை நிலைப்பாடுகளையே மறக்கும் அளவுக்கும் சென்றுவிட்டன.

இதன் பின்னர்தான் புலிகளை எதிர்த்த சக்திகள் பலர் புலி எதிர்ப்பு நிலைப்பாட்டை கைவிட்டனர்.

புலிகள் இல்லையானால் மாற்று யார்? என்ற கேள்விக்கு பதில் சொல்ல முடியாத நிலையில் புலி எதிர்ப்பு என்பது அதனை மேற்கொள்பவர்களுக்கு தனிப்பட்ட இலாபத்தை தரலாம். தமிழ் பேசும் தரப்புக்கு பலன் என்ன? என்ற கேள்விக்கு தமிழ்க் கட்சிகளிடம் இன்று பதில் இல்லை.

நாம் மறுபடி 1991ம் ஆண்டுக்கு செல்லலாம்.

### மேதினம்

யாழ், குடாநாட்டில் 1991 மே தினத்தை புலிகள் பிரமாண்டாக கொண்டாடினார்கள்.

வடபகுதியில் ஊரடங்கு அமுலில் இருப்பதாக அரசு அறிவித்தது.

அவ்வாறு இருந்தும் நல்லூர், ஒமந்தை, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் மேதின ஊர்வலங்களும் கூட்டங்களும் நடைபெற்றன.

குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதல் நடத்தக்கூடும் என்று பீதி நிலவிய போதும், யாழ் குடாநாட்டில் நடைபெற்ற மேதின ஊர்வலத்தில் 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் பங்கு கொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் 1977க்கு முன்னர் கூட்டணியினர் நடத்திய மேதினக் கூட்டங்களில் பெருமளவில் மக்கள் பங்கு கொள்வர்.

அதனைவிட பலமடங்கு மக்கள் நல்லூரில் நடந்த புலிகளின் மேதின கூட்டத்தில் பங்குகொண்டனர்.

*(தொடர்ந்து வரும்)*

---

## "அரசியலமைப்பை ஆதரித்தவர்களுக்கு இயற்கை மரணம் நேராது!"

**1977 ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் நாடெங்கும் நடைபெற்ற வன்செயல்கள் பற்றி ஆராய 'சன்சோனி கமிஷன்' நியமிக்கப்பட்டது. இக் கமிஷன் தமிழர் விடுதலைக் கூட்டணி பற்றி ஆதாரபூர்வமான சாட்சியங்களின் அடிப்படையில் வெளியிட்ட கருத்துக்களில் ஒரு சிறு பகுதி இது:**

தமிழரசுக் கட்சியெனத் தமிழிலும் 'பெடறல் பார்ட்டி' என ஆங்கிலத்திலும் அழைக்கப் பெற்றுவந்த அரசியற் கட்சியானது 1952 ஆம் ஆண்டுதொட்டு இருந்து வந்தது. 1972, மே மாதம் 14 ஆம் திகதியிலிருந்து அது 'தமிழ யுனைட்டெட் ஃபுறன்ற்' என ஆங்கிலத்திலும் தமிழர் ஐக்கிய முன்னணி எனத் தமிழிலும் ஆகி, பின்பு 1976, மே மாதம் 14 ஆம் திகதியன்று 'தமிழ் யுனைட்டெட் லிபரேஷன் ஃபுறன்ற்' என ஆங்கிலத்திலும் 'தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணி' எனத் தமிழிலும் ஆயிற்று.

'த முஸ்லிம் யுனைட்டெட் ஃபுறன்ற்' என ஆங்கிலத்திலும், முஸ்லிம் ஐக்கிய முன்னணி எனத் தமிழிலும் பெயர்வாய்ந்த கட்சியும் அதனுடன் சேர்ந்துகொண்டது. (நான் அவற்றை அழைப்பது போன்று) குறிப்பாக (ஆங்கிலத்தில் 'ரீ.யூ.எவ்' எனப்படும்) த.ஐ.மு-உம். (ஆங்கிலத்தில் 'ரீ.யூ.எல்.எவ்.' எனப்படும், த.ஐ.வி.மு-உம், 1972, மே மாதத்தில் குடியரசு அரசியலமைப்புச் சட்டம் பிரகடனப்படுத்தப் பெற்றதன்பின்பு, இதன்கண் அளிக்கப்பெற்ற சாட்சியத்தின்போது முக்கியத்துவம் வகித்தன.

(02) 1972, யூலை 27 ஆம் திகதிமுதல் 1977, யூலை 24 ஆம் திகதிவரை பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளராக இருந்த திரு. டபிள்யூ.ரீ. ஜயசிங்ஹ அவர்கள் வடக்கில் 1972, மே மாதத்தின் பின்னர் நிலவிய நிலைமை பற்றியும், பிரதானமாக த.ஐ.வி.மு.- இனது நடவடிக்கைகள் பற்றியும் கூறியுள்ளார். புதிய அரசியலமைப்புச் சட்டத்திற்குக் கண்டனம் தெரிவித்தபின், கட்சித் தலைவர்கள் அதன் பிரதிகளைப் பகிரங்கமாக எரித்தனர் என அவர் குறிப்பிட்டார்.

இச்சம்பவமானது 1972, ஒக்டோபர் 02 ஆம் திகதி நிகழ்ந்தமையினைத் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் ஏற்றுக்கொண்டார்.

அவ்வரசியலமைப்புச் சட்டத்தை ஆதரித்த அரசியல்வாதிகளுக்கு எதிராக, அதாவது (அப்போதைய அரசாங்கத்தின் ஓர் அமைச்சராகிய) திரு. குமாரசூரியர் அவர்களுக்கும் திரு.ராஜன் செல்வநாயகம் அவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினர் போன்ற அத்தகையோருக்கும் எதிராகக் கட்சி ஆதரவாளர்களும் வன்முறைச் செயல்கள் புரிந்தனர். வடக்கில் சட்டத்திலும் ஒழுங்கிலும் சீர்குலைவொன்றை ஏற்படுத்துவதற்கு ஓரியக்கத்தையும் இக்கட்சி நடத்திற்று என அவர் மேலும் கூறினார். கொலைகள், கொலை முயற்சிகள், துப்பாக்கி உற்பத்தி, பிற சட்டவிரோதச் செயல்கள் பற்றியும் அவர் குறிப்பிட்டார்.

(03) அதன் விளைவாகப் பொலிசார் 1972-இற்கும் 1974 இற்கும் இடையில் ஏறக்குறைய (ஐம்பது) 50 ஆட்களுக்கு எதிராகத் தடுப்புக்காவற் கட்டளைகள் பிறப்பிக்கப்படல் வேண்டும் என விதந்துரைத்தனர்; அத்தகைய கட்டளைகள் நடைமுறையில் இருந்த காலம் வரைக்கும் இவ்வன்முறைச் செயல் நின்றுவிட்டமை முக்கியத்தும் வாய்ந்ததாகவிருந்தது. ஆகவே, வன்செயலுக்குக் காரணமாக இருந்தோர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தோரே என அனுமானித்தல் நியாயமானதாகவிருந்தது.

(04) 1972 ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டம் பிரகடனப்படுத்தப் பெற்றபோது த.ஐ.வி.மு. ஆனது ஒரு ஹர்த்தால் அல்லது துக்க தினமொன்றை அனுஷ்டிக்குமாறு மக்களுக்கு ஒரு வேண்டுதல் விடுத்தமையையும், விடுதலை ஈட்டும் குறிக்கோளுக்குக் கட்சி உறுப்பினர்கள் தம்மை அன்று அர்ப்பணித்தமையையும் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் ஏற்றுக்கொண்டார். அந்நாளன்று கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டன; பாடசாலைகள் அவற்றின் மாணவர்களாற் பகிஷ்கரிக்கப்பட்டன; பேருந்துகளுக்கு (பஸ் வண்டிகளுக்கு) கல்லெறி விழுந்தது, என்பவற்றையும் அவர் ஏற்றுக் கொண்டார்.

(05) எதிர்ப்புத் தெரிவிக்கும் கூட்டமொன்று திரு. செல்வநாயகம் அவர்களது தலைமையின் கீழ் 1972, மே 24 ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்தில் நடந்தேறிற்று. திரு. அமிர்தலிங்கம் அவர்களும் காசி ஆனந்தனும் அதில் உரை நிகழ்த்தினர்.

(06) "புதிய அரசியலமைப்புச் சட்டத்திற்கு வாக்களித்த (ஆறு) 06 தமிழரும் சுகவீனத்தினாலோ, விபத்தினாலோ, இயற்கைக் காரணங்களினாலோ இறக்கமாட்டார்கள்; ஆனால் எவையோ பிற வழிகளில் அவர்களுக்கு மரணம் சம்பவிக்கும்." எனப் பின்னவர் கூறினார்.

திரு. அமிர்தலிங்கம் கூறியதாவது: "தமிழரும் படைக்கலம் ஏந்தும் ஒருநாள் வரும். ஆதலால், வெளிநாடுகளிலுள்ள குறித்த சில நிறுவனங்களுடன் அவர்கள் நட்புறவுகள் வைத்துக்கொள்ளல் மிக அவசியமாகும்."

அக்கூட்டம் பற்றிய பொலிசு அறிக்கையொன்று முன்னிலைப்படுத்தப் பெற்றது. தமது சாட்சியத்தில், தாம் இயம்பியது யாதென விளக்கி, "நாங்கள் படைக்கலம் பயன்படுத்தப் போவதில்லை; ஆயினும், எமது எதிர்காலச் சந்ததியினர் போரிடவேண்டி வரலாம்" என்றே தாம் கூறினாரென்றார். அதனிலும் பார்க்க நான் ஏற்றனுமதித்துக் கொள்வது பொலிசார் தயாரித்த அறிக்கையையேயாகும்.

(07.) காசி ஆனந்தன் அவ்வுரை நிகழ்த்தியதன் பின்னர், தடுப்புக்காவற் கட்டளையொன்றின் பேரில் யூன் 10 ஆம் திகதியன்று கைது செய்யப்பட்டார்; அவர் தடுப்புக் காவலில் இருக்கையில் 1972, ஒக்டோபரிலும் நவம்பரிலும் (மூன்று) 03 நாட்கள் அவரது வாய்முறைப் பாட்டை உபபொலிசுக் கண்காணிப்பாளர், பீ.வீ. டபிள்யூ, த. சில்வா பதிவு செய்தார். இச்சொற் பொழிவுகளைப் புலனாய்வு செய்யுமாறும் யூன் மாத முற்பகுதியில் நிகழ்ந்த இரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுக்கும் த.ஐ.மு. நடவடிக்கைகளுக்குமிடையில் ஏதும் தொடர்பு இருந்ததா என அறியுமாறும் பீ.வீ. டபிள்யூ. த.சில்வாவுக்கு யூன் 11ஆந் திகதியன்று அறிவுறுத்துரை வழங்கப்பெற்றது.

மே 24 ஆம் திகதிக்குப் பிறகு வன்முறைச் சம்பவப் பெருக்கொன்று இருந்ததாகவும், இக்குற்றச் செயல்களுக்குப் பொறுப்பாக இருந்த சத்தியசீலன் என்னும் ஒருவர் உள்ளடங்கலான, ஓர் அரசியற் குழுபற்றியும் அவர் சான்றளித்தார்.

திரு. ஆர். சுந்தரலிங்கத்தினை அடுத்தது சாட்சியமளித்தவருமாகிய திரு. ஜே.டி.எம். ஆரியசிங்ஹ, 1973, ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 1975 ஒக்டோபர் 30 ஆம் திகதிவரை யாழ்ப்பாணம் பொலிசுக் கண்காணிப்பாளராக இருந்தவராவர். தமது பதவிக்காலத்தின்போது, சட்டத்தையும் ஒழுங்கினையும் எதிர்த்து எழுந்த பிரதான அச்சுறுத்தலானது அரசியல் உள்நோக்கங்களின் பொருட்டு வன்செயல் புரிந்த வாலிபர்களிடமிருந்தாகும் என நிலைநாட்ட முற்பட்டார்.

அப்போதைய ஓர் அமைச்சராகிய திரு. சி. குமாரசூரியர் ஓர் உப-அஞ்சல் அலுவலகத்தைத் திறந்து வைப்பதற்காக 1973, ஜனவரி மாதம் 15 ஆம் திகதியன்று வேலணைப் பாடசாலைக்குச் செல்லவேண்டியிருந்தது. திரு. ஆரியசிங்ஹ அதற்கான பாதுகாப்பு ஒழுங்குகளைச் செய்தார். அவர் வேலணைக்கு அருகே திரு. திருமதி அமிர்தலிங்கம், திருவாளர்கள் சிவசிதம்பரம், கதிரவேலுப்பிள்ளை, கா.பொ. இரத்தினம் ஆகியோரைக் கண்டார்.

அவர்களுடன் அவர் கதைத்ததன்பின்பு, தனியார் காணி ஒன்றிற்குள் அவர்கள் சென்றனர். அமைச்சர் அவர்களைத் தாண்டிச் சென்றபோது, "துரோகியே திரும்பிப் போ" எனக் குரல்கள் எழுப்பப்பட்டதோடு, கறுப்புக் கொடிகளும் அசைக்கப்பட்டன.



படிப்பகம்

www.padippakam.com

அலசுவது– இராஜதந்திரி

# இந்திய விஜயமும் நிறைவேறாத எதிர்பார்ப்புகளும்

ஜனாதிபதி சந்திரிக்கா இந்தியாவுக்கு விஜயம் செய்வது இது முதற் தடவையல்ல. அதேபோல இந்திய பிரதமர்கள், வெளியுறவு அமைச்சர்கள் ஆகியோரை அவர் சந்திப்பதும் புதியதொன்றல்ல.

தேவகவுடா பிரதமராக இருந்தபோது தனது ஓய்வுக்காக தனிப்பட்ட விஜயமொன்றை ஜனாதிபதி சந்திரிக்கா இந்தியாவுக்கு மேற்கொண்டிருந்தார்.

புலிகளின் அச்சுறுத்தல் பற்றிய கவலை இல்லாமல் ஓய்வைக் கழிக்க ஏற்ற நாடாக இந்தியாவை தெரிவு செய்யுமளவுக்கு அப்போது நம்பிக்கை நிலவியது.

தற்போது அத்தகைய நம்பிக்கை நிலவுவதாக கூறுவதற்கு இடமில்லை. இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர் விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளர். பாரதிய ஜனதா தலைவர்களது நெருங்கிய நண்பரான வை.கோ. புலிகளது நிழல் என்று கருதப்படுபவர்.

கோமாளி அரசியல்வாதி என்று கருதப்படும் ஜனதாகட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி போன்றோர் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் புலிகளது அனுதாபி என்றும், அவரை பாதுகாப்பு அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்றும் கோரிவருகின்றனர்.

தமது பதவிகளைக் காப்பாற்றுவதற்காக முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவதும், கொள்கைகளை தாரைவார்ப்பதும் அரசியல்வாதிகளது வழக்கமாகும். ஆனால் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் குத்துக்கரண அரசியல் வாதியல்ல என்பது நிருபணமாகியுள்ளது.

புலிகளது அனுதாபி என்ற பிரச்சாரத்தை அவர் மறுக்காதிருப்பது பதவியைக் காப்பாற்ற பொய்யுரைக்கும் அரசியல்வாதிகள் போன்றவரல்ல அவர் என்பதையே காண்பித்துள்ளது.

அதேபோன்று பல்வேறு நெருக்கடிகள் இடையேயும், வை.கோ.வும் தனது நிலைப்பாட்டை இதுவரை மாற்றிக்கொண்டதில்லை.

இவர்கள் இருவரையும் சந்திப்பதற்கு ஜனாதிபதி சந்திரிக்கா ஆவலுடன் இருந்தபோதும், அவர்கள் சந்திக்க முன்வரவில்லை என்று கூறப்படுகிறது.

ஆனால், வை.கோ.வும் ஜனாதிபதி சந்திரிக்காவும் சந்தித்து பேசியதாக ஒரு புரளி கிளப்பப்பட்டிருந்தது. இலங்கை வெளியுறவு அமைச்சு வட்டாரங்களே இப் புரளியை கிளப்பி விட்டனர் என்றும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டு மக்கள் அரசின் தீர்வுப் பொதிக்கு ஆதரவு தெரிவிப்பதாக ஜனாதிபதி சந்திரிக்கா பேட்டியொன்றில் கூறியுள்ளதும் உற்று நோக்கத்தக்கதாகும்.

புதுடில்லியில் தங்கியிருந்த சந்திரிக்கா அம்மையார் தமிழக மக்களிடம் கருத்துக் கணிப்பை எவ்வாறு நடத்தினார் என்று புரியவில்லை.

இலங்கையில் தமிழ் மக்கள் தம்மோடு இருப்பதாக காண்பிக்க, இங்குள்ள மிதவாத தமிழ்க் கட்சிகளையும், அவற்றின் சமரசவாத அரசியல் நிலைப்பாடுகளையும் ஆட்சியாளர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

தமக்கு தேவை ஏற்படும்போது இங்குள்ள தமிழ்க் கட்சி தலைவர்களை சந்திப்பார் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார். அச் சந்திப்பு முடிந்ததும் தமிழ்க் கட்சித் தலைவர்கள் பத்திரிகைகளுக்கு தெரிவிக்கும் கருத்துக்கள் அரசுக்கு தோதான பிரசாரமாகவே அமைந்திருக்கும்.

இங்குள்ள தமிழ்க் கட்சித் தலைவர்கள் போன்றே, தமிழக அரசியல் கட்சித் தலைவர்களையும் சந்திரிக்கா அம்மையார் எடைபோட்டு விட்டாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

தமிழக அரசியல் தலைவர்கள் சிலரை ஜனாதிபதி சந்திரிக்காவுடன் சந்திப்புக்கு ஏற்பாடு செய்து, அதனை பிரசாரமாக்கும் எண்ணம் இலங்கையின் வெளிநாட்டமைச்சுக்கு இருந்திருக்கலாம் என்றே கருதப்படுகிறது.

அவ்வாறான சந்திப்பின் பின்னர் தமிழக மக்களும் தீர்வுப் பொதிக்கு ஆதரவு என்று கூறிக்கொள்ளலாம் என்றே நினைத்திருக்கின்றனர்.

எனினும், தமிழக அரசியல் தலைவர்கள் எவரும் ஜனாதிபதி சந்திரிக்காவை சந்திக்கவில்லை என்பதே உண்மையாகும்.

'தீர்வுப் பொதி' என்றால் என்னவென்றே தெரியாத தமிழக மக்களையும் இழுத்து, அவர்களும் பொதியை ஆதரிப்பதாக சந்திரிக்கா அம்மையார் கூறியிருப்பது வியப்புக்குரிய தமாஷாகவே அமைந்திருக்கிறது.

இவ்வாறான கூற்றுக்கள் சந்திரிக்கா அம்மையாரின் மீதான நம்பிக்கைகளை மேலும் தகர்த்தெறியக் கூடியனவாகவே விளங்குகின்றன.

தீர்வுப் பொதியை சந்திரமண்டல வாசிகளும் ஆதரிக்கின்றனர் என்றும் ஆட்சியாளர்கள் தெரிவிக்கக்கூடும்.

ஆயினும், தமிழக தலைவர்களை சந்தித்து, அதனை அரசியல் பிரசாரமாக்கும் முயற்சிகள் பயனளிக்கவில்லை.

உலகில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான சக்திகளை ஒன்றில் தம்பக்கம் வென்றெடுப்பது, அல்லாதுவிட்டால் அச்சக்திகளை புலிகள் என்று கூறி அந்தந்த நாட்டு அரசுகள் மூலம் நெருக்கடி ஏற்படுத்துவதுமே வெளிநாட்டமைச்சின் அயராத முயற்சியாக அமைந்திருக்கிறது.

ஆனால் வை.கோ. போன்றோர் விடயத்தில் அத்தகைய உத்திகள் ஒருபோதும் பயனளிக்கப் போவதில்லை.

இலங்கை ஆட்சியாளர்களையோ, அவர்களது பிரதிநிதிகளையோ சந்திப்பதற்கு வை.கோ.போன்றோர் முன்வரப்போவதில்லை.



தமிழகத்தில் தற்போது புலிகளுக்கு ஆதரவான சக்திகள் என்று கருதப்படுபவை பதவிகள், பகட்டுகள் என்பவற்றுக்கு அப்பாற்பட்ட சக்திகளாகும். தாம் தடை செய்யப்படலாம், கைது செய்யப்படலாம் என்று தெரிந்தும் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டு வருகிற சக்திகளாகும்.

தமிழகத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான அரசியல் சக்திகளை இரண்டு வகையாக பிரிக்கலாம்.

ஒரு பிரிவினர், தமது அரசியல் நலனுக்காக இலங்கைத் தமிழர் பிரச்சனையை பயன்படுத்திய சக்திகள்.

இன்னொரு பிரிவினர், இன உணர்வு மற்றும் நீதியான போராட்டம் என்ற கண்ணோட்டத்தில் உளப்பூர்வமாக ஆதரவளித்த சக்திகள்.

இவர்களில் முதல் பிரிவினர் தற்போது மௌனமாக இருந்து வருகின்றனர். இரண்டாவது பிரிவினரே தற்போதும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்து வருகின்றனர். இச் சக்திகளே புலிகளுக்கு ஆதரவான சக்திகளாகவும் இருக்கின்றனர்.

எனவே, இச் சக்திகளை சந்திரிக்கா அம்மையாரோ, வெளிநாட்டமைச்சர் கதிர்காமரோ சந்திக்கவோ, தம் பக்கம் ஈர்க்கவோ ஒரு போதும் இயலாது.

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தற்போது புலிகள் ஆதரவு நிலைப்பாட்டை தவிர்த்திருந்தாலும், இலங்கை இனப்பிரச்சனை தீர்வு விடயத்தில், இலங்கை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளும் தீர்வு எதுவோ அதற்கே தமது ஆதரவு என்று கூறியுள்ளார்.

ஆகவே, தமிழக மக்களோ, அவர்களின் தலைவர்களோ இலங்கை அரசின் தீர்வுப் பொதியை ஆதரிக்க முன்வருவர் என்பது நடக்கமுடியாத காரியமேயாகும்.

இந்திய அரசுத் தலைவர்கள்கூட இலங்கை அரசின் தீர்வுப் பொதியை ஆதரித்து கருத்து எதனையும் கூறவில்லை.

பாரதிய ஜனதா அரசு பதவிக்கு வரமுன்பு இந்தியா சென்ற சந்திரிக்கா அம்மையாரிடம் பொதியை ஆதரித்து தேவகவுடா ஐ.கே.குஜ்ரால் போன்றோர் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

ஆனால், இன்றைய பிரதமர் வாஜ்பேயி கொழும்பு வந்தபோதும் சரி, தற்போது சந்திரிக்கா அம்மையாரை புதுடில்லியில் சந்தித்தபோதும் சரி பொதியைப் பற்றியோ, இனப்பிரச்சனைத் தீர்வில் அரசின் முயற்சியை ஆதரித்தோ எவ்விதமான கருத்தையும் வெளியிடவில்லை என்பதே முக்கியமான விடயமாகும்.

பிரதமர் வாஜ்பேயி பொதியை புகழ்ந்திருந்தால் சந்திரிக்கா அம்மையாருக்கு தலைகால் புரியாத சந்தோசம் ஏற்பட்டிருக்கும். அவ்வாறான சந்தோசத்தை தருவதற்கு வாஜ்பேயி முன்வரவில்லை என்பது இலங்கை ஆட்சியாளருக்கு உள்ளூரக் கவலையான விஷயம்தான்.

இந்தியப் பிரதமர் வாஜ்பேயியும், ஜனாதிபதி சந்திரிக்காவும் தனியாக சந்தித்தபோதுகூட, வர்த்தக உடன்படிக்கை தொடர்பான பேச்சுக்களே இடம்பெற்றுள்ளன.

இலங்கையின் இனப்பிரச்சனை விவகாரத்தை இந்திய ஆட்சியாளர்கள் சந்திரிக்கா அம்மையாருடன் விவாதிப்பதை தவிர்க்கவே விரும்பியுள்ளனர்.

ஆனால், சந்திரிக்கா அம்மையார் அவர்கள் தாமாகவே சில விளக்கங்களை கொடுக்க முன்வந்ததாகவும், அப்போதே மத்தியஸ்தம் தொடர்பான பேச்சு எழுந்ததாகவும் புதுடில்லியில் இருந்து கிடைத்த தகவல்கள் கூறுகின்றன.

மத்தியஸ்தம் தொடர்பான இந்திய அரசின் நிலைப்பாடும் சந்திரிக்கா அம்மையாருக்கும், இலங்கை ஆட்சியாளர்களுக்கும் ஏமாற்றத்தையே கொடுத்திருக்கிறது.

இந்தியா மத்தியஸ்தம் வகிக்காது என்று இந்தியா கூறியதே தவிர, மத்தியஸ்தம் அவசியமில்லை என்றோ, வேறு நாடுகள் மத்தியஸ்தம் வகிக்கும் தேவை கிடையாது என்றோ இந்தியா கூறவில்லை.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை அறவே விரும்பாத சந்திரிக்கா அரசுக்கு, மத்தியஸ்தம் செய்யத் தயார் என்று முன்வரும் நாடுகளும், பிரமுகர்களும் எரிச்சலையே கொடுத்து வருகின்றனர்.

பிரிட்டனின் ஜனநாயகக் கட்சி எம்.பி. சிமன் ஹக்ஸ்சுக்கு ஏற்பட்ட அனுபவம் ஆட்சியாளரின் மனப்போக்கை படம்பிடித்துக் காட்டியிருக்கிறது.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வகிக்க தயார் என்று அவர் கூறினார் என்பதற்காக, அவர் இலங்கை வந்தால் எந்தவொரு அமைச்சரும் சந்திக்கமாட்டார்கள் என்று இலங்கை அரசு அறிவித்து, தனது எரிச்சலை வெளிக்காட்டியிருந்தது.

பிரிட்டன், ஃபிரான்ஸ் போன்ற நாடுகளது வெளிநாட்டமைச்சர்களும் தமது நாடுகள் மத்தியஸ்தம் வகிக்க தயார் என்றே கூறி வருகின்றனர். அவர்களிடம் தமது எரிச்சலை காட்ட இயலாத ஆட்சியாளர்கள் பிரிட்டிஷ் எம்.பி.யிடம் தமது எரிச்சலை காண்பித்துள்ளனர்.

இந்நிலையில் மத்தியஸ்தம் தேவை இல்லை என்று இந்தியா கூறவேண்டும் என்பதையே இலங்கை ஆட்சியாளர்கள் எதிர்பார்த்தனர்.

அவ்வாறு இந்தியா கூறுமானால் பிரிட்டன், ஃபிரான்ஸ், தென்னாபிரிக்கா போன்ற நாடுகள் ஒதுங்கிக்கொள்ளும் என்று ஆட்சியாளர்கள் நினைக்கின்றனர்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வேண்டாம் என்று தாம் கூறுவதை உலகம் சந்தேகக் கண்கொண்டு நோக்க ஆரம்பித்துள்ளதால், தாமாக மறுக்காமல் இந்தியாவில் பாரத்தை போட்டுவிடலாம் என்றே ஆட்சியாளர்கள் விரும்புகின்றனர்.

ஆனால் இந்திய அரசு பிடி கொடாமல், தன் நிலையை மட்டும் கூறிவிட்டு நழுவிவிட்டது. இந்திய அரசின் இக்கூற்று புதியதல்ல. எதிர்பாராத கருத்துமல்ல. ஏற்கனவே பாதுகாப்பமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் கூறிய கருத்தே இதுவாகும்.

இனப்பிரச்சனை விடயத்தை பற்றி வாஜ்பேயி எதனையும் பிரஸ்தாபிக்கவில்லை, உங்கள் பிரச்சனையை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்று இந்தியா ஒதுங்கி இருக்கக்கூடாது என தமிழக பத்திரிகைகள் சில கருத்து வெளியிட்டிருந்தன.

ஏதோ இலங்கை அரசுக்கு சாதகமாக இந்தியா நடந்துகொண்டதுபோன்ற தோற்றப்பாட்டையும் சிலர் கிளப்பியிருந்தனர்.

ஆனால், நாம் முன்பே இந்தப் பகுதியில் குறிப்பிட்டதுபோல, உதவியும் இல்லை, உபத்திரவமும் செய்யமாட்டோம் என்றளவிலேயே வாஜ்பேயி நடந்துகொண்டுள்ளார். ஆகவே தமிழ் பேசும் தரப்புக்கு பாதகமான நிலைப்பாடாக கொள்ள இடமில்லை.

இலங்கை ஆட்சியாளர்களுக்கே பலத்த ஏமாற்றம் கிடைத்திருக்கிறது. மிகப் பெரும் வர்த்தக உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டும்கூட, இலங்கை அரசை உள்நாட்டுப் பிரச்சனையில் தாங்கி நிற்கும் கருத்து எதனையும் இந்தியா கூறவில்லை.

இந்திய ஜனாதிபதி நாராயணன் சந்திரிக்கா அம்மையாரை சார்க் தலைவி என்றவகையிலேயே பாராட்டியுள்ளார். அதுவும் ஒரு சம்பிரதாயமான பாராட்டேயாகும். தவிர, ஜனாதிபதி நாராயணன் இலங்கை இனப்பிரச்சனையை நன்கறிந்த ஒருவரல்ல.

ஆனால், இந்தியப் பிரதமராக தேவகவுடாவோ, ஐ.கே.குஜ்ராலோ பதவி வகித்திருந்தால், வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்தான மகிழ்ச்சியில் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையாரின் உச்சி குளிரும்படியான கருத்துக்களை உதிர்த்திருக்கக்கூடும்.

எனவே, ஜனாதிபதி சந்திரிக்காவின் இந்திய விஜயம் இனப்பிரச்சனை விவகாரத்தில் இலங்கை அரசுக்கு எவ்வகையிலும் அரசியல், இராணுவ சாதகத்தை ஏற்படுத்தவில்லை என்பது தெளிவாகிறது.

ஆனால், ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார் மத்தியஸ்தம் பற்றிய கேள்விகளுக்கும், இனப்பிரச்சனை தொடர்பான கேள்விகளுக்கும் விளக்கமளிக்க வேண்டியவராக இருந்தார்.

அந்தளவுக்கு இலங்கை இனப்பிரச்சனை சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று என்பதும், தென்னாசிய பிராந்தியத்தில் பிரதான பிரச்சனைகளில் ஒன்றாக விளங்குகிறது என்பதையும் ஜனாதிபதியே ஏற்றாக வேண்டியவராகிறார்.

இந்தியப் பிரதமர் வாஜ்பேயி தாம் செல்லும் இடமெங்கும் காஷ்மீர் பிரச்சனை பற்றியோ, ஏனைய உள்நாட்டு பிரச்சனைகள் பற்றியோ பிரஸ்தாபிப்பதில்லை.

ஆனால் இஸ்ரேலிய பிரதமர் எங்கு சென்றாலும் பாலஸ்தீன பிரச்சனை பற்றி குறிப்பிட்டேயாக வேண்டும்.

ஏனெனில் காஷ்மீர், மற்றும் பஞ்சாப் பிரச்சனைகள் போலன்றி பாலஸ்தீன பிரச்சனை ஒரு சர்வதேச பிரச்சனையாகும்.

இலங்கை இனப் பிரச்சனையும் அதுபோன்றே முக்கியத்துவமுடைய பிரச்சனையாக மாறியுள்ளது.

விடுதலைப் புலிகளையும், அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனையும் பயங்கரவாதிகள், தேடப்படுபவர்கள் என்று இலங்கை அரசு பிரகடனம் செய்திருக்கிறது.

ஆனால், இலங்கை அரசோ அதன் ஜனாதிபதியோ கூறிவரும் கருத்துக்கள் புலிகளை அரசியல் இராணுவ தலைமையாக அரசே அங்கீகரிப்பதையே உணர்த்தி நிற்கின்றன.

"வேலுப்பிள்ளை பிரபாகரன் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றி கூறியுள்ளாரே?" என்ற கேள்விக்கு, 'பயங்கரவாதிகளது கருத்துக்கு பதில் சொல்ல மாட்டேன்' என்று ஜனாதிபதியால் மறுக்க இயலவில்லை. விரிவாகவும், விளக்கமாகவும் பதிலளிக்க வேண்டியவராகிறார்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றி பிரபாகரன் பிரஸ்தாபித்த பின்னர் ஆட்சியாளர்கள் தடுமாறிக்கொண்டிருக்கின்றனர்.

அதனை முற்றாக நிராகரிக்க காரணம் எதுவும் இல்லாத நிலையில், இந்தியப் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில், "உரிய தருணத்தில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றி பரிசீலிப்பதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

'உரிய தருணம்' என்ற கூற்று இழுத்தடிப்புக்கு ஏற்ற அழகான மேற் பூச்சேயாகும். ஆனாலும், அவ்வாறு கூறும் நிலைக்கு ஜனாதிபதிக்கு நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டுள்ளன என்பது புலனாகிறது.

இந்தியப் பத்திரிகையாளர்களுக்கே ஜனாதிபதி அவ்வாறு கூறவேண்டியிருந்தமையானது, மூன்றாம் தரப்பு மத்தியஸ்த கோரிக்கைக்கு இந்தியாவிலும் வரவேற்பு இருப்பதை ஜனாதிபதி உணர்ந்து கொண்டதால் கூறப்பட்ட கூற்றாகவே கருதவேண்டியுள்ளது.

எனவே, வர்த்தக உடன்படிக்கையை சாக்காக வைத்து இந்திய அரசிடமிருந்து தீர்வுப் பொதி, மத்தியஸ்தம், புலிகள் தொடர்பாக தனக்கு சாதகமான கருத்துக்களை இலங்கை அரசு எதிர்பார்த்திருந்தால், அதற்கு நேர்மாறாகவே நிகழ்வுகள் அமைந்துள்ளன. ●

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

## இரண்டு எம்.பிகள் யாருக்கு?

ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர் சுரேஸ் பிரதமச்சந்திரனுக்கு மீன்பிடி ஆலோசகர் பதவி, சமிட் பிளேஸில் வீடு, வாகனம் என்று அரசு கொடுத்திருக்கிறது. அவரது சகோதரருக்கு விரிவுரையாளர் வேலையும், மொழி அமுலாக்கல் அமைச்சில் வேலையும் கிடைத்திருக்கிறது.

அதனால் மேலும் முன்னேற்றம் கருதி புலிகளை கடுமையாக சாடும் ஒருவராக தன்னை முன்னிறுத்த முயன்று வருகிறார்.

பொதுஜன முன்னணியில் இரண்டு எம்.பிகள் புதிதாக நியமிக்கப்பட உள்ளதாக செய்திகள் வெளியாகி இருந்தன.

அந்த எம்.பி பதவியை குறிவைத்த சுரேஸ் தமக்கே அந்தப் பதவி கிடைக்க உள்ளதாக கதையை பரப்பினார். ஆங்கிலப் பத்திரிகைகள் ஊடாக செய்தி வெளியானால், அதனை அம்மையார் கண்ணுற்று, தன் பெயர் பரிசீலிக்கப்பட்டு பதவி தரக்கூடும் என்று நினைத்தார்.

ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு கதை எட்ட வைத்தார், செய்தியும் வெளியானது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்புக்கு இரண்டு எம்.பி. பதவிகள். சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கும், மட்டக்களப்பு அமைப்பாளர் துரைரத்தினத்திற்கும் எம்.பியாகும் வாய்ப்பு உள்ளது என்று செய்திகள் வெளியாகின.

அம்மையார் மனம் இரங்கவில்லை. வேறு ஆட்களுக்கு பதவி கொடுக்க தீர்மானித்து விட்டார். கனவு பலிக்கவில்லை.

இப்போது ஒரு ஆங்கிலப் பத்திரிகையாளர் ஒருவரின் பெயரைக் கூறி அவர்தான் கதை கட்டிவிட்டவர் என்று பழிபோடுகிறார்கள்.

அவர் கதை கட்டினார் என்றால், இவர்கள் ஏன் மறுக்கவில்லை? அரசு தரும் எம்.பி. பதவி வேண்டாம் என்று ஏன் அறிக்கை விடவில்லை? தமிழ் எம்.பிகள் தங்கள் பதவிகளை துறக்க வேண்டும் என்று சுரேஸ் முன்னர் கூறியிருந்தார். தனக்கும் கிடைக்கும் என்றதும் பறக்கிறார். எல்லாம் சீச்சீ இந்தப் பழம் புளிக்கும் என்ற கதைதான்.

ஈ.பி.டி.பி. முகாமை தாக்கி நிர்மூலமாக்கி, கிடுகிடுக்க வைத்த(?!) பெருமையிலும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர் சுரேசுக்கு பெரும் பங்கு உண்டு.

சுரேஸ் தலைமையில் முன்னொரு காலத்தில் கிளிநொச்சி பொலிஸ் நிலையம் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரால் தாக்கப்பட்டது. பயங்கரமான தாக்குதல். மொத்தம் ஐந்து மரக் கொப்புகளுக்கு பலத்த சேதம். படையினருக்கோ, முகாமுக்கோ சேதமில்லை. 50 படையினர் பலி, பொலிஸ் நிலையம் பாரிய நாசம் என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். அறிக்கை வெளியிட்டது.

இந்தியப் படை காலத்தில் பிரபாகரனுக்கு பொட்டு வைத்து இறுதி அஞ்சலி செய்ததும் ஈ.பி.ஆர்.எல்.எஃப்தான்.

இந்தப் பட்டியலில் ஈ.பி.டி.பி. நெடுந்தீவு முகாமை புலிகள் தாக்கி நிர்மூலமாக்கினர். என்று சுரேஸ் செய்தி ஊடகங்களுக்கு கொடுத்த செய்தியையும் சேர்த்துக் கொள்ளலாம்.

இதனால் அறியப்படும் நீதி ஒன்று உள்ளது. அது யாதெனில்:

புலிகள் தம்மில் ஒரு கட்சியை தாக்கினால் மறு கட்சிக்கு ஏகப்பட்ட சந்தோசம். ஈ.பி.டி.பி. முகாம் தாக்கப்பட்டு நூறுபேர் பலியாகி இருந்தால் ஈ.பி.ஆர்.எல்.எஃப்புக்கு சந்தோசம்தான்.

அதேபோல புளொட் முகாமை தாக்கினால் ஈ.பி.டி.பி.க்கு சந்தோசம், ரெலோ முகாம் தாக்கப்பட்டால் புளொட்டுக்கு சந்தோசம்.

ஆனால் அறிக்கை விடும்போது ஒப்பாரி. கண்ணீர். புலிகள்தான் ஜனநாயக விரோதிகள், தாம் ஒற்றுமை விரும்பிகள் என்று கூவல்.

சக கட்சிகளை புலிகள் தாக்குகிறார்கள் என்பதால் எந்தவொரு தமிழ்க் கட்சியும் புலிகளை எதிர்க்கவில்லை. தம்மை விட்டுவிட்டு ஏனைய கட்சிகளை தாக்கினால் சந்தோசப்படும் நிலையிலேயே ஒவ்வொரு கட்சியும் இருக்கின்றன.

எனவே, சகோதரப் படுகொலைகள் பற்றி பேசும் யோக்கியதை இன்று எந்தவொரு தமிழ்க் கட்சிக்கும் கிடையாது. வாய்ப்புக் கிடைத்தால் இக் கட்சிகள் தங்களுக்குள் ஒன்றை ஒன்று விழுங்கவும் தயாராகவே உள்ளன. ■



படிப்பகம்

www.padippakam.com

உண்மைத் தொடர்

அதிர் இடி 43

கடந்தவாரம்

இரு அமைச்சர்களையும் பிஷப்பாண்டவரையும் தீர்த்துக்கட்டிய அமீன், அமைச்சர்களது குடும்பத்தினருக்கு உதவிகள் செய்து நாடகமாடுகிறான். அமீனின் அடக்குமுறைக்கு எதிர்ப்புக்கள் வலுக்கின்றன. அமீனைத் தீர்த்துக்கட்ட ஒரு குழு தயாராகிறது. இனி...

# இடி அமீன்

அமீனைத் தீர்த்துக்கட்டு திட்டம் போட்டவர்கள் மாணவர்கள். ஒரு குழுவாக அவர்கள் செயற்பட்டனர். ஒட்டோவா என்னும் மாணவன் அக் குழுவுக்கு தலைமை தாங்கினான்.

அவர்கள் பத்துப்பேர்தான் இருந்தார்கள். அதிகம்பேர் சேர்ந்தால் ஆபத்து. இரகசியம் அம்பலமாகிவிடும் என்பதால் பத்துப்பேர் மட்டும் போதும் என்று நினைத்தனர்.

அமீனின் இராணுவத்தினர் சிலர் ஆயுதங்கள், தோட்டாக்கள் என்பவற்றை மலிவு விலையில் இரகசியமாக விற்றனர்.

அமீனும், உயரதிகாரிகளும் சொகுசாக கொட்டமடித்துத் திரிந்ததால், இராணுவத்தினருக்கு அரச விசுவாசம் அடியோடு இல்லாமல்போனது.

ஆயுதங்களைத் திருடி உள்நாட்டிலும், எல்லைதாண்டி கடத்திப்போய் வெளிநாட்டிலும் விற்றுப் பணமாக்கினார்கள்.

அவ்வாறு விற்ற ஒரு இராணுவ சிப்பாயிடம் சில துப்பாக்கிகளை மாணவர்குழு விலைக்கு வாங்கிக்கொண்டது.

அமீன் தனது வீட்டிலிருந்து புறப்பட்டு, காரில் ஏறியதும் திடீரென்று தாக்குதல் நடத்தத் திட்டமிட்டார்கள்.

அமீன் காரில் ஏறியதும், அவனது பாதுகாப்புப் படையும் வாகனங்களுக்குள் தாவும். அந்த நேரம்தான் எதிர்பாராத தாக்குதல் நடத்த உகந்த நேரம் என்று தீர்மானித்தனர்.

அமீனின் கார் கண்ணாடிக் கதவை உடைத்துவிட்டு உள்ளே வீசுவதற்கு கைக் குண்டுகளும் வாங்கி வைத்திருந்தனர்.

அமீனுக்கு பலவீடுகள்; பல மனைவியர்; எப்போது எங்கு செல்லுவான் என்பது எவருக்கும் தெரியாது. அமீனேகூட கடைசி நேரத்தில்தான் எந்த மனைவி வீட்டுக்குப் போவது என்பதைத் தீர்மானிப்பான்.

அதனால் மாணவர் குழுவுக்கு தமது திட்டத்தை நிறைவேற்றுவது சிரமமாக இருந்தது.

அவர்கள் எதிர்பாராத சிக்கல் ஒன்றும்



ஏற்பட்டுவிட்டது.

அவர்களது குழுவைச் சேர்ந்த இரண்டுபேர் உகண்டா இராணுவத்தினரால் சந்தேகத்தின்பேரில் கைதானார்கள்.

இடி அமீனுக்கு எதிராக அதிருப்திகள் தலைதூக்கத் தொடங்கிய பின்னர் பலர் சந்தேகத்தின்பேரில் கைதானார்கள்.

அப்படித்தான் அந்த மாணவர்கள் இருவரும் கைதானார்கள். கைதானவர்களை நாலு உதை உதைத்துவிட்டு சில நாட்கள் தடுத்து வைத்திருப்பார்கள். பின்னர் விடுதலை செய்வார்கள்.

தகவல் கிடைத்து கைது செய்தால் மட்டும் சித்திரவதை கடுமையாக இருக்கும். சித்திரவதை தாங்கமாட்டாது பலர் இறந்துபோனார்கள்.

தம்மில் இருவரும் தகவல் கிடைத்துத்தான் கைதானார்களோ என்று மாணவர் குழு பயந்து போனது.

சித்திரவதை தாங்காது அவர்கள் உண்மைகளைக் கூறிவிடுவார்கள். அதற்குள் அமீனைத் தீர்த்துக்கட்டியாக வேண்டும் என்ற அவசரம் தொற்றிக்கொண்டது.

மறுநாள் காலையிலேயே திட்டத்தைச் செயற்படுத்த கார் ஒன்றில் எட்டுப் பேரும் புறப்பட்டனர்.

அமீனின் மனைவியர் வீடுகளை முன்கூட்டியே அறிந்து வைத்திருந்ததால் அவற்றில் சில வீடுகளுக்கு முன்பாக நின்று நோட்டமிட்டனர்.

அமீன் இருந்தால் பாதுகாப்புப் படையின் சலசலப்பு இருக்கும். அதை வைத்தே அறிந்து கொள்ளலாம்.

மத்வானிக்குச் சொந்தமான பங்களாவில் அமீன் தங்கியிருக்கிறான் என்பதை இறுதியாக கண்டு பிடித்தனர்.

அங்கு வைத்தே கதையை முடிக்க தயாராகினர். அதுதான் அவர்கள் செய்த மிகப் பெரிய தவறு.

பங்களாவின் உச்சியில் இருக்கும் காவலாளிகளால் தாம் கண்காணிக்கப்படுகின்றனர் என்பதை அவர்கள் அறியவில்லை.

வெளியே இருந்து பார்த்தால் தெரியாதளவுக்கு பங்களாவின் உச்சியில் கண்காணிப்பு கோபுரம் அமைக்கப்பட்டிருந்தது.

தொலைநோக்கி பொருத்தப்பட்ட துப்பாக்கியோடு அங்கு இரண்டு இராணுவ சிப்பாய்கள் காவல் புரிந்தனர்.

பங்களாவிற்கு சற்றுத் தொலைவில் மாணவர்குழுவின் நடமாட்டத்தை அவர்கள் கவ



னித்தனர்.

பங்களா வாயிலின் உள்ளேதான் காவல் இருக்கும். வெளியே தெரியும்படியான பாதுகாப்புக்களை குறைத்து, இரகசிய கண்காணிப்புக்களை பலப்படுத்துமாறு அமீன் கூறியிருந்தான்.

"எங்கள் விரோதிகளுக்கு தெரியாமல் அவர்களை நாங்கள் அவதானிக்க வேண்டும். கெட்ட நோக்கத்தோடு வருபவனும், பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கண்டால் நெருங்கிவர மாட்டான். அதனால் இரை நம்மைத் தேடி வரத்தக்க ஏற்பாடுகள்தான் இந்த அமீனுக்கு பிடிக்கும்!" என்று புலனாய்வுப் பொறுப்பாளரிடம் கூறியிருந்தான்.

அதன்பின்னரே அமீன் தங்கும் இடங்களில் இரகசியக் கண்காணிப்புக்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த ஏற்பாடுகள் எதுவும் தெரியாமல் மாணவர் குழு தாக்குதலுக்குத் தாயரானது.

பங்களாவில் இருந்து அமீன் புறப்பட்டுச் செல்லும் பாதையின் ஓரத்தில் காரை நிறுத்தியிருந்தனர்.

நான்குபேர் காருக்குள் இருக்க, ஏனைய நான்குபேர் அருகிலுள்ள மதகு ஒன்றுக்குள் சென்று பதுங்கிக் கொண்டனர்.

அந்த மதகு வழியாக அமீனின் பங்களா வாயிலுக்கு எதிரே போய்ச் சேரலாம்.

நான்குபேர் மதகு வழியாக விரைந்து சென்று தாக்குவது. ஏனையோர் அமீனின் வாகனம் முன்பாக காரை நிறுத்தி மறித்து வைத்துத் தாக்குவது என்பதுதான் முடிவான தீர்மானம.

எல்லாமே அமோகமான ஏற்பாடுகள்தான். ஆனால் மேலிருந்தே வெகு தெளிவாக இவர்களது ஒவ்வொரு நகர்வும் உற்று நோக்கப் பட்டுக் கொண்டிருந்தது.

நேரம் கரைந்து கொண்டே இருக்க, காத்திருந்த மாணவர் குழுவுக்குப் பொறுமை தகர்ந்துகொண்டிருந்தது.

தருவது
ரசிகன்

அவர்களது பின்புறமிருந்து சில இராணுவ வாகனங்கள் பங்களா நோக்கி வந்து கொண்டிருந்தன.

மாணவர்கள் இரண்டுபேர் காரில் இருந்து கீழிறங்கி, காரில் ஏதோ பழுதுபார்ப்பது போல பாவனை செய்து கொண்டிருந்தனர்.

மதகுக்குள் இருந்தவர்கள் தம்மை மறைத்துக் கொண்டனர்.

காரைக் கடந்து சென்றன இராணுவ வாகனங்கள். 'அப்பாடா' என்று நிம்மதியாக பெருமூச்சுவிட்டனர் மாணவர் குழுவினர்.

அந்த நிம்மதி அரை நொடிகூட நிலைக்கவில்லை.

சட் சட்டென்று தமது வாகனங்களில் இருந்து குதித்த இராணுவத்தினர் அசுர வேகத்தில் காரைச் சுற்றிவளைக்க, இன்னொரு பிரிவினர் மதகுக்குள் பாய்ந்து, அங்கு பதுங்கி இருந்தவர்களை கோழிக் குஞ்சுகளை அமுக்கு வதுபோல அமுக்கினார்கள்.

எதிர்ப்புக் காட்ட சந்தர்ப்பமே இல்லாமல் எட்டுப் பேரும் கைது செபயப்பட்டு, இராணுவ வாகனங்களுக்குள் வீசியெறியப்பட்டனர்.

பூட்ஸ் கால்கள் அவர்களை மிதித்து மிதித்து பதம் பார்த்தன. அமீனின் பங்களாவுக்குள் புகமுன்பாகவே, எட்டுப்பேரும் குற்றுயிராகிவிட்டனர்.

இரத்தம் சொட்டச் சொட்ட கைகள் பின் புறமாய் பிணைக்கப்பட்ட நிலையில் அமீன் முன்பாக நிறுத்தப்பட்டனர்.

அமீன் முகம் இறுக்கமாக இருந்தது. எட்டுப்பேரையும் தன் கண்களால் மேலும் கீழுமாக அளவெடுத்தான்.

"நீங்கள் எல்லாம் பெரிய புரட்சிக்காரர்களாக்கும். இந்த அமீனைத் தீர்த்துக்கட்ட எவனும் இன்னும் பிறக்கவில்லை தெரியுமா? பிறந்தாலும் உயிரோடு இருக்கமுடியாது!" என்று சிரித்தான்.

"உங்களுக்கு யார் தலைவன்? யார் அந்த... மகன்?" என்று கெட்ட வார்த்தையை உபயோகிக்க, "நான் தான் தலைவன்!" என்றான் ஒட்டாவா.

"ஓ! நீதானா அந்த வீராதி வீரன்?" என்றவன் அவனை நெருங்கி, அவனது வயிற்றில் குத்தினான். சட்டென்று கைகளை வீசி அவனது விதைகளைப் பிடித்து நசுக்கினான்.

ஒட்டோவாவுக்கு உயிர் நிலை துடித்தது. வலி தாங்காமல், தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் 'ஓ'வென்று கத்தினான்.

அவன் கைகள் கட்டப்பட்டிருந்தன. அவன் கால்களும் பிணைக்கப்பட்டிருந்தன. இல்லையானால் அமீனின் கழுத்தை நெரித்திருப்பான்.

அமீன் அவனது கதறலை இரசித்தபடியே, விதைகளைத் தொடர்ந்து நசுக்கினான்.

ஒட்டோவா அப்படியே மயங்கிப் போனான். மடங்கி சரிந்து போனான்.

தன்னைச் கொல்ல வந்தவர்களை அணு அணுவாகச் சித்திரவதை செய்து கொல்ல வேண்டும் என்று அமீன் விரும்பினான்.

"ஆசைதீர உங்களை வதைக்கப்போகிறேன். உடனே கொல்ல மாட்டேன்!" என்று கத்தினான்.

மிகுதியாய் நின்ற ஏழு பேரையும் ஒட்டோவாவுக்கு செய்தது போலவே, மிகப் பொறுமையாக ஒவ்வொருவராக விதைகளை நசுக்கினான். அவர்கள் மயங்கிவிழும்வரை வேடிக்கை பார்த்தான்.

"எட்டுப் பேரையும் மயக்கம் தெளிந்த பின்னர் தீர விசாரியுங்கள். இவர்களது கூட்டாளிகளை கூண்டோடு அள்ள வேண்டும். பின்னர் கொல்ல வேண்டும்!" என்றுவிட்டுப் புறப்பட்டான்.

மயக்கம் தெளிந்த பின்னர் தாக்கப்பட்டதில், வேறு வழியின்றி ஏற்கனவே கைதான இரண்டு பேரும் தங்கள் கூட்டாளிகள் என்ற உண்மையைக் கக்கிவிட்டனர்.

சந்தேகப்பட்டியலில் தடுத்துவைத்த அந்த இருவரையும் அன்றுதான் விடுதலை செய்ய இருந்தனர். விஷயம் தெரிந்ததால் அவர்களையும் சித்திரவதை முகாமுக்கு கொண்டுவந்தனர்.

"மேலும் யார் இருக்கிறார்கள்?" என்று கேட்டு பத்துப்பேரையும் வாட்டி எடுத்தனர்.

யாரையாவது சொன்னால்தான் வாட்டுவதை நிறுத்துவார்கள் போலிருந்தது. தங்களுக்குத் தெரிந்த, நினைவில் வந்த பெயர்களையெல்லாம் மாணவர்கள் பத்துப்பேரும் உளறினார்கள்.

அதனால் எவ்வித தொடர்பும் இல்லாத இருபத்தைந்து மாணவர்கள்வரை கைதாகி, சித்திரவதை முகாமுக்கு கொண்டுவரப்பட்டனர்.

அமீனைக் கொல்லத் திட்டமிட்ட 35 பேர் கைது செய்யப்பட்டதாகவும், அவர்களிடம் இருந்து வெளிநாட்டு சதிக்கான ஆதாரங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் உகண்டா வானொலி வடிகட்டின பொய்களைக் கூறியது.

தாங்கள் சந்தேகப்படும் சிலரது பெயர்களைக் கூறி "இவர்களும் உங்களுக்கு உடந்தையா?" என்று புலனாய்வாளர்கள் கேட்டார்கள்.

"இல்லை' என்று உண்மையைக் கூறினால் உதைவிழும்.

"தெரியுமா? சொல்லுடா?"

"தெரியாது!"

"பொய் சொல்லாதே நாயே. உனக்குத் தெரியும்...!" சொல்லிச் சொல்லி பூட்ஸ்களால் ஏறி மிதிப்பார்கள்.

"தெரியும்!" என்று மாணவர்கள் பொய் சொல்வார்கள்.

அவ்வாறு கைதானவர்களும் பலர் இருந்தனர். அவர்கள் யார் என்பதே அந்த மாணவர் குழுவுக்கு தெரிந்திருக்கவில்லை.

இறுதியில் மாணவர் குழுவும், அநியாயமாக கைதானோருமாருமாக 40 பேர் ஒரு நாள் நள்ளிரவு வரிசையாக நிற்க வைக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அவர்கள் சுட்டுக் கொல்லப்படும் காட்சியை அமீன் நேரடியாகக் கண்டு இரசித்து, கரகோஷம் செய்து மகிழ்ந்தான்.

(இடி தொடரும்)

# சாமியார்கள் சமாச்சாரம்



பெண் வேசத்தில்

தமிழ்நாட்டில் சென்னையில் தாம்பரம் பகுதியில் வித்தியாசமான சாமியார் ஒருவர் இருக்கிறார்.

பெண்களை மேயும் சாமியார்கள் மத்தியில் இவர் பெண்போலவே காட்சியளித்த சாமியார்.

சேலை அணிந்து, நகை நட்டு குங்குமம் தரித்து நடுத்தர வயது அழகிச் சாமியாராக காட்சியளித்தார். ஜோதிவேல் சாமி என்று அழைக்கப்பட்டார்.

இவருக்கு தமிழக உயர் பொலிஸ் அதிகாரிகளும் பக்தர்களாக இருந்தனர். எல்லோருக்கும் குறி சொல்லுவாராம்.

இந்தச் சாமியாரிடம் பணம் சேர்ந்ததைக் கண்ட இன்னொரு சாமியான வித்தியானந்தகிரி சாமியார் இவரை வளைக்க திட்டம் போட்டார். "ஃஃ வாரிசாக உன்னை அறிவிக்கிறேன்" என்று அழைத்தாராம்.

ஜோதிவேல் சாமியும் அதனை நம்பி வித்தியானந்தகிரி சாமியின் ஆசிரமத்தில் போய் தங்கினாராம்.

வித்தியானந்தகிரி சாமியாரிடம் சொத்துக்கள் இருந்ததால், அவரது வாரிசாக அறிவிக்கப்பட்டால் அவற்றை தானே அமுக்கலாம் என்று நினைத்தார் ஜோதிவேல் சாமி. அதனால் வித்தியானந்தகிரி கேட்ட பணத்தையும் கொடுத்தார் ஜோதிவேல் சாமி.

ஜோதிவேல் சாமியை பெண் வேடத்தில் பார்த்ததில் இருந்தே வித்தியானந்தகிரி சாமிக்கு அவர்மீது ஒரு கண். அந்த தப்பான ஆசையையும் நிறைவேற்றப் பார்த்தாராம். அதற்கு உடன்பட மறுத்ததால் இருவருக்கும் இடையே மோதல் மூண்டு, இன்று பொலிஸ் நிலையம் வரை சென்றுள்ளது.

"பெண்வேசமிட்டு குறி சொன்ன என்னை, வாரிசாக அறிவிப்பதாகக் கூறி மொட்டையடித்துவிட்டனர். பணத்தையும்



மொட்டையடித்தபின்

பிடுங்கிவிட்டனர்" என்று தலையில் அடித்து புலம்புகிறது ஜோதிவேல்சாமி.

ஊருக்கு குறிசொல்ல புறப்பட்ட சாமிக்கு, தன் விதி தெரியவில்லை.

# சினிமா உலகை ஏமாற்றிய கும்பல்

சில மாதங்களுக்கு முன்னர் தமிழ் நாட்டில் நீலப்பட கசட்டுக்களுடன் ஒரு கும்பல் மாட்டியது நினைவிருக்கலாம். அக் கும்பலுடன் தொடர்புடைய நடிகைகள் கதிகலங்கிப் போயிருந்தனர்.



இப்போது இன்னொரு மோசடிக் கும்பல் கைது செய்யப்பட்டுள்ளது.

பட அதிபர்களுக்கு கடன் உதவி செய்வதாகக் கூறி, தந்திரமாக பணம் பறிக்கும் கும்பலே கைது செய்யப்பட்டுள்ளது.

ஒரு கோடி ரூபாய் கடன் தருவதாக கூறி, அதற்கான பத்திரங்களை தயாரிக்க என்று ஒரு இலட்சம் வரை பெற்றுக் கொள்வார்கள். பின்னர் ஏமாற்றி விடுவார்கள்.

இந்த ஏமாற்று நாடகத்தின் உச்சக் கட்டமாக வைர வியாபாரி ஒருவரை செமர்த்தியாக ஏமாற்றி 67 இலட்சம் ரூபாய் பிடுங்கியுள்ளனர். நூறுகோடி ரூபாய் கடன் தருவதாக கூறியே இந்த பாரிய மோசடி நடந்திருக்கிறது.

நம்பும்படியாக வங்கிப் பத்திரங்களும் போலியாக தயாரித்து வைத்திருந்தனராம்.

இவர்களிடம் கடன் பெறுவதற்காக சில தயாரிப்பாளர்கள் நடிகைகளையும் இவர்களிடம் அறிமுகப் படுத்தி உள்ளனர்.

அதுதவிர இவர்களின் தயவு கிட்டினால் புதிய படங்களில் நடிக்கலாம் என்பதால், இவர்களுடன் பல நடிகைகள் நெருங்கிப் பழகியும் உள்ளனர்.

தற்போது மோசடிக் கும்பல் கைதாகியுள்ளதால், அவர்களுடன் நெருக்கமாக இருந்த நடிகைகள் பற்றிய விசாரணைகளும் நடந்து வருகின்றன.

இத் தகவல் நெருங்கி உறவாடிய நடிகைகள் பலருக்கு வயிற்றில் புளியை கரைத்திருக்கிறது.

# அமெரிக்காவின் இரகசியம்



வளைகுடா யுத்தத்தில் ஈராக் இரசாயன ஆயுதத்தை பயன் படுத்தியதாக அமெரிக்கா குற்றம் சாட்டியிருந்தது.

ஆனால் இப்போது உண்மை அம்பலமாகியுள்ளது. அமெரிக்காதான் தனது படை வீரர்கள் சிலருக்கு ஒருவகையான இரசாயன ஊசிகளை ஏற்றிப் பரிசோதித்தது.

உடல் ஆரோக்கியத்துக்கு என்ற பெயரில் போடப்பட்ட அந்த ஊசிகள், குறிப்பிட்ட இரசாயனத்தின் தாக்கத்தை அறிய நடத்தப்பட்ட பரிசோதனையாம்.

தனது படைவீரர்களையே ஏமாற்றி பரிசோதனை நடத்திய அமெரிக்கா உலகையும் ஏமாற்ற முயன்றது.

ஈராக் இரசாயன ஆயுதத்தை ஏவியதால்தான் தன்படைவீரர்கள் சிலர் இரசாயண தாக்கத்துக்கு உள்ளானதாக உலகுக்கு கூறியது.

அமெரிக்காவின் இந்த இரகசியம் இப்போது பரகசியமாகிவிட்டது.

இதேவேளை ஈராக்மீது கிளின்ரன் நடத்திய தாக்குதலை அவரது கட்சி மட்டுமல்ல, எதிர்க் கட்சியும் ஆதரித்துள்ளது. ஆனால் இத் தாக்குதலால் கிளின்ரனின் பாலியல் ஊழல் மறைக்கப்படுவதைத்தான் எதிர்கட்சியால் தாங்க முடியவில்லை.

ஈராக் மட்டுமல்ல எண்ணெய்வள நாடுகளான அரபு நாடுகள் பலமாகிவிடக் கூடாது என்பதில் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் விழிப்பாக உள்ளன.

இந்த நாடுகள் இஸ்ரேலை ஆதரித்து வருவதும் அதனால்தான்.

ஈராக் மீதான அமெரிக்க தாக்குதலால் பின்லாடனின் ஆட்கள் அமெரிக்க, பிரிட்டன் நகர்களை குண்டுவெடிப்புக்களால் அதிரவைக்கலாம் என்ற சந்தேகம் உள்ளது.

# பறந்த பணம்

ஃபிரான்ஸில் வங்கி ஒன்றுக்கு சொந்தமான வேனில் பணத்தை ஏற்றிக் கொண்டு சென்றனர்.



பின்பக்க கதவு சரிவரப் பூட்டப்படாமல் இருந்தது. அதனால் இரண்டு பெரிய பண மூட்டைகள் ஓடும் வேனில் இருந்து கீழே விழுந்துவிட்டன.

ஒவ்வொன்றும் பத்து இலட்சம் பிராங்குகள் கொண்ட பணமூட்டைகள்.

ஒரு மூட்டையை கண்டெடுத்த தம்பதி மிகுந்த நாணயஸ்தர்கள். அதனை பத்திரமாக வங்கியிடமே ஒப்படைத்துவிட்டனர்.

இன்னொரு மூட்டை அவிழ்ந்து காற்றில் பறக்க, வீதியால் சென்றவர்கள் ஆளாளுக்கு கிள்ளிக்கொண்டு போய்விட்டனர். பத்து இலட்சம் பிராங்குகள் வங்கிக்கு நஷ்டம்.



படிப்பகம்

www.padippakam.com

## தகவல் பெட்டி



## பெரு முயலும் சிறு முயலும்

உலகில் மிகப் பெரிய முயலின் எடை 12 கிலோ. (26 இறாத்தல் 7 அவுன்ஸ்) ஆனால் அந்த முயல் தற்போது உயிருடன் இல்லை. 1980ம் ஆண்டு ஸ்பெயின் நாட்டில் ஐந்துமாத வயதுடன் அம் முயல் இருந்தது.

இன்று பெரிய முயல் படத்தில் இருப்பதுதான். இதன் எடை பத்து கிலோ. இதன் பெயர் பிளம்மிஸ் ஜெயன்ட்.

வலது புறம் இருப்பதுதான் இன்றுவரை உலகில் மிகச் சிறிய முயல். இதன் எடை 0.5 கிலோ. (900 கிராம்)

## குதிரை முகம்

↓ மனிதர் ஒருவருக்கு குதிரை முகமா? என்று பிரமிக்காதீர்கள். இது வித்தியாசமான படப்பிடிப்பு.

குதிரையின் வேகம் கண்டு மயங்காத மாந்தர் உண்டோ? அந்த வேகத்தை பெறாவிட்டாலும் உருவத்தை பெற்றதுபோல காண்பித்து மகிழுகிறார்கள். சுவாரசியமான படப்பிடிப்பு.






## நாய் நடை

↑ நம் நாட்டிலும் வீதிகளில் நாய்களை நடைப்பயிற்சியில் ஈடுபடுத்துவதை கண்டிருப்பீர்கள்.

நாய்களின் நடையழகை இரசிக்க என்றே உலகளாவியரீதியில் போட்டிகளும் நடக்கின்றன. அன்னநடை, மான் நடை, மயில் நடை வரிசையில் நாய் நடையையும் சேர்த்துக் கொள்ளலாம். அந்தளவு சிரத்தையாக ரசித்து ரசித்து போட்டி நடத்துகிறார்கள்.

ஒரே தடவையில் மொத்தம் 1086 நாய்கள் நடைபவனியில் பங்கேற்றன. அமெரிக்க கனெக்டிக்கட் மாநிலத்திலுள்ள மாஞ்செஸ்டர் நகரில் 1996 அக்டோபர் 6ம் திகதி இது நடைபெற்றது. மூன்று மைல் தூரம் நடைபெற்ற இப் பவனியில் இந்த நாய்களை வளர்த்து பராமரிக்கும் சிறுவர்களும் அவர்களுடைய பெற்றோரும் பங்குபற்றினர். வழிகாட்டும் நாய்கள் பராமரிப்புக்கான நிதி திரட்டுவதற்காகவே இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இது உலக சாதனையாகவும் பதிவு செய்யப் பட்டது.

மேலதிக தகவல் ஒன்று:

இஸ்ரேல் நாட்டில் ரெல்-அவிவ் நகரைச் சேர்ந்த ஆரன் பார் என்பவர் 'சிண்டி கிளியோ' என்றொரு நாயை வளர்த்தார் இது மொத்தம் 14 வருடம் 8 மாதங்கள் வரை வழிகாட்டும் பணியைப் புரிந்து உலக சாதனை படைத்திருக்கிறது. இந்தநாய் 1987 ஏப்ரல் 10ல் மரணமடைந்தது.

## மீன் குஞ்சு



வளரும் பிள்ளையை மண்விளையாட்டில் தெரியும் என்பார்கள். ஏன் நீர் விளையாட்டில் தெரியக்கூடாது? தெரிகிறார் பாருங்கள்.

இந்தப் பெண் குழந்தை ஹிமாதரி படேலுக்கு ஆக, இரண்டு வயதுதான். இந்தியாவில் மும்பையைச் சேர்ந்தவர்.

கடலில் ஒரு மணிநேரத்திற்கு மேல் நீந்தி உலகசாதனை படைத்திருக்கிறார். கேட்வே ஒஃப் இந்தியா என்னும் நிறுவனம் அமைத்திருந்த கடற்பரப்பில் இந்த அரிய சாதனை நிகழ்த்தப்பட்டது.

இந்த சின்னக் குழந்தையை நீந்துவதற்கு அனுமதித்த பெற்றோரை பாராட்டுவதா? விஷப்பரீட்சை என்பதா? மீன் குஞ்சாக மாறிவிட்டாளோ குழந்தை!

## ஆடையில்லாத ஆடவர்

→ உடல் முழுவதும் பச்சை குத்திக் கொண்டு காட்சி தருபவர் ரொம் லெப்டாட் (TOM LEPPARD). சிறுத்தையை ஆங்கிலத்தில் 'லெப்பேட்பேட்' (LEOPARD) என்று கூறுவார்கள். தனது பெயர் கிட்டத்தட்ட சிறுத்தைக்குரிய ஆங்கிலப் பெயருடன் ஒத்திருப்பதனாலோ என்னவோ இம்மனிதர் தனது உடம்பு பூராவும் சிறுத்தை போன்ற புள்ளிகளைப் பச்சை குத்திக் கொண்டுள்ளார்.

லெப்படின் காதுகளின் உட்பாகம் மற்றும் பாதங்களின் விரல்களுக்கிடையிலான தோலைத் தவிர உடலின் 99.9 வீதமான பகுதிகளில் புள்ளிகளாகப் பச்சை குத்திக் கொண்டு காட்சி தருகிறார். இவர் இராணுவத்தில் கடமை பார்த்து ஓய்வு பெற்றவர்.

இந்தச் சிறுத்தைக் கோலத்தில் சாதாரணமக்களுடன் சேர்ந்து வாழப் பிடிக்கவில்லைப்போலும். பிரிட்டனின் வட மேற்கேயுள்ள ஸ்கை தீவின் ஒரு புறத்தே தனியாக வாழ்ந்து வருகிறார்.


உலகில் இதுவரை பச்சை குத்தியவர்களில் இவர் மட்டும்தான் உடல் முழுவதும் பச்சை குத்தியவர் என்ற உலக சாதனை படைத்திருக்கிறார். உடலின் எந்தப் பகுதியையும் விட்டு வைக்கவில்லையாம். இவருக்கு ஆடையே தேவையில்லை.

## முகத்தில் சாதனை

படத்தில் காணப்படும் கிரேஸ்மாட்டின் என்ற மாது இங்கிலாந்தின் எடின்பரோவைச் சேர்ந்தவர்.

தனது உடலின் அங்கங்களில் மொத்தம் 290 குண்டு போன்ற வடிவங்கொண்ட ஆணிகளை அநாயாசமாகக் குத்திக் கொண்டு காட்சி தருகிறார்.

இத்தனை குண்டுகளை உடலில் குத்தியது உலக சாதனையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. 1998 ஜனவரி 31ம் திகதி இந்த உலக சாதனையை படைத்தார்.






படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 85

# கமல் மறுத்த காதல் செய்தி

## சின்னத்திரையை பிடித்த விநோதினி

தமிழ்நாட்டிலிருந்து மயன்

இந்தப்படங்களில் கமல் நடித்துக் கொண்டிருந்தபோது அவருக்கு அறிமுகமானவர் சரிகா. கமலோடு இரண்டு இந்திப் படங்களில் நடித்து இருக்கிறார்.

இருவருக்கும் இடையே காதல் உறவு இருப்பதாக மும்பை பத்திரிகைகளில் பரபரப்பாக செய்திகள் அடிபட ஆரம்பித்தன.

'ஜப்பானில் கல்யாண ராமன்' படப்பிடிப்பில் கமலைச் சந்தித்தேன். எங்களை தனியே அழைத்துக் கொண்டு ஒப்பனை அறை இருக்கும் ஆர்.ஆர். ரிக்கார்டிங் தியேட்டர்வரை வந்தார். பேசிக் கொண்டே நடந்தோம்.

சரிகா விஷயம் பற்றிய பரபரப்புப் பற்றி கேட்டபோது, "உண்மையில்லை பொய்" என்று மறுத்தார். "மும்பை சினிமா பத்திரிகைகளுக்கு பொய் ரொம்ப சாதாரண விஷயம்" என்றார்.

இதற்கு பின்னர் கமல் சரிகா காதல் பகிரங்கப் படுத்தப்பட்டது. கமலைவிட்டு வாணி பிரிந்து போனார். போனவர் சும்மாயிராமல், குமுதம் இதழில் கமலுடன் தனக்குள்ள முரண்பாடுகளைப் பற்றிச் சொன்னார்.

கமலும் பதிலுக்கு நாளிதழ் பேட்டி ஒன்றில் வாணியுடன் தனக்கேற்பட்ட பிரச்சனைகள் பற்றி சொன்னார்.

இவ்வாறு தமிழக சினிமா நிருபர் விஜயன் தன் அனுபவத்தைக் கூறியிருக்கிறார்.

அளவெடுத்து ரசிப்பவர் அந்த ஒளிப்பதிவாளர்.

ஆனால் விநோதினிக்கு குறுகிய காலத்திலேயே ஒளிப்பதிவாளரின் கட்டுப்பாட்டில் இருப்பது வெறுத்துப் போய்விட்டது. முறித்துக்கொண்டார்.

அதன்பின்னர் வேறு சில இயக்குநர்களை அனுசரித்து வாய்ப்புக்கள் வாங்கினார். காதலிலும் வீழ்ந்தார். ஒரு கட்டத்தில் எல்லாமே தோல்வி.

வாய்ப்பில்லாமல் இருந்தவரை தற்போது மறுபடி கைதூக்கிவிட்டது சின்னத்திரைதான்.

சின்னத்திரையிலும் பெண்கள் என்றால் அனுசரிப்பு எதிர் பார்க்கப்படுகிறது. தொலைக்காட்சித் தொடர் தயாரிப்பாளர் ஒருவர் விநோதினியுடன் கட்டிலைப் பகிர்ந்து கொள்ளு மளவுக்கு நெருக்கமானார்.

புளியங்கொம்பான அந்தத் தயாரிப்பாளரை கெட்டியாக பிடித்துக்கொண்டு சின்னத்திரை வாய்ப்புக்களை வாரியள்ளினார் நடிகை.

அப்படியே சின்னத்திரை வட்டாரத்தில் பலர் அறிமுகமாயினர். இரண்டெழுத்து தொலைக்காட்சி நிறுவன உயர்மட்டம் வரை அறிமுகம் கிடைத்தது.

அறிமுகம் பல கிடைத்ததால், ஏறிய ஏணியான அந்த தயாரிப்பாளரை எட்டி உதைத்துவிட்டார் நடிகை. தயாரிப்பாளர் நடிகைக்கு தான் செய்த உதவிகளை அழாக்குறையான கூறித்திரிகிறார்.

கிசுகிசு என்றாலே பொய் என்று கூறமுடியாது. பொறுப்பற்றரீதியில், தாமும் கிசுகிசு எழுதவேண்டும் என்பதற்காக எழுதுகிற நிருபர்களும் உள்ளனர்.

ஆனால் தகவல்களை அறிந்து எழுதப்படும் கிசுகிசுக்கள் காலப்போக்கில் உறுதிப்படுத்தப்பட்டு விடும்.

கமல்-சரிகா, பாக்யராஜ்-பூர்ணிமா, பார்த்திபன்-சீதா, சரத்குமார்-நக்மா, பிரபு-குஷ்பு, சுந்தர்-குஷ்பு இவ்வாறு பல ஜோடிகளின் காதல் உறவுகள் முதலில் கிசுகிசுக்களாக வெளியானவையே.

'கிடையவே கிடையாது. பத்திரிகைகள் வதந்தி கிளப்புகின்றன' என்றுதான் முதலில் சம்பந்தப்பட்டவர்கள் கூறிவந்தனர். பின்னர் தவிர்க்க முடியாமல் உண்மைகள் வெளியானது. கத்தரிக்காய் முற்றினால் கடைக்கு வந்துதானேயாக வேண்டும்.

●□□●

### சின்னத்திரையில்

நடிகை விநோதினிக்கு பெரிய திரை வாய்ப்புக்கள் இல்லாமல் போனதால் சின்னத்திரையில் வாய்ப்புத் தேடினார்.

தற்போது இலங்கையிலும் ஒளிபரப் பாகும் 'மறக்கமுடியுமா', 'சக்தி', 'குடும்பம்' போன்ற தொலைக்காட்சி தொடர்களிலும், விளம்பரப் படங்களிலும் பிஸியாக இருக்கிறார்.

பெரிய திரைவாய்ப்பை விநோதினிக்கு கொடுத்த ஒளிப்பதிவாளர் ஒருவர் அவரை சில நாட்கள் தன்கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்.

வாய்ப்புக் கொடுக்கும் நடிகைகளை கமராவால் மட்டுமல்லாமல், தன் கண்களாலும் தனிமையில் அணுஅணுவாக

### பராமரிப்புச் செலவு

கவர்ச்சியான நடிகை ஜோதிலட்சுமியின் மகள் ஜோதிமீனா. இவருக்கும் ஒரு டாக்டருக்கும் இடையே காதல் மலர்ந்து குழந்தையும் பிறந்தது.


டாக்டர் இப்போது நழுவி விட்டார். ஜோதிலட்சுமி தன் அடியாட்களை ஏவி டாக்டரை வலை போட்டு தேடிவருகிறார்.

ஜோதி மீனா தன் குழந்தையை பராமரிக்க வெளியே ஒரு நண்பர் வீட்டில் கொடுத்திருக்கிறார். பராமரிப்புச் செலவு மட்டும் மாதம் ஒரு இலட்சம். குழந்தையை தங்கள் வீட்டில் வளர்த்தால் தம்மை தேடிவரும் புள்ளிகளுக்கு அவ்வளவாக பிடிக்காது என்பதால் அந்த ஏற்பாடு.

* 'எதிரும் புதிரும்' படத்தில் நடனமாடிய சிம்ரான், அ... ஒரு பாடல் காட்சியில் ந...
* கே. சுபாஷ் இயக்கும் 'நி... கதாநாயகனாக நடிக்கும் ... இளைஞன் வேடம்.
* 'என் சுவாசக்காற்றே' மூல... கோபிகர், தெலுங்கில் முத... படம் படுதோல்வியடைந்த...
* 'ரட்சகன்' படத்தை இயக்... தனது பெயரை பிரவீன் கா...
* 'இலவங்கோடு தேசம்' ம... ஜோடியாக நடித்த குஷ்பு ம... 'செங்கொடி' என்ற மலை...
* விஜயகாந்த் கதாநாயகன... மூலம் இயக்குநராக அறி... செல்வமணியிடம் இணை...
* இயக்குநர் சிகரம் கே. ... வனம் தயாரித்த 'பூவேலி' ... டும் கவிதாலயா தயாரிக்கு...



சோனாலி பாந்த்ரே
படம்: காதலர் தினம்



ஷாருக்கான்

## புதையல்

தமிழில் 'புதையல்' படம் மூலம் அறிமுகமானவர் சாக்ஷி. பிரபுவுடனும் நடித்தார். தமிழில் போதிய சந்தர்ப்பம் இல்லை என்பதால் தெலுங்குப் பக்கம் பாய்ந்தார்.

இப்போது தெலுங்கில் கவர்ச்சியின் எல்லைக்கே போய்விட்டார். கவர்ச்சிப் புதையலாகி விட்டார்.

## பூச்சுற்றும் ராஜேந்தர்

'மோனிஷா என் மோனலிசா' படத்தை தயாரித்து, இயக்கி, இசையமைத்து, ஒளிப்பதிவு செய்து வருகிறார் டி. ராஜேந்தர்.

இப்படத்தின் பாடல் காட்சி ஒன்றுக்காக மட்டும் ஒரு கோடி ரூபாய் செலவு செய்ததாக கூறுகிறார் ராஜேந்தர். காதில் பூ சுற்றுவதற்கும் ஒரு அளவு வேண்டாமா?

## பெரியாரின் சீடர்

சத்யராஜ் படங்கள் சமீபகாலமாக சரியாக ஓடவில்லை. 'கல்யாண கலாட்டா' பாதகமில்லாமல் ஓடியது. அடுத்து வரவிருந்த 'பொண்ணு வீட்டுக்காரன்' படம் பெட்டிக்குள் கிடக்கிறது.

சத்யராஜின் நண்பரான மணிவண்ணன் மறுபடி படம் ஒன்றை இயக்கப்போகிறார். அதில் கதாநாயகன் சத்யராஜ். சரிந்திருக்கும் மார்க்கெட்டை மறுபடி நிமிர்த்த மணிவண்ணனை நம்பியிருக்கிறார் சத்யராஜ்.

இன்றைய தமிழ்ப்பட முன்னணி நடிகர்களில் இரண்டுபேர் தந்தை பெரியாரின் சீடர்கள். ஒருவர் கமல். இன்னொருவர் சத்யராஜ்.

"கமல் திராவிடர் கழகத்தில் இணைந்து கறுப்புச் சட்டையுடன் கூட்டங்களிலும் கலந்து கொண்டார். சத்யராஜ் கழகத்தில் சேராவிட்டாலும் பகுத்தறிவு பிரசாரங்களில் ஈடுபட்டு வருகிறார்.

"கடவுள் மறுப்புக் கொள்கைகளை பிரசாரப்படுத்துவதால், பெண் ரசிகைகளின் ஆதரவு குறைந்திருக்கிறதா?" என்று கேட்டால், "இப்போதுதான் பெண் ரசிகைகளின் கடிதங்கள் பெருவாரியாக வருகின்றன." என்று கூறுகிறார். சத்யராஜின் மனைவி பயங்கரமான கடவுள் பக்தை.

## விசித்ராவுக்கு சிபாரிசு

இயக்குநர் மணிவண்ணன் நகைச்சுவை நடிகர் மணிவண்ணனாகி ஏகப்பட்ட சம்பாத்தியம். தன்னுடைய படங்களில் சில துணை நடிகைகளுக்கு வாய்ப்பு வாங்கிக் கொடுத்து வந்தார். சில பிரச்சனைகளால் சிபாரிசு செய்வதை நிறுத்தியிருந்தார்.

இப்போது ஒரே ஒருவருக்கு மட்டும் சிபாரிசு செய்கிறார். அவர் விசித்ரா. மணிவண்ணனின் அன்பை தன் பக்கம் சுருட்டி எடுத்துக்கொண்டார்.

மணிவண்ணன் உபயத்தில் புதிய சில வாய்ப்புக்கள் விசித்ராவுக்கு கிடைத்துள்ளன. விசித்ராவுக்கு சத்யராஜ் என்றால் பிடிக்கும். சத்யராஜும் மணிவண்ணனும் நண்பர்கள். இருவரையுமே விசித்ராவுக்கு பிடித்திருக்கிறது.

## நம்பர் வன்

ஷாருக்கான்தான் இன்று இந்தியில் நம்பவர் வன். இளம் ரசிகைகள் மொய்க்கிறார்கள். அவர்கள் கனவில் தொல்லை கொடுக்கும் நாயகன் இவர்தான்.

தமிழில் 'உயிரே' வந்ததால் தமிழ்ப்பட ரசிகர்கள், ரசிகைகள் மத்தியிலும் வரவேற்பு பெற்றார்.

தொடர்ந்து தமிழில் நடிக்க ஆசைதானாம். ஆனால் இந்தியில் பிஸி. சம்பளம் கொடுத்தும் தமிழ்ப்பட தயாரிப்பாளர் ...ருக்கு கட்டுப்படியாகாது.



சினி விசிட்

அஜித்குமார்-ஷீரா...
படம்: தொடரும்...

முகப்பில் சத்யராஜ் இந்து

தமிழ்ப்பட உலகி... பவர் மிதுன் சக்கரவர்த்தி. தமி... கௌதமி, மதுபாலா, வினிதா, ரம்யா கி... பெறுவதற்கு, மிதுனைத்தான் நாடினார்கள். மி... வாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்தார்.

கௌதமிதான் மிதுன் பிடியில் பலகாலம் ... மீனா. இந்தியில் வாய்ப்புப் பெற்றுத் தருகிறே...

www.padippakam.com

பாடல் காட்சியில் மட்டும்
ால் 'அந்தப்புரம்' படத்திலும்
ாடியுள்ளார்.

ருக்கும்வரை' படத்தில்
தேவாவுக்கு அதில் குப்பத்து

மிழில் அறிமுகமாகும் இஷா
தலாக நடித்த 'சந்திரலேகா'
து.

பிரவீன் காந்தி தற்போது
ான்று மாற்றி வைத்துள்ளார்.

ாளப் படத்தில் மம்முட்டி
டி மம்முட்டியுடன் இணைந்து
ப் படத்தில் நடிக்கிறார்.

நடிக்கும் 'சிம்மாசனம்' படம்
மாகும் ஈஸ்வரன், ஆர்.கே.
குநராகப் பணியாற்றியவர்.

சந்தரின் கவிதாலயா நிறு
தில் நடித்த கார்த்திக் மீண்
மொன்றில் நடிக்கவுள்ளார்.

# மினி சினி

* 'தலைவாசல்' செல்வா, தெலுங்கில் வெற்றிபெற்ற 'சினேகிதலு' என்ற படத்தை தமிழில் இயக்குகிறார். இப்படத்தில் பிரசாந்த்-கௌசல்யா நடிக்கிறார்.

* பி. வாசு இயக்கி வந்த 'பல்ராம்கிஷன்' இந்திப் படத்தின் பெயரை இப்போது 'கோகி பியார் கீ ஜித்' என்று மாற்றியுள்ளார்கள்.

* அர்ஜுன்-மீனா நடிக்கும் 'ரிதம்' படத்தில் இன்னொரு ஜோடியும் புதிதாகச் சேர்ந்துள்ளது. ரமேஷ் அரவிந்தும் 'சங்கமம்' படநாயகியான விந்தியாவும்தான் அந்தப்புதிய ஜோடி.

## சதம் போடும் அர்ஜுன்

சிவாஜிகணேசனுடன் அர்ஜுன் நடிக்கும் 'மன்னவரு சின்னவரு' அர்ஜுனுக்கு நூறாவது படம்.

மன்னவரு சின்னவரு படத்தை தயாரிக்கும் விளம்பரப் புலியான கலைப்புலி தாணு தயாரித்த படம் 'யார்'. அப்படம் மூலம்தான் அர்ஜுன் ஆக்ஷன்சிங் என்று பிரபலமானார். மர்மம், திகில் கலந்த படமான 'யார்' நூறுநாட்களை தாண்டி வெற்றி நடைபோட்டது.

அதே தாணுவின் தயாரிப்பில் நூறாவது படம் பண்ணுவதில் அர்ஜுனுக்கு சந்தோசம்.

## திரில் பட சீசன்

பார்க்காமல் காதல், தொலைபேசி காதல், நாவை வெட்டும் காதல் என்று பார்த்து சலித்தாகிவிட்டது. 'குரு பார்வை' பட வெற்றியால் மறுபடி திரில்லர் படங்களின் சீசன் ஆரம்பமாகப் போகிறது.

காதல் கதையுடன் படம் தயாரிக்க இருந்த சிலர் 'திரில்' கதை தேடி வருவதாகவும் கூறப்படுகிறது.

## காதோடு சொல்லுகிறோம்

'பூ' நடிகை தன் சுந்தரக் காதலர்மீது கடுப்பாக இருப்பது ஊரறிந்த ரகசியம். 'பூ' நடிகையின் ரசிகர் மூன்றெழுத்து 'ரண்' நடிகர். மூன்றெழுத்து நடிகர்கள் என்றால் 'பூ' நடிகைக்கு அப்படியொரு ராசி. 'ரண்' நடிகருடன் ஒரு படத்தில் நடித்தபோதே அவர் தன் ரசிகர் என்று தெரிந்து, தைரியம் கொடுத்து நெருங்கி நடித்து, கூச்சம் போக்கியவர். சமீபத்தில் தான் அந்த 'ரண்' நடிகரிடம் தன் கவலைகளைக் கொட்டித் தீர்த்தாராம் 'பூ' நடிகை. அவர் ஆறுதல் கூற, கசிந்ததுபோய் கைகளைப் பற்றிக் கொண்டாராம்.

'சர' நடிகர் 'மா' நடிகைக்கு அசராமல் முயற்சியில் தளராமல் தொடர்ந்து போடுகிறார் முட்டுக்கட்டை. மாவீரர் நடிகர் பாதுகாப்பில் நடிகை இருப்பதால் ஒன்றும் செய்ய முடியவில்லை. படத்தின் இயக்குநரும் கழக கண்மணியாம் அவரிடம் போய், 'மா' நடிகையை தூக்கிவிட்டு, வேறு நடிகையை போடுமாறு கேட்டாராம் 'சர' நடிகர். பெரும்பாலான காட்சிகள் எடுத்து முடித்துவிட்டதால் நடிகையை மாற்றமுடியாது என்று வருத்தத்துடன் கூறினாராம் இயக்குநர். எப்படியாவது நடிகை தன்னிடம் புகலிடம் தேடிவரவேண்டும், மீண்டும் அவரை ஒரு கை பார்க்கவேண்டும் என்று துடியாய் துடிக்கிறாராம் நடிகர். எத்தனையோ நடிகைகள் இருக்க இவர் ஏன் இப்படி மாய்கிறார் என்று கேட்கிறார்கள் சக நடிகர்கள்.

நகைச்சுவை 'மணி' நடிகரை 'விக்' இல்லாத கோலத்தில் படமெடுத்தால் போச்சு. கமராவை பிடுங்கி, பிலிம்ரோலை கழற்றி எடுத்துவிடுவாராம். பேரன்கூட பிறந்தாகிவிட்டது. இளமையாக காண்பிக்க ஆசைப்படுகிறார் மனுசன். கவிழாத மணியல்லவோ.

லிவிங்ஸ்டனுடன் நடிக்க 'மீன்' நடிகை மறுத்ததால், 'பூ' நடிகை நடிக்கிறார்.

மகேஸ்வர நடிகைக்கு இளைய திலகத்துடனும் நெருக்கம். இருவரும் ஜோடியாக நடித்த படப்பிடிப்பு முடிந்த பின்னர், ஜோடியாக மகாபலிபுரம் கடற்கரை விடுதிக்கு சென்று வந்தனராம்.





பாண்டியராஜன்-மயூரி
படம்: கும்பகோணம் கோபாலு

புத்தம் புதிய புத்தகமே—உன்னைப்
புரட்டிப் பார்க்கும் புலவன் நான்

## சேரனின் காதல் கதை

'தேசிய கீதம்' படத்தின் படுதோல்வி இயக்குநர் சேரனை ரொம்பவும் பாதித்திருக்கிறது. அரசியல் கதையை தொடப்போய் அவதிப்பட்டது போதும் என்று நினைக்கிறார்.

'பாரதி கண்ணம்மா', 'பொற்காலம்' படங்களில் கிடைத்த வரவேற்பை மறுபடி பெறுவதற்கு இனிய காதல் கதையோடு புறப்பட்டிருக்கிறார்.

படத்திற்கு சூட்டியுள்ள பெயரிலும் காதல் ததும்புகிறது. 'என் இனிய காதலர்களே' என்றுதான் பெயர் சூட்டப்பட்டுள்ளது. நாயகன் பிரசாந்த். ஜோடி புதுமுகம் ஷிவானி. மணிவண்ணன், நாசர், ரகுவரன், சார்லி, அம்பிகா ஆகியோரும் நடிக்கின்றனர். இசை: தேவா.

## சாப்ளின் கார்த்திக்

சமீபத்தில் திரைக்கு வந்த படங்களில் கார்த்திக் நடித்த 'பூவேலி' நன்றாக ஓடிக் கொண்டிருக்கிறது. தமிழக சன் ரி.வி. தெரிவில் இரண்டாம் இடமும் அதற்குத்தான்.

கார்த்திக் மார்க்கெட் நல்ல நிலையில் இருப்பதால் புதிய பட வாய்ப்புக்களும் குவிகின்றன. நகைச்சுவை கலந்த பாத்திரங்களாகவே தெரிவு செய்கிறார் கார்த்திக். 'நிலவே முகம் காட்டு' படத்தில் 'சார்லி சாப்ளின்' போன்ற கெட் அப்பில் நடிக்கிறார் கார்த்திக். இதில் ஜோடி தேவயாணி.

## கவர்ச்சிக்கு விளக்கம் ப்ரியாராமன் கூறுகிறார்

கவர்ச்சிக்கொடி பறக்கவிட்டு மறுபடி ஒரு ரவுண்ட் வருகிறார் ப்ரியா ராமன். கவர்ச்சி பற்றி அவரது தத்துவ விளக்கம் இதுதான்:

"கவர்ச்சி என்றாலே ஆடைக் குறைப்பு செய்யப்பட்ட உடலழகுதான் அது என்று சிலர் நினைக்கிறார்கள். பெண்ணின் முன்னழகு மட்டுமே கவர்ச்சி என்று நினைப்பது சரியல்ல. கவர்ச்சி என்பது முகம் சுளிக்க வைக்கும் விதத்தில் ஆபாசமாக இருக்கக்கூடாது. குட்டைப் பாவாடை அணிவது, முழங்கால் வரை வெளியே தெரிவது, கண், உதடு மூலம் கவர்ச்சியை வெளிப்படுத்துவது... இவற்றில் தவறில்லை.

நீச்சலுடை, டூபீஸ் அணிவதில் எனக்கு விருப்பமில்லை. அனால் கதைக்குக் கண்டிப்பாக தேவை என்றால் நோ பிராப்ளம். அதுபோல உதடுகளை கவ்வி, ஆங்கிலப் பாணியில் முத்தக் காட்சியில் நடிப்பதும் எனக்குப் பிடிக்காது.

இன்றைய ரசிகர்கள் கிளாமரை விரும்புகிறார்கள். கிளாமரை ரசிக்கிறார்கள். இன்று ஒரு படம் வெற்றியடைய கிளாமரும் ஒரு அளவுக்கு தேவைப்படுகிறது" என்று கூறியிருக்கிறார் ப்ரியா ராமன்.



## தூரத்தும் சுவாதி

'டைம்' படத்தில் தனக்கு வாய்ப்பு வாங்கிக் கொடுக்குமாறு பிரபுதேவாவிடம் கேட்டுள்ளார் சுவாதி.

குஷ்பு, ரம்பாவுக்கு அடுத்ததாக இயக்குநர் சுந்தருடன் கிசுகிசுக்கப் படுபவர் சுவாதி. பிரபுதேவாவை மடக்கி 'டைம்' படத்தில் வாய்ப்புக் கேட்டுள்ளார்.

"என்னாலே முடியாதும்மா, இப்படத்தில் பிரசாந்துக்கு பதிலாகத்தான் நான் நடிக்கிறேன்" என்று நைசாக உருவிக் கொண்டாராம் பிரபுதேவா.



மோகன்லால்-மீனா
படம்: வர்ணப்பகிட்டு (மலையாளம்)

## மீனாவுக்கு தூண்டில்

ந்து இந்திக்கு செல்லும் நடிகைகளுக்காக கைகொடுப்
ட நடிகைகள் என்றால் அப்படியொரு ஆர்வம்.
ணன் என்று பல நடிகைகள் இந்தியில் வாய்ப்புப்
ும் அவர்களிடம் உள்ள திறமைகளை தேடிவிட்டு சில

ந்தவர். இப்போது மிதுன் பட்டியலில் சேரப்போகிறவர்
ன்று மீனாவுக்கு தூண்டில் போட்டிருக்கிறார் மிதுன்.

## வெடித்த குண்டு ரசிகர்கள் பாதிப்பு

செக்ஸ் குண்டு ஒன்று வெடித்து தாம் பலத்த பாதிப்புக்குள்ளானதாக படம் பார்த்தவர்கள் கூறுகிறார்கள். அவர்கள் பார்த்த படம் 'கும்பகோணம் கோபாலு'. செக்ஸ் குண்டு மயூரி.

படு பயங்கர கவர்ச்சி காட்டி படப்பிடிப்பின்போதே பாண்டியராஜனை கவிழ்த்தவராச்சே. ரசிகர்களையும் கவிழ்த்துக் கொண்டிருக்கிறார்.

'கும்பகோணம் கோபாலு' தமிழ் நாட்டில் வசூலை அறுவடை பண்ணுகிறது. அதனை இந்தியிலும் எடுக்க முடிவு செய்துவிட்டனர். தமிழில் பாண்டியராஜன் நடித்துள்ள பாத்திரத்தில் இந்தியில் நடிக்கப்போகிறவர் கோவிந்தா. தமிழில் நடித்த சிறுவனே இந்தியிலும் நடிக்கிறான்.

பாண்டியராஜன் ரஷிகா என்ற நடிகையுடன் பிசின்போல ஒட்டியிருந்தார். மயூரியை கண்டதும் ரஷிகாவை கழற்றிவிட்டுவிட்டார். எதற்கும் துணிந்த மயூரிக்கு 'கும்பகோணம் கோபாலு' ஒரு திருப்பம். புதிய வாய்ப்புக்கள் கதவைத் தட்டுகின்றன.

## சிம்ரான் ருசிப்பது

சிம்ரான் காலை எழுந்ததும் ருசித்து ருசித்து அருந்துவது ரீயோ, காப்பியோ அல்லவாம். வேறு என்ன? இசகு பிசகாக கற்பனை பண்ண வேண்டாம். ஒரு டம்ளர் வெந்நீரில் இரண்டு டீஸ்பூன் தேனையும், ஒரு எலும்மிச்சம் பழச்சாற்றையும் கலந்து வடிகட்டி, குடிக்கிறாராம்.

சிம்ரானின் சுறுசுறுப்புக்கும், குறுகுறுப்புக்கும் காரணம் அதுதானாம்.



படிப்பகம்

www.padippakam.com

# இதுதானா நீ...?

இனியவளே...
நீ
தினம் தினம்
மௌனம் சாதிப்பதை
பார்த்து
தீர்வுப் பொதியை போல்
ஆகிவிடுவாயோ
என்று பயந்திருக்கிறேன்...!
**
நீ
சில நேரம்
என்னை
ஊடுருவி பார்ப்பாய்...
அப்போதெல்லாம்
'செக் பொய்ண்ட்டின்'
அவஸ்தைகளை
உணர்ந்திருக்கின்றேன்...!
**
அன்பே...!
நீ
மற்ற ஆண்களோடு
சிரித்து பேசி,
'குண்டு புரளியைபோல்'
எனக்குள்
பீதியை கிளப்பியதுமுண்டு...!
**
நீ
திடீர் என்று
ஒருநாள்
என்னை நிறுத்தினாயே
பேசவேண்டும் என்று
அப்போது
'விசாரணைக்காக
தடுத்து வைப்பு'
நடுக்கத்தை
உணர்ந்தேன்...!
**
நீ
என்னை
காதலிப்பதாய்
சொன்னவுடன்
நம்
நாட்டில்
சமாதானம்
பிறந்துவிட்டதை
போன்ற
சந்தோஷத்தில்
மிதந்தேன்...!
**
என்னவளே...!
உனக்கு
மாப்பிள்ளை
பார்த்து விட்டார்கள்
என்பதை
கேள்விப்பட்ட
போதுதான்
இதுவரை
காதால் கேட்ட
குண்டு வெடிப்பை
உண்மையில்
உணர்ந்தேன்...!

இராமயுவராஜ்- கண்டி.

# 'வல்லூறுகள்...'

நம் தேச
மலர்கள்...
மகரந்தத்துடன்
காத்திருந்தன...
வண்டுகளுக்காய்...!
வந்ததோ...
வல்லூறுகள்...!
**
அன்று
நாற்காலிகளை
நாம் தேர்ந்தெடுக்க...
இன்று
அவைகள்- நம்
தேய்ந்து போன..
தோள்களில்..
அமர்ந்திருக்கின்றன...!
**
'தட்டுங்கள்
திறக்கப்படும்...'
என்றார்கள்...
இதயக் கதவுகளை
இறுக்கமாய்...
மூடிக்கொண்டு...!
**
'கேளுங்கள்
கொடுக்கப்படும்...'
என்றும் சொன்னார்கள்
கஜானாவை...
காலியாய்...
வைத்துக்கொண்டு...!
**
நமது அட்சய
பாத்திரங்களில்...
அவர்கள்...
இட்டது
வாக்குறுதிப் பிச்சை
மட்டுமே...
இன்று அட்சய
பாத்திரமும்
அவர்களிடம்
அந்நிய தேசத்து
அவசர பிச்சைக்காய்...!
**
வசந்தம்
தொலைத்த
நம் தேச...
மலர்கள்
மகரந்தத்துடன்
காத்திருந்தன..
வண்டுகளுக்காய்...!
வந்ததோ...!?

மசீன்.எம். சசீல்-
உக்குவளை.

# தேன் கிண்ணம்

வீதிகளை
புல்ட்கள் முத்தமிடும்
சத்தம் நெஞ்சை
உறைய வைத்தது!

சதந்திர வாசிகளான
தெருநாய்களின்
சந்தோச ஓலம்
திகில் பொழிந்து
கொண்டிருந்தது!

கைதாவதற்கு
தயாராக
கைகளையும்
என்னைத் தமிழனாய்
உறுதிசெய்ய
அடையாள அட்டையையும்
தயாராக வைத்திருந்தேன்!

இதோ என் வீட்டுக்
கதவும் தட்டப்படுகிறது...!
இனியென்ன...?
.................
.................

பூண்டுலோயா-மெய்யன் நட்ராஜ்.

# நகர(ரக)வாழ்க்கை...!

நிலவு கறுப்பை
அணிந்து கொண்ட
ஒரு குருட்டு இராத்திரி!
விடியலுக்காக
காத்திருந்தேன்....!

உயிரைப் பிழியும்
பயங்கரத்தால்
கவ்வப்பட்ட
என் தேசத்தைபோல
காற்றையும்
நிராகரித்துவிட்டு
கதவிற்கு தாழிட்டு
தனிமையை
துணைக்கிருத்தியிருந்தேன்!

# தொல்லைகள் தந்த தொண்ணூற்றி எட்டே தொலைந்து போ...!

தொல்லைகள் தந்த
தொண்ணூற்றி எட்டே
தொலைந்து போ-நீ
மறைந்து போ...!
..
செம்மணி முதல்
செய்தித் தணிக்கைவரை
ஏங்கிய மக்களை
ஏமாற்றிய ஆண்டே
தொலைந்து போ-நீ
மறைந்து போ...!
..
தீர்வுப் பொதிதான் சொன்ன
தீர்க்க தரிசனமும்
ஆவியாய்ப் பறந்துவந்த- வெண்
சமாதானப் புறாவும்
பாவிகள் வாழ்வைப் பாழாக்கிய
பாதக ஆண்டே
தொலைந்து போ-நீ
மறைந்து போ...!
..
வன்னி அகதிகள்
கண்ணீர் பெருகிட
அகதி நிவாரணத்தை
அதிரடியாய் நிறுத்தி
அநியாயம் செய்யவந்த
அக்கிரம ஆண்டே
தொலைந்து போ-நீ
மறைந்து போ...!!

இரத்தினம்-தவராசா,
தேற்றாத்தீவு.








# மக்கள் படை

ஈராக் இராணுவத்தினருக்கு பக்க பலமாக நின்று போரிட பயிற்சி பெறும் மக்கள் படையினரே இவர்கள்.

பெரும் நாடுகள். மாபெரும் படைபலம். ஆயுத வளம். அத்தனைக்கும் மத்தியில் தனித்து நின்று ஈராக் மக்கள் போரிடுவது வெறும் வீம்புக்காகவல்ல. உயிரைவிட மேலான கௌரவம், தன்மானம் என்பவற்றுக்காகவே.

ஈராக் மீதான தாக்குதலுக்கு 1991இல் அமெரிக்கா தயாரானபோது அமெரிக்க தூதரகம் முன்பாக சிறுவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அன்றைய ஜனாதிபதி 'புஷ் ஒழிக' என்று கோஷமிட்டனர். அன்று புஷ், இன்று கிளின்ரன். இருவருமே அமெரிக்க மேலாதிக்கத்தின் பிரதிநிதிகள்.

# படுக்கை ஜோதிடம்

கணவனும் மனைவியும் எவ்வாறு படுக்கையில் உறங்குகிறார்கள் என்பதை வைத்தே அவர்களது குணாதிசயங்களை எடை போட்டு விட முடியும் என்கிறார் உளவியல் நிபுணர் டாக்டர் சாமுவேல் டங்கல். 25 ஆண்டுகள் ஆராய்ச்சியின் விளைவாக அவர் சில உண்மைகளைக் கண்டறிந்திருக்கிறார்.



மல்லாந்து படுத்திருக்கும் கணவன். அவனது தோளில் தலை சாய்ந்திருக்கும் மனைவி:

கணவனுக்கு ஈகோ அதிகமாக இருக்கும். மனைவியோ பெரும்பாலும் அவனையே சார்ந்திருப்பவளாக இருப்பாள். பெரும்பாலான தம்பதிகள் இப்படிப்படுத்து உறங்குவதையே விரும்புகிறார்கள்.



கணவன் மல்லாந்து படுத்திருக்கிறான். மனைவி ஒருக்களித்து அவனை ஒட்டிய படி, அவனது தோளில் முகம் புதைத்து, ஒரு கையை அவனது மார்பில் வைத்திருக்க, கணவனின் கரம் அவளை அணைத்திருக்கிறது.

இவ்வாறு உறங்கும் தம்பதிகளிடையே மன ஒற்றுமை மிகப் பிரமாதமாக இருக்கும். அந்த ஆண்மகன் தன் மனைவிக்கு ஏதாவது பிரச்சனை நேரும் போதெல்லாம் கை கொடுத்து ஆறுதல் அளிப்பான்.



கணவன் மறுபுறமாகத் திரும்பிப் படுத்திருக்கிறான். படுக்கையின் ஓரத்துக்கே போய்விட்டான். மனைவி தனது வழக்கமான இடத்தை விட்டு அவனை நெருங்கி, அவனை அணைத்தவாறு படுத்திருக்கிறாள்.

இந்தத் தம்பதிக்கிடையே 'டென்ஷன்' ஏற்படுத்தக்கூடிய ஏதோ சில விஷயங்கள் உள்ளன. அதன் விளைவுதான் இந்தப் புறக்கணிப்பு 'போஸ்'. 'உன்னை எப்போதும் நான்தான் தாஜா செய்யவேண்டுமா? நீதான் என்னிடம் நெருங்கிவந்தால் என்ன?' என்று மறைமுகமாக மனைவிக்கு அவன் விடுக்கும் கட்டளையின் வெளிப்பாடுதான் இந்த 'போஸ்.'



கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் புறமுதுகு காட்டிப் படுத்திருக்கிறார்கள். இருந்தாலும் அவர்களது உடம்பின் ஏதோ ஒரு பகுதி மற்றவர்மேல் தொட்டுக்கொண்டிருக்கிறது.

திருமணமாகிக் குறைந்த பட்சம் பத்து வருடங்களாவது ஆகியிருந்தால்தான் இப்படி ஒரு நிலையில் படுத்து உறங்குவார்கள். வேட்கைத் தேடல், புரிந்து கொள்ளுதல், இவற்றையெல்லாம் தாண்டிய ஒரு நிலை. அத்துடன் தங்களது தனித் தன்மையை நிலைநாட்டிக் கொள்ளும் கட்டத்துக்கு அவர்கள் வந்து விட்டதை இந்த 'போஸ்' எடுத்துக் காட்டுகிறது. சிலர் "கட்டில் இன்னும் கொஞ்சம் பெரிதாக இருந்தால் தேவலை!" என்று முணுமுணுப்பது இந்தக் கட்டத்தில்தான்!



கணவன் மல்லாந்து படுத்திருக்க, மனைவி குப்புறப் படுத்திருக்கிறாள். இருப்பினும் அவனது கை அவள் மேல் உராய்ந்திருக்கிறது. அவளது கால் அவனது கால்மேல் படிந்திருக்கிறது.

இப்படிப் படுத்திருப்பவர்கள் ஒருவருக்கொருவர் அன்பை நேரடியாக வெளிப்படுத்திக்கொள்ள மாட்டார்கள். ஆனாலும் மிகுந்த தோழமையுணர்வோடு பழகுவார்கள். இவர்களுக்கிடையே சண்டை, சச்சரவுகள் வெகு சகஜமாக நிகழும். இருப்பினும் மற்றவர் மீது தமக்குள்ள ஆதிக்கத்தை எளிதில் தளர்த்திக் கொள்ள விரும்பமாட்டார்கள்.



படுக்கைக்கு வந்த கணவன் வழக்கம் போலன்றி, ஓர் ஓரமாகத் திரும்பிப் படுத்திருக்கிறான். மனைவியின் மீது தனது அங்கம் எதுவும் படாதபடி விலகியிருக்கிறான்.

இது அவனது குழப்பமான மனநிலையைத்தான் காட்டுகிறது. ஏதோ கோபம், வருத்தம், ஆற்றாமை அவனுக்குள் புகைந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவனைச் சீண்டாமல் விலகிப்படுப்பதே ஒரு மனைவி செய்யக்கூடிய நல்ல காரியம். ஒரு நாட்களில்- சில சமயம் ஒரே வாரத்தில்- இந்த நிலைமை மாறி, சகஜ நிலைக்கு கணவன் திரும்புவான். அதுவரை பொறுமை காத்தல் அவசியம்.



கணவனும் மனைவியும் ஒரே பக்கமாக ஒருக்களித்துப் படுத்திருக்கிறார்கள். இருவருக்கும் இடையே சிறிது இடைவெளி இருக்கிறது. அவனது கை, முழங்கால் அல்லது பாதம் மனைவியைத் தொட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் உறங்குபவர்களுக்குக் கல்யாணமாகிக் குறைந்த பட்சம் ஐந்து வருடங்களாவது ஆகியிருக்கும். இருவருக்குள்ளும் அன்பும் அக்கறையும் நீரோட்டமாக இருக்கும். அதை வெளிப்படுத்தவும் விரும்பமாட்டார்கள். உடலளவில் விலகியிருந்தாலும் மனசளவில் இருவருக்கும் நெருக்கம் ஆழமாக இருக்கும் என்று நிச்சயமாகக் கூறலாம்.



மனைவி வழக்கம்போல நிம்மதியாகப் படுத்திருக்க, கணவன் தாறுமாறான போஸில் கட்டிலிலிருந்தே தரையில் விழும் நிலையில் படுத்திருக்கிறான்.

இது நிச்சயம் டேஞ்சர்- சிக்னல்தான். கணவன்-மனைவிக்கிடையே இருந்த நெருக்கம் குறைந்து விட்டதற்கான அறிகுறி இது. (தலைமாடு கால் மாடாகப் படுப்பதும் இதில் சேரும்!) ஒருவரையொருவர் ஏதோ காரணத்துக்காகப் பிரிந்திருக்க விரும்புவதையே இது சுட்டிக் காட்டுகிறது.

பி.கு: இவை நூற்றுக்கு நூறு வீதம் சரியாக இருக்கும் என்று அர்த்தமல்ல.



படிப்பகம்

# லேடீஸ் ஸ்பெஷல்

## காலம் தாழ்ந்து கர்ப்பம் தரிக்கலாமா?

பெண்களின் வாழ்க்கை முறை இப்போது மாறிக்கொண்டிருக்கிறது. முன்பெல்லாம் பெண்கள் வயதுக்கு வந்த சில காலத்திலே திருமணம் செய்து வைத்து விடுவார்கள். அவளும் தொடர்ந்து பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டிருப்பாள்.



இப்போதைய நிலை அதுவல்ல. திருமணம் தாமதமாக நடக்கிறது. பெண்கள் முடிந்த அளவு கர்ப்பம் தரிப்பதையும் தாமதப் படுத்துகிறார்கள்.

பெருமளவு பெண்கள் 20ல் இருந்து 30 வயதிற்குள் கர்ப்பம் தரித்து விடவேண்டும். அதுவே நல்லது என்பது மருத்துவர்களின் கருத்து. 25 வயது கடந்து விட்டாலே கர்ப்பிணியாகும் தன்மை பெண்களிடம் குறைந்து விடுகிறது.

ஆனாலும்கூட பொருளாதார நிலையில் வலுப்பெற்ற பின்பு மெதுவாகப் பிள்ளை பெறலாம் என்று அநேகமான பெண்கள் கருதுகிறார்கள்.

இதனால் கிட்டத்தட்ட 30 வயதிலே பெண்கள் கர்ப்பிணியாகிறார்கள். 30 வயதுக்கு மேல் கர்ப்பிணியாவது நெருக்கடிகளுக்கு வழி வகுக்கும். அந்த வயதில் பிறக்கும் குழந்தைகளை சிலவகை நோய்கள் தாக்கும்.

இப்போது மருத்துவம் வளர்ந்துவிட்டது. குழந்தை பிறக்கும் முன்னே அந்த நோய்த் தன்மைகள் இருக்கின்றனவா என்பதைக் கண்டு பிடித்து விடலாம்.

30 வயதுக்கு மேல் கர்ப்பம் தரிக்கும் போது பிரசவத்தில் அதிக வலி தோன்றும் என்கிறார்கள். இதற்குக் காரணம் பெண்களுக்கு ஏற்படும் பயம் தான் என்ற கருத்தும் உள்ளது.

வயது ஆக ஆக பிரசவ வலியும் அதிகரிக்கும் சூழ்நிலை உருவாகிறது. ஆனால் இப்போது வலி இல்லாமல் பிரசவம் செய்யும் அளவுக்கு மருத்துவம் வளர்ந்து கொண்டிருக்கிறது.

30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அதிகமாக சிசேரியன் செய்கிறார்கள்.

## அன்றாடம் பயன்படும் யோசனைகள்

பெண்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் இவை:



- அதிக நாட்கள் பயணம் மேற்கொள்ளும் போது தையல் ஊசி, குண்டூசி, பொத்தான்கள், சேஃப்டி பின் போன்றவற்றை ஒரு சிறிய பெட்டிக்குள் போட்டு எடுத்துச் செல்லுங்கள். அவை முக்கிய தேவைகளுக்கு உதவும்.
- செலோடேப்பை சிறிது நேரம் ஃபிரிட்ஜில் வைத்திருந்தால், அதனை இலகுவாகப் பிரித்தெடுக்கலாம்.
- சோப்பை கத்தியால் வெட்டப்போகிறீர்களா? சோப்பு வெட்டும் கத்தியை சிறிது நேரம் சோப்பில் போட்டுவிட்டு, பின்பு சோப்பை நறுக்கினால் எளிதாக வெட்டிவிடலாம்.
- சாவி, குறடு போன்றவைகள் இருக்கும் 'டூல் பொக்'ஸில் ஒரு கரித்துண்டைப் போட்டு வைத்தால் கருவிகள் துருப் பிடிக்காது.
- போத்தலின் மூடி திறக்க முடியாத அளவுக்கு இறுக்கமாக இருந்தால் சுடு நீரில் துணியைத் தோய்த்து, மூடிப் பகுதியில் சிறிது நேரம் இறுக்கிக் கட்டி வைக்கவும். பின்பு மூடியின் மேல் பகுதியில் குளிர்ந்த தண்ணீரை ஊற்றுங்கள். பின்பு எளிதாக மூடியைக் கழற்றி விட முடியும்.
- முந்திரிப் பருப்பு வைத்திருக்கும் பாத்திரத்தில் இரண்டு மூன்று கராம்புகளைப் போட்டு வைத்தால் முந்திரிப் பருப்பு கெட்டுப்போகாது.
- உள்ளி, வெங்காயம், மீன் போன்றவைகளை நறுக்கிவிட்டு கையில் சிறிதளவு உப்பைத் தேய்த்து, சோப்புப் போட்டுக் கழுவினால் வாடை வீசாது.
- பால் கொதிக்க வைத்த பாத்திரத்தை 15 நிமிடம் தண்ணீரில் போட்டு வைத்து விட்டுக் கழுவுங்கள் சுத்தமாகிவிடும்.
- கோடை காலத்தில் குளிர்ந்த நீரில் முட்டைகளைப் போட்டு வைத்தால் 10 நாட்கள் வரை பழுதாகாமல் இருக்கும்.
- தோசை மாவில் ஒரு தேக்கரண்டி வெந்தயத்தூள் சேருங்கள். தோசை மொறுமொறுப்பாக இருக்கும்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** FA

பெயர்:.......................
முகவரி:.......................
.......................
தொழில்:.......................
கையொப்பம்:.......................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 16-01-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 69

புவனா

தனது மனிதாபிமான சேவைகளுக்கு பிரிட்டிஷ் அரசின் அங்கீகாரம் கோரினார் டயானா.

அரசியலுடன் தொடர்பில்லாத மனிதாபிமான தூதராக தன்னை அங்கீகரிக்கும்படி தான் டயானா கோரியிருந்தார்.

பிரிட்டிஷ் பிரதமர் மேஜர் டயானாவின் கோரிக்கையை அரசு குடும்பத்தினருக்கு அனுப்பிவைத்தார். போன வேகத்தில் திரும்பி வந்தது பதில்.

"அரச குடும்ப வாரிசுகள்தான் எங்களால் அங்கீகரிக்கப்படுவார்கள். டயானா பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. அவர் எமக்குத் தேவையுமில்லை!" என்று பதில் அனுப்பினார்கள்.



டயானாவுக்கு அது தெரியவந்தபோதும், அவர் சோர்ந்துவிடவில்லை. பிரிட்டிஷ் அரச குடும்பம் தர மறுத்ததைவிட மேலான அங்கீகாரத்தை உலகம் வழங்கும் என்று ஆறுதலடைந்தார்.

### ஒலிவருடன் நட்பு

டயானா பற்றிய பரபரப்பான செய்தி ஒன்றை சில பத்திரிகைகள் வெளியிட்டன.

'இலண்டன் மாநகரில் வாழ்ந்த கலைஞர் ஒருவரோடு டயானா நெருக்கமாக இருக்கிறார்' என்பதுதான் அந்தச் செய்தி.

'நியூஸ் ஒ.்ப் த வோ்ல்ட்' என்ற பத்திரிகையே முதலில் அச் செய்தியை வெளியிட்டிருந்தது.

1992 செப்டம்பர் மாதம் முதல் இருவருக்கும் இடையே தொடர்புகள் ஏற்பட்டதாகவும் கூறியது.

அந்தக் கலைஞரின் பெயர் ஒலிவர் ஹோவர். மத்திய கிழக்கு கலை வடிவங்கள் பற்றி ஆராய்ச்சி செய்பவர்.

ஒலிவர்-சாள்ஸ், டயானா இருவருக்கும் நெருங்கிய நண்பர். அவர்களுக்குள் பிரிவு ஏற்படாது தடுக்க விரும்பியவர்களில் ஒருவர்.

ஒலிவர் பல தடவைகள் டயானாவை தனியாகச் சந்தித்து, சாள்ஸுடன் மறுபடி சுமுகநிலையை ஏற்படுத்த முயன்றார். சாள்ஸையும் அதேபோல சந்தித்தார்.

சாள்ஸ் ஒரு கட்டத்தின் பின்னர் ஒலிவரை சந்திப்பதைத் தவிர்க்க விரும்பினார்.

கமீலாவை மறந்துவிடுமாறு ஒலிவர் கூறிய யோசனை சாள்ஸுக்குப் பிடிக்கவில்லை.

சாள்ஸின் போக்கில் அதிருப்தியுற்றேன்!" என்று கூறிய டயானா, அதற்கு ஆதாரமாக தனது நாட்குறிப்பையும் காண்பித்தார்.

ஒலிவரிடமும் பத்திரிகைகள் துருவின.

"டயானா பேசுவதாக பல அழைப்புக்கள் வந்தது உண்மைதான். ஆனால் டயானாதான் பேசினாரா என்பது சந்தேகமாக இருந்தது. வேறு யாரும் விஷமம் பண்ணியிருக்கலாம்!" என்று ஒலிவர் கூறினார்.

"டயானா பேசியிருந்தால் என்னுடனும் இரண்டுவார்த்தை பேசாது விடமாட்டார். ஆகவே டயானா பேசியதாகக் கூறுவது பொய்தான்!" என்றார் ஒலிவரின் மனைவி.

"பயங்கரவாதக் குழுக்கள் ஏதாவது இப்படி ஒரு விளையாட்டை நடத்தியிருக்கலாம். எனக்கும் டயானாவுக்கும் இடையே நெருக்கமான தொடர்பு இருக்கிறதா என்று கண்டுபிடித்து, அதனை வைத்து ஏதாவது திட்டம் போட நினைத்தார்களோ தெரியவில்லை," என்றார் ஒலிவர்.

அரச குடும்பத்தினரின் வேலை தானோ இதுவும், என்று ஒலிவரின் மனைவி சந்தேகம் தெரிவித்தார். சாள்ஸின் நண்பர்களது வேலையாக இருக்கலாம் என்றும் அபிப்பிராயம் ஏற்பட்டது.

இலண்டன் 'ரைம்ஸ்' பத்திரிகையைச் சேர்ந்த வில்லியம் ஹீஸ் மொக் என்பவர் பின்வருமாறு எழுதினார்:

"சாள்ஸுக்கும், டயானாவுக்கும் தங்கள் தங்கள் முகாம்களில், இருவரையும் சீண்டிவிட்டு வேடிக்கை பார்க்கும் நச்சுத் தன்மை வாய்ந்த சிநேகிதர்கள் இருக்கின்றனர்.

இவர்கள் தங்களைச் சார்ந்தோரை திருப்திப்படுத்துவதற்கும், தங்கள் சுயகாரியங்களைச் சாதிப்பதற்கும், எதிரணியைப் பற்றி இல்லாத பொல்லாத காரியங்களை மிகைப்படுத்தி கூறிக்கொண்டே இருக்கிறார்கள்.

இவர்கள் எவ்வளவு தூரம் அப் பெண்ணை (டயானா) கீழே அமுக்கி இழிவு படுத்துகிறார்களோ, அவ்வளவுதூரம் வருங்கால அரச குடும்ப வாரிசுகளை (வில்லியம், ஹரி) இழிவுபடுத்துகிறார்கள் என்பதை உணரவில்லை!" என்று எழுதினார்.

ஒலிவருடன் தன்னை இணைத்து

## டயானாவின் 300 அழைப்புகள்

ஒலிவர் டயானாமீது அனுதாபம் காட்டினார்.

தனிமையிலும், ஏமாற்றத்திலும் உழன்ற டயானாவுக்கு ஒலிவரின் தொடர்பு-சந்திப்புக்கள் இதமாக இருந்தன.

ஒலிவர் திருமணமானவர். அவரது மனைவியும் டயானாவை சில தடவைகள் சந்தித்துள்ளார். ஒலிவர்தான் அழைத்துச்சென்று அறிமுகப்படுத்தினார்.

ஒலிவரின்மீது டயானாவுக்கும் ஒருவிதமான ஈர்ப்பு ஏற்பட்டது. இருவரும் மிகவும் நெருக்கமானார்கள்.

கென்சிங்டன் மாளிகைக்குள்-டயானாவின் அலுவலக அறைக்குள் இருவரும் இருக்கும்போது, கதவுகள் உள்ளே தாழிடப்பட்டிருக்கும்.

கென்சிங்டன் மாளிகை ஊழியர்கள் சிலர் மூலம் மேற்கண்ட தகவல் வெளியே கசிந்தது.

நேரில் சந்திக்காதபோது தொலைபேசி ஊடாக ஒலிவருடன் உரையாடுவார் டயானா.

'டயானாவுக்கு கலைவடிவங்களில் ஈடுபாடு இருக்கிறது. அவைபற்றிய தகவல்களை அறிய விரும்புகிறார்' என்று தன் மனைவியிடம் கூறிவைத்திருந்தார் ஒலிவர்.

ஒலிவர் வீட்டில் இல்லாதபோது அவரது மனைவியே தொலைபேசியில் குரல் கொடுப்பார். டயானா பேசமாட்டார். தொடர்பைத் துண்டித்துவிடுவார்.

டயானாவிடம் இருந்து மொத்தம் 300 தொலைபேசி அழைப்புக்கள் ஒலிவருக்கு சென்றுள்ளன.

கென்சிங்டன் மாளிகையில் இருந்தும், டயானாவின் காரில் இருந்தும் அழைப்புக்கள் சென்றுள்ளன.



ஒலிவர்

ஒலிவர் கெட்டிக்காரர். டயானாவுக்கு அவரை மிகவும் பிடித்திருக்கிறது. கலைவடிவங்களை ஆராய்ந்தவர், டயானாவையும் கலை வடிவங்களில் சேர்த்து விட்டார். அதனால் இரசித்து இன்புறுகிறார். இன்புறுத்துகிறார்.

மேற்கண்டவிதமாக பத்திரிகைகள் விவரித்துக் கொண்டிருந்தன. டயானா எந்தத் திகதிகளில் ஒலிவருக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்தார், என்ற விபரங்களை 'நியூஸ் ஒ.்ப் த வோ்ல்ட்' பத்திரிகை வெளியிட்டிருந்தது.



### மறுப்பு

ஒலிவருக்கும் தனக்கும் இடையே அந்தரங்க உறவு இருப்பதாகக் கூறப்பட்டதை டயானா மறுத்தார்.

பத்திரிகையில் கூறப்பட்டிருப்பது வெறும் புரளி என்றார் டயானா.

"பத்திரிகையில் ஒலிவருடன் தொலைபேசியில் பேசியதாக குறிப்பிடப்பட்ட பெரும்பாலான நாட்களில் நான் இலண்டனில் இருக்கவில்லை. பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட செய்திகள் வந்தபின்னர் அவரைச் சந்திப்பதை டயானா தவிர்த்தார்.

சில வாரங்கள் தொடர்ந்து வெளியான டயானா-ஒலிவர் விவகாரம் படிப்படியாக அமுங்கிப்போனது.

இந்த உறவு பற்றிய கதைக்கு பத்திரிகைகளில் தகுந்த ஆதாரத்தை வெளியிட முடியவில்லை.

### சாள்ஸ் முகாம்

உலகில் பல அரச குடும்பங்கள் இன்றும் இருந்தாலும், பிரிட்டிஷ் அரச குடும்பமே பெருமதிப்பும், அந்தஸ்தும் பெற்று விளங்குகின்றது.

அரச பரம்பரையைச் சாராத சிலர் அரச குடும்பத்து மணமக னாகவும், மணமகளாகவும் இணைந்துள்ளனர்.

வருங்கால அரசராகும் தகுதிபடைத்த சாள்ஸின் மனைவியாக இருந்து, இங்கிலாந்தின் ராணி என்ற அந்தஸ்தை டயானா பெறும் தகுதியுடையவராகவிருந்தார்.

ஆனால் அந்தப் பெரும் தகுதிவாய்ந்த அந்தஸ்தை துச்சமாக மதித்து தூர விலகும் அளவுக்கு மனோதிடம் கொண்டிருந்தார்.

இத்தகைய மனோதிடம் கொண்ட டயானாவை பிரிட்டிஷ் உயர்மட்டத்தினர் பலவாறாக விமர்சித்தனர்.

இவர்களில் பழமைவிரும்பிகள் (Conservative), மூத்த அரசியல்வாதிகள், அரச நிர்வாக உயர்மட்டத்தினர், அறிவு ஜீவிகளில் சில தரப்பினர் ஆகியோரைக் குறிப்பிடலாம். இவர்களில் பலர் சாள்ஸின் முகாமைச் சேர்ந்தவர்கள்.

இத்தகையோர் கண்களுக்கு டயானா சுயநலக்காரியாகவும் சித்தப்பிரமை பிடித்தவர் போன்றும் தென்பட்டார்.

ஆனால் டயானா அவர்களது விமர்சனங்களைப் புறந்தள்ளினார். தன் போக்கில் சென்றார்.

(அடுத்த வாரமும் வரும்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

## கொழும்பு வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**ஏ. கிறேஸ்,**
7/1 A, அலெக்சான்றா வீதி, கொழும்பு -06.


பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

www.padippakam.com





தேவி கோயிலிற் சென்று
தீமைகள் பிறர்கள் செய்ய
ஆவி பெரிதென் றெண்ணிக்-கிளியே!
அஞ்சிக் கிடந்தா ரடீ!

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# முடியாதது எதுவுமில்லை



ஒரு குளத்தில் இரண்டு வாத்துக் கள் தமது நான்கு குஞ்சுகளுடன் வாழ்ந்து வந்தன. அந்த நான்கு வாத்துக்குஞ்சுகளில் மூன்று வாத்துக் குஞ்சுகள் ஆரோக்கிய மாகவும், பலசாலிகளாகவும் இருந்தன. ஒன்று மட்டும் நோஞ்சானாக இருந்தது.

ஒரு நாள் பெரிய வாத்துக்கள் இரண்டும் தமது குஞ்சுகளை அழைத்துக் கொண்டு குளத்தில் இரை தேடச் சென்றன. முதல் மூன்று வாத்துக் குஞ்சுகளும் நன்றாக நீந்தின. அவை தண்ணீரில் மூழ்குவதும், இறக்கைகளை அசைப்பதுமாக இருந்தன.

ஆனால் நோஞ்சான் வாத்துக் குஞ்சு நீரில் மூழ்கி எழவும் நீரில் வேகமாக நீந்தவும் முடியாமல் குளத்தின் கரையில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. இதைப்பார்த்த மற்ற வாத்துக் குஞ்சுகள், அதனை நீந்த அழைத்தன.

"நான் நோஞ்சானாக இருக்கிறேன். எனக்குச் சரிவர நீச்சல் தெரியாது!" என்று கூறி அழுதது அந்தக் கடைசி வாத்துக் குஞ்சு.

இதைக் கண்ட பெரிய வாத்துக்கள் இரண்டும் அதனருகில் சென்று,

"நீ நோஞ்சான் இல்லை. உனக்கு இன்னும் போதிய பலம் வரவில்லை. நீ அழக்கூடாது. நீ முயற்சி செய்தால் பல சாலியாக, நன்றாக நீந்தக்கூடியவனாக மாறலாம்!" என்று தேறுதல் கூறின.

நோஞ்சான் வாத்து நேரம் கிடைக்கும் போதெல்லாம் நன்றாக நீந்திப் பழகியது.

ஒரு நாள் வாத்துக்கள் எல்லாம் இரை தேடப் புறப்பட்டன. உடனே நோஞ்சான் வாத்து மற்ற வாத்துக்களைப் பார்த்து,

"நீங்கள் எல்லாரும் கரையிலேயே இருங்கள். நான் உங்கள் எல்லாருக்கும் இரை கொண்டு வருகிறேன்!" என்று கூறி விட்டுப் பதிலுக்குக் காத்திராமல் குளத்தில் பாய்ந்து நீந்திச் சென்றது.

நோஞ்சான் வாத்து வேகமாக நீந்திச் சென்று தண்ணீரில் மூழ்கி இரைகளை எடுத்துவந்தது. இதைக் கண்ட மற்ற மூன்று வாத்துக் குஞ்சுகளுக்கும் ஒரே வியப்பு. அவை, நோஞ்சான் வாத்தைப் பார்த்து,

"நீயா இப்படி நீந்துவது? நம்ப முடியவில்லையே! எப்படி இவ்வளவு விரைவாகக் கற்றுக் கொண்டாய்? உன்னால் நீந்த முடியாது என்றல்லவா நாம் நினைத்தோம்!" என்று அவை ஆச்சரியத்துடன் கேட்டன.

"நீங்கள் தூங்கும் போதும், ஓய்வெடுக்கும் போதும், நான் விடாமுயற்சியுடன் இதையெல்லாம் கற்றுக் கொண்டேன்," என்று பெருமையாகக் கூறியது நோஞ்சான் வாத்து.

மற்ற வாத்துக்கள் இதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டன.

**முயன்றால் முடியாதது எதுவுமில்லை என்பதை அந்த நோஞ்சான் வாத்து நிரூபித்து விட்டதல்லவா?**

## அதிசயம் - ஆனால் உண்மை!



↓ பன்றிபோல் தோற்றமளிக்கும் பபிருஸா என்ற மானுக்கு, யானையின் தந்தங்கள் போன்று ஓரடி நீளத்திற்கு கொம்புகள் உள்ளன.



↑ ஆபிரிக்க முள்ளம்பன்றியின் முள்மயிரை அங்குள்ள மெய்ஜே பழங்குடியினர் அம்பாகப் பயன்படுத்துகின்றனர்.





↓ முட்டைக்குள் இருக்கும்போதே ஒலியெழுப்பக்கூடிய ஒரே உயிரினம் நைல் முதலை. நைல் முதலை முட்டையிட்டு அதை நிலத்தில் புதைக்கும். முட்டையிலிருந்து முதலைக் குஞ்சு வெளியே வரும் நேரம் வரும் போது, நிலத்தில் புதையுண்ட முட்டை 'ஹொங்க்' என்று ஒலியெழுப்பும். தாய் முதலை, நிலத்தைத் தோண்டி முட்டையை வெளியே எடுத்து, அதிலிருந்து முதலைக் குஞ்சை விடுவிக்கும்.



↑ நள்ளிரவில் மட்டுமே மலரும் ஒரு வகைக் கள்ளிச் செடியின் பெயர் 'இரவு ராணி'. இப்பூவின் வாசனை அரை மைல் தூரத்திற்கப்பால் பரவும்.


## இத்தாலி நாட்டுச் செய்திகள்

* இத்தாலி நகரான வெனிஸில் வீதிகளே கிடையாது. கால்வாய்கள்தான் வீதிகள். கோடோலா என்று அழைக்கப்படும் படகுகள் தான் போக்குவரத்துக்குப் பயன்படுகின்றன.
* இத்தாலியர்கள் சேமியா தயாரிப்பில் உலகில் தலை சிறந்து விளங்குகிறார்கள். இத்தாலியர்கள் சேமியாவை 'ஸ்பகட்டி' என்கிறார்கள்.



* 'பியட் கார்' இத்தாலியத் தயாரிப்பு. அதேபோல் உலகில் பிரபலமான ஸ்கூட்டர்களான 'வெஸ்பா', 'லம்ப்ரெட்டா' போன்றவைகளும் இத் தாலியத் தயாரிப்புத்தான்.
* உலகில் அதிவேகமான மின்சார ரயில்கள் அதிகமாக ஓடுவதும் இத்தாலியில் தான்.
* இத்தாலியர்களின் அன்றாட அலுவல்களில் சங்கீதமும் ஒன்று. தபால்காரர் பாடிக்கொண்டே கடிதங்களை விநியோகிப்பார். குழந்தைகள் பாடிக்கொண்டே பாடசாலை செல்வார்கள்.
* சீட்டுக்கட்டுக்கள் ஐரோப்பாவில் முதன் முதலாக இத்தாலியில் 13ம் நூற்றாண்டில் விளையாடப்பட்டன.
* குடும்பப் பெயரைத் தன் பெயருக்குப் பின்னால் போட்டுக் கொள்ளும் பழக்கம் இத்தாலியில் தான் தோன்றியது.
* உலகையே கலக்கிய மாவீரன் நெப்போலியன் உண்மையில் ஃபிரெஞ்சுக் குடிமகன் அல்ல. இத்தாலிதான் நெப்போலியனின் தாயகம்.
* உலகில் பல இடங்களில் வன்முறைகளில் ஈடுபட்டு வரும் மாஃபியா கும்பல் முதன் முதல் தோன்றியது இத்தாலியின் சிசிலித் தீவில்தான்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **16.01.1999.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **279**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 277

பரிசுக்குரியவர்:
கா. வஸிலா அப்பாஸ்,
கமு/ஸம்ஷ் மத்திய கல்லூரி, மருதமுனை.


பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ம. கோணேஸ்வரி,<br>சென். போ்ணடேற் த.ம.வி., சிலாபம். | எம்.எம். நிஸ்தார்,<br>அப்துல் மஜீது வித்தியாலயம், கிண்ணியா-01 |
| செல்வி. விஜிதா பேரின்பநாயகம்,<br>சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. | வி. ஜனகன்,<br>சென் பீட்டர்ஸ் கல்லூரி, கொழும்பு-4. |
| தம்பிப்பிள்ளை தவக்குமார்,<br>மண்டூர் மகாவித்தியாலயம், மண்டூர். | எம். அப்துல் ஹஸான்,<br>சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். |
| எஸ். செல்வராஜ்,<br>அ.த.க. பாடசாலை, திருகோணமலை. | ரா. நிரோசன்,<br>மகஜன கல்லூரி, மட்டக்களப்பு. |
| ரா. விதூசியா,<br>சென் ஜோசப் த.ம. வித்தியாலயம், மஸ்கெலியா. | ஜமீலா சித்தீக்,<br>கோடோபா சர்வதேசச் கல்லூரி, அக்குறனை. |

## ப்ரினொலொஜி

* **'ப்ரினொலொஜி' என்றால் என்ன?**

ஒரு மனிதனின் மண்டையோட்டை ஆராய்வதன் மூலம் அவனது குணங்களைக் கண்டுபிடிப்பதே ப்ரினொலொஜி எனப்படும்.



* **மண்டையோட்டை வைத்து எப்படிக் கண்டுபிடிப்பர்?**

ப்ரினொலொஜி ஆராய்ச்சியாளர்கள் மண்டையோட்டைத் தடவிப்பார்த்து, அதன் மேடு பள்ளங்களை வைத்தே அம்மனிதன் கவிஞனா அல்லது திருடனா என்பதைக் கூடச் சொல்லி விடுவர்.

* **மனிதனின் அறிவுத் திறமையை எப்படிக் கண்டுபிடிப்பர்?**

முன் மண்டையோட்டை வைத்தே கண்டுபிடிப்பர். முன் மண்டையோடு பெரிதாக உப்பி இருந்தால் புத்திசாலி. சிறியதாக இருந்தால் முட்டாள்.

* **இப்படி அறிவுத் திறமையைக் கண்டு பிடிக்கலாமா?**

இது நம்பக்கூடியமுறையல்ல என்று பல ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

* **ப்ரினொலொஜியைக் கண்டுபிடித்தவர் யார்?**

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த மருத்துவரான ப்ரோன்ஸ் ஜோசப் என்பவர்-800களில் இம்முறையைக் கண்டுபிடித்தார்.

## கண்டுபிடிப்புக்கள்

நாம் இப்போது இருபதாம் நூற்றாண்டின் இறுதி ஆண்டில் இருக்கிறோம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப் பட்ட சில பொருட்களும் அவை கண்டு பிடிக்கப்பட்ட ஆண்டுகளும் வருமாறு:

1. நீராவிப்படகு, நீராவி ரயில் எஞ்சின் - 1802
2. புகையிரதம் - 1825
3. கிருமி நாசினி மருந்து, தீக்குச்சி- 1827
4. தந்தி - 1837
5. சைக்கிள் - 1839
6. சினிமா, கண்ணாடிச் சாமான்கள் - 1887

## ஏன் தெரியுமா?



குளிர்சாதனப்பெட்டி இல்லாதவர்களில் பெரும்பாலானவர்கள் கோடை காலத்தில் மண்பானையில் தண்ணீர் வைத்திருப்பார்கள். கடும் வெய்யில் காலத்திலும் மண்பானையில் உள்ள நீர் குளிர்ச்சியாக இருக்கும்.

இப்படிக் குளிர்ச்சியாக இருப்பதற்குக் காரணம் என்ன தெரியுமா?

மண் பானையில் கண்ணுக்குத் தெரியாத ஏராளமான நுண்துளைகள் உள்ளன. இந்த நுண்துளைகள், மண்பானைகளில் மணல் துகள்களுக்கிடையேயுள்ள இடைவெளிகள் ஆகும்.

இத்துளைகள் வழியாக நீர் மிகச் சிறிய அளவில் கசியும். கசிந்த நீர் வெளியே உள்ள வெப்பத்தால் சூடாக்கப்பட்டு ஆவியாக மாறும். ஆவியாவதற்கு இந்த வெப்பம் மட்டும் போதாது. ஓரளவு வெப்பத்தை மண்பானையில் உள் நீரில் இருந்தும் எடுத்துக் கொள்ளும்.

இதனால் மண்பானை நீர், வெளி வெப்பநிலையை விடக் குறைந்த வெப்ப நிலையைக் கொள்கிறது. இதனால்தான் மண்பானை நீர் குளிர்ச்சியாக இருக்கிறது.

## இடதுகைப் பழக்கம்

* உலகின் மொத்த சனத்தொகையில் 4 சதவீதம் பேர் இடது கைப்பழக்கமுடையவர்கள்.
* லியானர்டோ டாவின்ஸி, மைக்கல் ஆஞ்சலோ போன்ற பல பிரபல ஓவியர்களும், அறிவுஜீவிகளும் இடது கைப் பழக்க முள்ளவர்கள்.



* கதவின் கைப்பிடிகள், பூட்டு, திருகாணி, மோட்டார் வாகனங்கள், இசைக்கருவிகள், சட்டைப் பொத்தான்கள் போன்றவை வலது கையால் கையாள ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளன.
* நமது உடலின் பாகங்களின் இருபக்கமும் ஒரே மாதிரி இருப்பதில்லை. இடப்பக்க மூளை வலப்பக்க மூளையை விட அதிக சக்தி வாய்ந்தது.
* இடது கைப்பழக்கமுள்ளோருக்கு மூளையின் வலப்பக்கமும், இடப் பக்க உடலும் சக்தி வாய்ந்ததாக இருக்கும்.

## குட்டிச் செய்திகள்

* உலகில் 3,50,000 வகைத் தாவரங்கள் உள்ளன.
* கடைசியாகக் கண்டறியப்பட்ட கிரகம் புளூட்டோ.
* ஒரு யானையால் சராசரியாக 4 தொன் எடையைத் தூக்க முடியும்.
* மூக்குக் கண்ணாடி இத்தாலி நாட்டில்தான் முதலில் அறிமுகமானது.
* கடலின் மீது சூரிய ஒளி படாதிருந்தால் கடல் கறுப்பாகத் தெரியும்.
* ஜெர்மனியில் உள்ள ஒரு ஏரியின் நீர் அடிப்பாகத்தில் கசப்பாகவும் மேற்புறம் இனிப்பாகவும் உள்ளது.
* மானின் கொம்புகள் வருடம் ஒரு முறை விழுந்து மீண்டும் முளைக்கும்.
* சீன மொழி தட்டச்சில் 1500 எழுத்துக்கள் உள்ளன.
* உலகத்தில் மிகவும் கனமான பொருள் இரும்பு அல்ல, யுரேனியம்.
* நின்றவாறே முட்டையை அடைகாக்கும் பறவை பெங்குவின்.

## நீரோட்டம்

கடலில் நீரோட்டம் அதிகம் உள்ள இடங்களில்தான் மீன்கள் அதிகமாக உள்ளன. இது ஏன் என்று உங்களுக்குத் தெரியுமா?

நீரோட்டம் உள்ள இடங்களில், நீரோட்டங்கள் உயிர் வாயுவையும், சத்துப் பொருட்களையும் அதிகம் கொண்டுவந்து சேர்ப்பதால், அங்கு மீன்கள் நன்றாக வளர முடிகிறது. எனவே தான் நீரோட்டங்கள் அதிகம் உள்ள பகுதிக்கு மீன்கள் வருகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

# டிசம்பர் பௌர்ணமி

## 11

**மர்மம், காதல் குடும்ப நயம் கலந்த விறு விறு தொடர்**

**கிரைம் சக்கரவர்த்தி**
**ராஜேஸ்குமார்**

**இதுவரை**

பிரபல தொழிலதிபர் ருத்ரமூர்த்தியின் ஒரே மகன் நித்தியன். பம்பாயில் சிறையிலிருந்து விடுதலையாகி வருபவனை வெளிநாட்டில் இருந்து வருபவனாகக் கூறி விசாலிக்கு மணம்முடிக்க திட்டமிடுகிறார். நித்தியனோ சாந்தாவைக் காதலிக்கிறான். நித்தியன் சிறையில் இருந்து வந்தவன் என்ற விடயம் விசாலி வீட்டுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அவ்வாறு இருந்தும் கல்யாணம் செய்ய சம்மதம் என்கின்றனர். நித்தியனோ சாந்தாவை கல்யாணம் செய்ய விரும்புகிறான். சாந்தாவை கல்யாணம் செய்தால், தான் தற்கொலை செய்வேன் என்று தந்தை ருத்ரமூர்த்தி மிரட்டுகிறார். நித்தியன் பணிவதாக நடிக்கிறான்.

**இனி......**

ரோட்டின் எதிர் பக்கத்தில் காரை நிறுத்திக் கொண்டு டிரைவர் சீட்டிலிருந்து எட்டிப் பார்க்கும் விசாலியை பார்வையால் வாங்கியதும் நித்தியனின் இருதயம் ஜிம்னாஸ்டிக் பேர்வழியைப் போல் ஒரு குட்டிக்கரணம் போட்டது.

கிசுகிசுப்பாய் முகுந்தனைக் கூப்பிட்டான்.

"முகுந்தன்."

"ம்...."

"ரோட்டுக்கு எதிர் சைடில் விசாலி கார்ல உட்கார்ந்துக்கிட்டு என்னைக் கூப்பிடறா?"

"அவ எப்படி இங்கே?"

"தெரியலை. போய் பேசிட்டு வர்றேன்."

"நித்தியன்! சாந்தா யாருன்னு கேட்டா நீ என்ன பதில் சொல்லுவே?"

"உண்மையைச் சொல்லிடலாம்னு இருக்கேன். எப்படியிருந்தாலும் ரெண்டு நாள் கழிச்சு உண்மை தெரியத்தானே போகுது. அதை இன்னிக்கே- இப்பவே சொல்லிட்டா என்ன?"

"வேண்டாம் நித்தியா! கல்யாணம் முடியறவரைக்கும் விசாலிக்கு இந்த விஷயம் தெரியக்கூடாது."

"சரி! சாந்தா யாருன்னு கேட்டா என்ன பதில் சொல்றது?"

"என்னோட ஃபிரண்ட் முகுந்தனோட சிஸ்டர்னு இப்போதைக்கு சொல்லி வை. போதும்."

அரைமனதோடு தலையசைத்துவிட்டு நித்தியன் ரோட்டைக் கடந்து எதிர்ப்பக்கம் போனான்.

விசாலி இப்போது கீழே இறங்கி நின்றிருந்தாள். மார்புக்கு குறுக்காக கைகளைக் கட்டிக் கொண்டு தலையை ஒரு பக்கமாய் சாய்த்தபடி கேட்டாள்.

"என்ன நல்லி சில்க்ஸ் பர்ச்சேஸ் போலிருக்கே?"

"ஆமா... ஆமா... என் ஃபிரண்டோட சிஸ்டருக்கு வர்றவாரம் கல்யாணம்."

"அதை ஏன் இவ்வளவு கவலையோட சொல்றீங்க?" விசாலி சிரித்துவிட்டுக் கேட்டாள்.

"பர்ச்சேஸ் முடிஞ்சுதா?"

"ம்...."

"உங்க ஃப்ரண்டோட சிஸ்டரை கார்ல ஏறும்போது பார்த்தேன். ரொம்ப அழகாயிருக்காங்க.. பேர் என்ன?"

"சாந்தா"

"உங்களுக்கு பட்டுச் சேலைகளைக் கூட செலக்ட் பண்ணத் தெரியுமா?"

"எனக்கு அதெல்லாம் தெரியாது. ஃபிரண்டு கூப்பிட்டான். சும்மா ஒரு கம்பெனிக்காக வந்தேன். ஆமா, நீ எங்கே இந்தப் பக்கம்?"

"பக்கத்து ரோட்லதான் எங்க லேடீஸ் கிளப். வீட்ல போர் அடிச்சா இந்தப் பக்கமாக வர்றது உண்டு. ரைட்ல கட் பண்றதுக்காக முயற்சி செஞ்சபோதுதான் உங்களை நல்லி சில்க்ஸ் வாசல்ல பார்த்தேன்."

"எதிர்பாராத சந்திப்பு."

"இதுக்காக சந்தோஷப்படறீங்களா? கவலைப்படறீங்களா?"

"சந்தோஷம் தான்."

"உங்க முகத்தைப் பார்த்தா அப்படித் தெரியலையே."

"நோ... நோ... இட்ஸ் ஏ ப்ளஷர்."

"சரி... உங்க ஃப்ரண்டையும் அவரோட சிஸ்டரையும் எனக்கு அறிமுகப்படுத்தி வைக்க மாட்டீங்களா?"

"மோஸ்ட் வெல்கம்! வாயேன்!"

நித்தியன் செல்லிவிட்டு ரோட்டைக் கடக்க விசாலி பின் தொடர்ந்தாள்.

காருக்கு வந்தார்கள்.

டிரைவிங் சீட்டில் உட்கார்ந்திருந்த முகுந்தன் ஒரு புரியாத பார்வை பார்த்துக் கொண்டு கீழே இறங்கி நிற்க.

"முகுந்தன்! ஷி இஸ் விசாலி."

"என்னங்க... இப்படியா மொட்டையா இன்ட்ரட்யூஸ் பண்றது?"

"ஷி இஸ் விசாலி.. மை 'வுட்பி'ன்னு சொல்லணும்."

முகுந்தன் செயற்கையாய் புன்னகைத்தான். "கிளாட் டு மீட் யூ....."

"உங்க சிஸ்டருக்கு மேரேஜ்ன்னு சொன்னார்."

"ஆமா."

"என்னிக்கு மேரேஜ்?"

"அ.. அது... அது... வர்ற வாரம் புதன் கிழமை." முகுந்தன் திணறலாய் பேசிக் கொண்டிருக்கும் போதே சாந்தா காரின் பின் சீட்டிலிருந்து தயக்கமாய் கீழே இறங்கினாள்.

விசாலி அவளை நெருங்கி புன்னகைத்து தோள் மேல் கை வைத்தாள்.

"நான் விசாலி... அடுத்த மாதம் இருபதாம் தேதிக்கு மேல் இந்த விசாலியோட பேருக்குப் பின்னாடி நித்தியன் என்கிற அவரோட பேர் ஒட்டிக்கிட்டு இருக்கும்... உங்களுக்கு அடுத்த வாரம் கல்யாணமாம்... ஹார்ட்டி கன்க்ராட்ஸ்.... உங்க பேர் சாந்தாவா?"

"ம்..."

விசாலி சிரித்தாள். "பேருக்கு ஏத்த மாதிரியே சாந்தமா அழகா இருக்கீங்க! பட்டுப்புடவை எடுக்க வந்ததா இவர் சொன்னார். புடவை எடுத்தாச்சா?"

சாந்தா நித்தியனை ஒரு கலவரப் பார்வை பார்த்துக் கொண்டு தலையசைத்தாள். "ம்..."

"என்ன புடவை எடுத்திருக்கீங்கன்னு நான் பார்க்கலாமா?"

சாந்தா சில விநாடிகள் தயங்கிவிட்டு தயக்கமாய் பட்டுப்புடவை இருந்த அட்டைப் பெட்டியை எடுத்துப் பிரித்துச் சேலையைக் காட்டினாள்.

வாங்கிப் பார்த்த விசாலி "வாவ்" என்று உதட்டைக் குவித்துவிட்டு, "சூப்பர் செலக்ஷன்! இந்தப் புடவையை யார் செலக்ட் பண்ணியது?" என்று கேட்டாள்.

"நான் தான்." நித்தியன் குறுக்கிட்டுச் சொல்ல, விசாலி தன் புருவங்களை அரை மில்லி மீட்டர் உயரத்திற்கு உயர்த்தினாள்.

"உங்களுக்கு புடவைகளை செலக்ட் பண்ற இந்த சென்ஸ்கூட இருக்கா. பரவாயில்லையே! நமக்குக் கல்யாணமான பிறகு எனக்கு இந்த புடவை செலக்ஷனைப் பத்தின கவலையே இருக்காது."

விசாலி சொல்லிவிட்டுச் சிரிக்க பதிலுக்கு மூன்று பேரும் அவஸ்தையாய் ஒருத்தரையொருத்தர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டார்கள்.

"என்ன சாந்தா... அடுத்த வாரம் உங்களுக்கு கல்யாணம். உங்க முகத்துல அந்த சந்தோஷத்துக்கான ஒரு எக்ஸ்ட்ரா மினுமினுப்பைக்கூட பார்க்க முடியலையே"

விசாலி கேட்ட கேள்விக்கு சாந்தா, எந்தப் பதிலும் சொல்லாமல் சிரித்து வைத்தாள்.

"நீங்க எந்தக் காலேஜ்?"

"நான் படிச்சதெல்லாம் வெளியூர் காலேஜ்."

"என்ன கோர்ஸ்."

"பி.எஸ்.ஸி."

"ஏதாவது ஜாப் போறீங்களா?"

"இல்லை."

"உங்களுக்கு கணவரா வரப்போகிறவர் என்ன பண்ணிட்டிருக்கார். பிஸினஸா... ஜாப்பா?"

சாந்தா தன் புறங்கழுத்தில் பூத்துவிட்ட வியர்வையை சேலைத்தலைப்பால் ஒற்றிக் கொண்டே மெல்லிய குரலில் சொன்னாள்.

"பி... பிசினஸ்..."

"விஷ் யூ ஏ ஹேப்பி மேரிட் லைஃப்..."

"தாங்க் யூ."

"வெறும் தேங்க்ஸ் மட்டும்தானா! என்னைக் கல்யாணத்துக்குக் கூப்பிட மாட்டீங்களா?"

சாந்தா நித்தியனைப் பார்க்க, நித்தியன், முகுந்தனைப் பார்த்தான்.

முகுந்தன் புன்னகைத்தான். "கையோடு இன்விடேஷனைக் கொண்டு வந்திருந்தா இப்பவே குடுத்து இருப்பேன். சாயந்தரத்துக்குள்ள நித்தியன் மூலமா உங்களுக்கு இன்விடேஷன் கிடைக்கும்படியா செய்யறேன்."

"வேண்டாம்... எனக்கெதுக்கு தனியா இன்னொரு இன்விடேஷன்? இவர் கூடவே நானும் கல்யாணத்துக்கு வந்துடறேன்." சொன்ன விசாலி நித்தியனை ஏறிட்டாள்.

"என்னங்க... கல்யாணத்துக்கு என்னையும் கூட்டிட்டு போவீங்களா?"

"ம்...."

"அதைக் கொஞ்சம் சாந்தோஷமா சொல்றது?"

"ம்... கூட்டிட்டுப் போறேன்.... அவங்களுக்கு இன்னும் கொஞ்சம் பர்ச்சேஸ் இருக்கு... உம்மிடியார்ஸ் போகணும்."

விசாலி சிரித்தாள். "என்னைக் கிளம்புன்னு சொல்றீங்க! இட்ஸ் ஓகே! நான் கிளம்பறேன். சாயந்தரம் ஆறு மணிக்கு உங்களுக்கு ஃபோன் பண்றேன். ஃபோனுக்குப் பக்கத்திலேயே இருங்க."

"எதுக்கு ஃபோன்?"

"சும்மா கொஞ்ச நேரம் பேசிட்டிருக்கத் தான். நீங்க ஃபோனுக்குப் பக்கத்துல இல்லேன்னா நான் நேரே வீட்டுக்கு வந்துடுவேன். ரெண்டுல எது பெட்டர்னு நீங்களே யோசனை பண்ணிக்குங்க."

விசாலி சாந்தாவுக்கு மறுபடியும், 'கங்கிராட்ஸ்' சொல்லி, கன்னத்தைத் தட்டிக் கொடுத்துவிட்டு, முகுந்தனிடம் விடை பெற்றுக் கொண்டு எதிர்ப்பக்கமாய் இருந்த காருக்குப் போனாள்.

கார் கிளம்பிப் போகும்வரை மௌனம் காத்த நித்தியன், சாந்தாவிடம் திரும்பினான்.

அவளுடைய கண்களில் நீர்.

"என்ன அழறியா?"

"எனக்கு பயமாயிருக்குங்க."

"எதுக்குப் பயம்?"

"விசாலி உங்க மேல இவ்வளவு பிரியமா இருக்காளே?"

"அதுக்கு நான் என்ன பண்ணமுடியும்?"

"இவ்வளவு பிரியமா இருக்கிற விசாலியை ஏமாத்தப் போறதை நினைச்சா, மனசுக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்குங்க."

"இப்ப அப்படித்தான் இருக்கும். கல்யாணமானா எல்லாம் சரியாப்போயிடும்."

"வேண்டாங்க."

"என்ன வேண்டாம்."

"இந்தக் கல்யாணம் வேண்டாம்ங்க."

"பைத்தியம் மாதிரி உளறாதே..."

"இல்லீங்க. விசாலியை நீங்க கல்யாணம் பண்ணிக்காமே என்னை பண்ணிக்கிட்டா..."

"உன்னை பண்ணிக்கிட்டா?"

"சாந்தா! அது உன் கோழை மனசோட இல்யூஷன். உனக்கும் எனக்கும் கல்யாணம் நடந்தா, அது விசாலிக்கு அதிர்ச்சியாத்தான் இருக்கும். ஆனா, நீ நினைக்கிற மாதிரி எதுவுமே நடக்காது. பயப்படாதே. காருல ஏறு. உம்மிடியார்ஸ் போகலாம்."


சாந்தா காரில் ஏறாமல் முகுந்தனைப் பார்த்தாள். "நீங்களாவது உங்க ஃபிரண்ட்டுக்குச் சொல்லக்கூடாதா?"

முகுந்தன், ஒரு பெருமூச்சோடு நித்தியனை ஏறிட்டான். "சாந்தா சொல்றது ஒரு வகையில சரின்னுதான் என் மனசுக்குப்படுது. உனக்கும் சாந்தாவுக்கும் கல்யாணம் நடந்தா, அந்த அதிர்ச்சியை விசாலி தாங்கிக்குவான்னு என் மனசுக்குப் படலை. இந்தப் பிரச்சனையை சுலபமாக்க ஒரே ஒரு வழிதான் இருக்கு!"

"என்ன வழி?"

நித்தியன் கேட்டான்.

(பௌர்ணமி தொடரும்)



**அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை**

# சதாம் உசேன்

## 23

**ராஜையா**



கொமேனியின் இந்த அறை கூவல் ஈராக்கில் பெரும் பூகம்பத்தை ஏற்படுத்திவிட்டது.

ஈராக்கியர்களில் 95 சதவிகிதம் பேர் முஸ்லிம்கள். அவர்களில் 55 சதவிகிதத்தினர் ஷியா வகுப்பைச் சேர்ந்தவர்கள். மீதி 40 சதவிகிதத்தினர்தான் ஸுன்னி முஸ்லிம் வகுப்பினர்.

பக்கரும், சதாமும் ஸுன்னி வகுப்பைச் சேர்ந்தவர்கள். என்றாலும் அவர்கள் ஈராக்கில் ஸுன்னி வகுப்பு ஆட்சியை நிறுவிவிடவில்லை. மதச்சார்பற்ற- வகுப்பு சார்பற்ற ஆட்சியைத்தான் அமைத்திருந்தார்கள். காரணம் அவர்களின் மறுமலர்ச்சிக் கட்சியின் கொள்கையே அதுதான்!

அப்படியிருந்தும், கொமேனியின் அறைகூவல் கேட்டு ஈராக் ஷியா வகுப்பினர் ஆவேசம் அடைந்தார்கள். கிளர்ச்சியில் இறங்கினார்கள்.

வகுப்புக் கலவரம் மூண்டது.

'கொமேனி தூண்டி விட்ட ஷியாக்களின் கிளர்ச்சியை வளரவிடக்கூடாது. விட்டால், அது நம்ம மத வகுப்புச் சார்பின்மை கொள்கையை குழிதோண்டிப் புதைச்சிடும்.' என்று சதாம் உஷாரானார்.

கிளர்ச்சிக்குத் தலைமை வகித்த ஷியா வகுப்புத் தலைவர்களைக் கைது செய்தார். இதனால் கிளர்ச்சி அடங்குவதற்குப் பதிலாக தீவிரமடைந்தது.

கிளர்ச்சி மெல்ல மறுமலர்ச்சிக் கட்சிக்குள்ளும் புகுந்தது. ஷியாக்களின் கிளர்ச்சியில் நியாயமும் இருக்கிறது என்கிற ரீதியில் மறுமலர்ச்சிக் கட்சியிலிருந்த சில ஷியாத் தலைவர்களே பேச ஆரம்பித்தார்கள். கிளர்ச்சிக்கு அவர்கள் நேரடியாக அல்லது மறைமுகமாக ஆதரவு கொடுத்தார்கள்.

"கட்சிக்குள் இருக்கிற அந்த கருங்காலிகளைத் தண்டிக்கணும்" என்றார் சதாம்.

இதை பக்கர் ஏற்கவில்லை. அதற்குப் பதிலாக, "கட்சியில் உள்ள ஷியாத் தலைவர்களின் கருத்தை அலட்சியம் செய்யிறது நல்லது இல்ல. ஒரு சமரசத் திட்டம் தயாரிக்கணும். கிளர்ச்சியாளர்களோடு பேச்சு வார்த்தை நடத்தணும். கிளர்ச்சியை சுமுகமாக முடிவுக்குக் கொண்டுவரணும்!" என்றார் பக்கர்.

இதற்கு சதாம் உடன்பட மறுத்தார்.

"மத வெறியர்களோடும், வகுப்பு வெறியர்களோடும் சமரசம்ங்கிற பேச்சுக்கே இடமில்லை!" என்றார் சதாம்.

கட்சியில் பதினைந்து ஆண்டுகளும், ஆட்சியில் பதினொரு ஆண்டுகளும் முட்டல்கள் மோதல்களின்றி இணக்கத்துடன் பணியாற்றிவந்த பக்கருக்கும் சதாமுக்கும் இதனால் விரிசல் ஏற்பட்டது.

கட்சியிலிருந்த சில ஷியா தலைவர்களும், சதாமின் வளர்ச்சி கண்டு பொறாமைப்பட்டவர்களும் "சதாமை ஒழிக்க இதுதான் நல்ல சமயம்!" என்று பக்கருக்கு ஆதரவு கொடுத்து அவரைத் தூண்டிவிட்டார்கள்.

'சதாமை துணை ஜனாதிபதி பதவியிலிருந்து நீக்கினால்தான் கிளர்ச்சியாளர்களோடு சமரசம் செய்ய முடியும்! என்று பக்கர் நினைக்க...

'பக்கரை ஜனாதிபதி பதவியிலிருந்து அகற்றினால்தான் கடுமையான நடவடிக்கைகள் மூலம் கிளர்ச்சியை ஒடுக்க முடியும், என்று சதாம் முடிவு செய்ய...

கருத்து வேறுபாடு, அதிகாரத்துக்கான போட்டியாய் முகம் மாறியது...

இருவருமே குடும்பப் பெரியவர்களின் பேச்சுக்கு கட்டுப்படக் கூடியவர்கள் என்பதால் 'யார் ஆட்சியில் நீடிப்பது?' என்று முடிவு செய்யும் பொறுப்பை பெரியவர்களிடம் விட்டுவிட்டு அமைதியாகக் காத்திருந்தார்கள்.

குடும்பப் பெரியவர்களும் மற்ற முக்கியஸ்தர்களும் மௌனமாய் யோசித்தார்கள்.

கடைசியில், மாமா கயருல்லாதான் மௌனத்தைக் கலைந்தார்...

"பக்கர் ராஜினாமா செய்யட்டும்! சதாம் ஜனாதிபதி ஆகட்டும்!"

கயருல்லாவின் முடிவை அங்கிருந்தவர்கள் ஏகமனதாக ஆதரித்து ஆரவாரம் செய்தார்கள்.

பக்கர் எழுந்தார். சதாமிடம் வந்தார். அவரை கட்டியணைத்து வாழ்த்துக் கூறினார்.

உடல் நலம் சரியில்லாததால் ஜனாதிபதி பதவியை ராஜினாமா செய்வதாக நாட்டு மக்களுக்கு பக்கர் அறிவித்தார்.

புதிய ஜனாதிபதியாக சதாமின் பெயர் முன்மொழியப்பட்டது.

1979 ஜூலை 16ந் திகதி சதாம் ஜனாதிபதி ஆனார்.

கட்சிக்குள்ளும் வெளியிலும் களையெடுக்க வேண்டியவர்களின் பட்டியலை அன்றே தயாரித்து நடவடிக்கையில் இறங்கினார் சதாம்.

களையெடுக்கப்பட வேண்டியவர்களெல்லாம் களையெடுக்கப்பட்டார்கள்...!

இவ்விதம் தன் அதிகாரத்தை வலுவாக நிலைநிறுத்திக் கொண்டபிறகு, வெளிநாட்டு எதிரி பக்கம் அவர் தன் கவனத்தைத் திருப்பினார்.

1973ம் ஆண்டு பிற்பகுதியில் 'குர்திஸ்தான்' போராட்டம் திடீரென தீவிரம் அடைந்தது. குர்து போராளிகள் ஈரான் மூலம் கிடைத்த அமெரிக்க ஆயுதங்களைக் கொண்டு பல நகரங்களைப் பிடித்துக் கொண்டார்கள்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# உதட்டில் ஒரு மச்சம்

**இதுவரை**

அரவிந்த் ஒரு பைலட்.
அவனது மனைவி ஜ்யோதி.
அவர்களது நண்பன் விக்ரம்.
அவனுக்கு ஜ்யோதி மீது ஆசை.
இதற்கிடையே அரவிந்த்,
அமைச்சர் பிரகாஷ் குப்தாவுடன்
பைலட்டாக ஓடக்கரை
கிராமத்திற்குச் செல்கிறான்.
அக்கிராமத்தை வளைத்துப்போட
அமைச்சர் திட்டமிட
அதை எதிர்க்கிறார்கள்
கிராம இளைஞர்கள்.
பொலிஸ் சுடுகிறது.
சீனு காயமடைகிறான்.
அவன் மருத்துவமனையில்
அனுமதிக்கப்படுகிறான்.
கிராம இளைஞர்கள்
கொதிக்கின்றனர்.
அமைதி வழி சரிப்படாது
என்று ஆயுதம் ஏந்த
முடிவு செய்கின்றனர்.
நிலத்தை அபகரிப்பதில்
அமைச்சர் தீவிரம் காட்டுகிறார்.
அமைச்சரைக் கொல்ல
இளைஞர்கள் திட்டமிடுகின்றனர்.
சீனு மருத்துவமனையில்
இறக்கிறான்.

இனி....

**12**

பிரிட்டிஷ் காலத்துக் கட்டடத்தை நவீனப்படுத்திமிருந்தது, மெட்ரோபாலிடன் கிளப். பழமையே ஒரு நாகரீகம் என்பது போல, அங்கங்கே லாந்தர் மாடல் விளக்குகள். தேக்கில் இழைத்த விளக்குகள். கனமான மின் விசிறிகள். சீருடை அணிந்த பேரர்கள், ஊழியர்கள், பெரிய மரங்களின் நிழல்களில் கார்கள்.

மோகனன் ஜிப்ஸியிலிருந்து இறங்கினார்.

"குட்மார்னிங் சார்!" என்றார் செக்ரட்டரி, வெயிலிலும் கோட்டை அவிழ்க்காமல்.

"குட்மார்னிங்... வந்துவிட்டார்களா?"

"எல்லோரும் கான்ஃபரன்ஸ் ஹாலில் வெயிட் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். உங்களுக்கு காஃபி பிடிக்குமா, டீ சொல்லட்டுமா? அல்லது..."

"நத்திங். எனக்கு அதிக நேரமில்லை. பதினொரு மணிக்கெல்லாம் அமைச்சரின் பிளேன் வந்துவிடும். அப்புறம் நான் அவருடனேயே இருந்தாக வேண்டும். பரிசு வாங்குவோர் மொத்தம் எத்தனை பேர்?"

"ஒன்பது பேர்."

"அவர்களுடைய பெயர், முழு பயோடேட்டா எனக்கு வேண்டும். ஒரு லிஸ்ட் கொடுத்து விடுங்கள். வாருங்கள் அவர்களைப் பார்க்கலாம்."



ஒன்பது இளைஞர்களும் மோகனனைப் பார்த்ததும் எழுந்து நின்றார்கள். ஒவ்வொருத்தராக அறிமுகம் செய்து கொண்டு கை குலுக்கினார்கள். மூன்றாவதாக நின்றிருந்த இளைஞனின் பார்வையில் சற்று தடுமாற்றம் இருந்தது.

"யெஸ், யங்மேன், உன் பெயர் என்ன?"

"கைலாஷ்!" என்றார் செகரட்டரி. "நீச்சலில் முதலாவதாக வந்தவன். வாட் ஏ ஸ்விம்மர்"

"ஏன் தம்பி உன் கையெல்லாம் இப்படி வியர்த்திருக்கிறது?"

"எ... எனக்கு நார்மலாகவே அதிகம் வியர்க்கும்..."

"அப்பா என்ன செய்கிறார்?"

"ம்..."

"உன் ஃபாதர் மேன்! என்ன தொழில் செய்கிறார்?"

"ஸ்பின்னிங் மில்லில் வேலை பார்க்கிறார்."

"நீ படிக்கிறாயா, வேலைக்குப் போகிறாயா?"

"படிக்கிறேன்."

"எந்த காலேஜ்?"

"ஜவஹர் காலேஜ்."

"அப்படியொரு காலேஜ் மெட்ராஸில் இருக்கிறதா என்ன?"

"இ...இல்லை...அது மதுரை ஜில்லாவில் இருக்கிறது... அங்கே ஃபர்ஸ்ட் இயர் படித்தேன். இப்போது கரெஸ்பாண்டன்ஸ் கோர்ஸ் பண்ணுகிறேன்."

"ஸார், உங்களுக்கு ஃபோன்!" என்று கார்டுலெஸ் ஃபோனுடன் கிளப் மனேஜர் ஓடி வந்தார். மோகனன் வாங்கி காதில் பொருத்தினார்.

ஏர்ப்போட்டிலிருந்து டி.ஐ.ஜி. "அமைச்சரின் விமானம் டில்லியிலிருந்து புறப்பட்டு விட்டது என்று மெஸேஜ் வந்துவிட்டது சார்... பதினொரு மணிக்கு வந்திடும்."

"இன்னும் அரை மணி நேரத்தில் நான் அங்கே இருப்பேன்!" என்றார் மோகனன்... "ஸாரி ஃப்ரெண்ட்ஸ் ரொம்ப டீடெய்லான அறிமுகங்களுக்கு நேரமில்லை. சுருக்கமாக உங்களைப் பற்றிச் சொல்லுங்கள்." என்று அடுத்த இளைஞனிடம் கை நீட்டினார்.

✌ ☞

"இந்தியாவின் இதயமே இன்றைய இளைஞர்கள்தான். பாரததேசத்தின் இரத்த ஓட்டமே இளைஞர்களின் இயக்கம் தான். ஏன் இந்த உலகத்தின் எதிர்காலமே!" என்று யாரோ எழுதிக் கொடுத்த பேச்சை அமைச்சர் முழங்கிக் கொண்டிருந்தார். வண்டிகளில் கொண்டுவரப்பட்ட மக்களும், ஆர்வம் காரணமாக தாமாகவே வந்த மக்களும் நிரம்பியிருந்த கடற்கரை அமைதியாக இருந்தது. மோகனன் ஓய்வில்லாமல் பார்வையை வட்டமாகச் செலுத்தி எல்லா திசைகளையும் பார்த்துக் கொண்டிருந்தார். பாதுகாப்பிற்காக அங்கங்கே நிறுத்தியிருந்த பொலிஸ்காரர்கள் உஷாராக இருப்பதைப் பார்த்து மோகனன் திருப்தியடைந்தார்.

அமைச்சர் பேசி முடிந்ததும் பரிசு வழங்கும் நிகழ்ச்சி. பரிசு வாங்க வேண்டிய ஒன்பது பேரும் மேடைக்குக்கீழே படிகளின் துவக்கத்தில் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தனர். மோகனன் பர்ஸனலாக ஒவ்வொருத்தரையும் சோதித்துப் பார்த்துவிட்டார். எல்லாம் நிராயுதபாணிகள் என்று தீர்மானித்து விட்டார். இருந்த போதிலும், முந்தைய இரவின் கனவு அவரை இன்னமும் வதைத்துக் கொண்டிருந்தது.

திடீரென்று இடது கண்ணோரம் நிழலசைந்தது. தமிழக பொலிஸ்! "சார், எஸ்.பி. உங்களை அர்ஜெண்டாக ஜீப்பிற்குக் கூப்பிடுகிறார்."

அமைச்சரின் பேச்சு முடிந்து, அனைவரும் ஆரவாரமாகக் கை தட்ட ஆரம்பித்திருந்தனர். மோகனனுக்கு அந்த இடத்தை விட்டு அசைய மனமில்லை. ஆனாலும், பொலிஸ்காரரின் முகத்தில் இருந்த பரபரப்பு அவரைச் செலுத்தியது. எஸ்.பி.யும் பரபரப்பாக இருந்தார்.

"பரிசு வாங்குபவர்களின் பின்னணி பற்றிக் கேட்டிருந்தீர்கள் சார், சேகரித்து வர நேரமாகிவிட்டது. கைலாஷ் என்பவன் தங்கியிருக்கும் வீட்டு வாசலில் குப்பைத் தொட்டியில் இது கிடந்தது. அதனால்தான்...." அவர் பேசுவதைக் கவனிக்காமல், அவர் எடுத்துக்காட்டிய பூசணியைப் பார்த்தார் மோகனன். அங்கங்கே மார்க்கர் பேனாவின் அடையாளமும், கத்திக்கிழிப்பும்.

அவர் இரத்தம் வேகம் பிடித்தது. "பெயர் என்ன சொன்னீர்கள்?"

"கைலாஷ்! நீச்சல் போட்டியில் முதல் பரிசு."

"மை காட்!" மோகனன் தனது ரிவால்வரை உருவிக்கொண்டு, மேடை நோக்கி விரைந்தார். ஓடினால் மக்கள் கவனம் கவர்ந்து விடும் அபாயம் இருந்தது.

"அடுத்தது கைலாஷ்! நீச்சல் வீரர் முதல் பரிசு!" என்று அத்தனை மெகா ஸ்பீக்கர்களும் அறிவித்தன. மோகனன் ஓடினார்.

கைலாஷ் மேடையில் ஏறி அமைச்சரை நெருங்கி விட்டான். காலையில் அவருடைய கேள்விகளில் தடுமாறி வியர்த்து நின்றவன் இவன் தான். அவனை உடனே தடுத்தாக வேண்டும். குறிபார்த்து மோகனன் அவன் முழங்காலைச் சுட்டார். தோட்டா, குண்டு துளைக்க முடியாத மேடைக் கண்ணாடியில் மோதிச் சிதறியது. வீணானது. அமைச்சர் புன்னகையுடன் கைலாஷிடம் பரிசைக் கொடுத்தார்.

பாதுகாப்பு அமைச்சர் பிரகாஷ் குப்தாவின் பின்னே நின்றிருந்த பூனைப்படைக்காவலர்கள் நான்கு திசைகளிலும் பார்வையால் ஸ்கேன் செய்து கொண்டே இருந்ததால், மோகனன் ஓடி வந்ததும், ரிவால்வரால் சுட்டதும் அவருக்கு நேர் பின்னே இருந்தவனால் கவனிக்கப் பட்டுவிட்டது. மோகனன், அமைச்சரைத்தான் சுடுகிறாரோ என்று அரைக் கணம் அவனுக்கு சந்தேகம் தோன்றி மறைந்தது. ஆனால், பயிற்சி பெற்ற அவன் மூளை வெகு வேகமாகச் செயல்பட்டது.

மோகனன் சுட்டது அமைச்சரிடம் பரிசு வாங்குபவனைத்தான் என்று மின்னலடித்தாற்போல அவனுக்குப் புரிந்துபோக, அவன் ஓரடி முன்னே நகர, அதே கணத்தில் கைலாஷ் கப்பைப் பிடித்து அடிப்பாகம் இழுத்து, கத்தியை உருவ, அவனுடைய துப்பாக்கி திரும்பியது. கைலாஷின் கையில் இறங்கியது.

அதே நொடியில் அமைச்சரின் தோளைப்பிடித்து அவன் பின்னே தள்ள, கைலாஷிற்கும் அவருக்கும் இடையில் இடைவெளி உண்டானது. கைலாஷ் கையிலிருந்த கத்தி எகிறியது.

துப்பாக்கிச் சத்தம் பொதுமக்களிடையே ஏற்படுத்திய பரபரப்பும் மேடையில் கைலாஷைக் கீழே தள்ளி, காவலர் அவன் மார்பில் உட்கார்ந்து அழுத்திப் பிடித்ததும், சுறுசுறுப்பான பத்திரிகைக் கேமராக்களில் பளிச் பளிச்சென்று பதிவாயின.

அமைச்சரைக் காவலர்கள் சூழ்ந்து கொள்ள மோகனன் மேடை நோக்கி ஓடினார்.

♦♦♦

மீட்டிங் நடந்த இடத்திற்கு எதிரே இருந்த பழமையான கட்டடத்தின் மொட்டை மாடியில் உட்கார்ந்து பைனாக்குலரால் கவனித்துக் கொண்டிருந்த தேவேந்திரன் அதிர்ந்தான். "ச்சே!" என்று ஓங்கித் தொடையில் தட்டிக்கொண்டான். உடனடியாக அங்கிருந்து விலகி வேகமாக இருட்டில் கலந்தான்.

●●●

கைலாஷ் தன் கனவு தூள் தூளாக வெடித்துவிட்டதை சோகத்துடன் உணர்ந்தான். அவன்மீது, ஏறி அமர்ந்த காவலரை அசைக்க முடியவில்லை. இனி அமைச்சரை நெருங்குவது என்பது முற்றிலும் நடவாத காரியம்.

அவன் பிடிபட்டு விட்டான். தப்பித்தல் என்பது இல்லை.

'ஒருவேளை உன்னை அவர்கள் உயிருடன் பிடித்து விட்டால்கூட...'

'அதே கத்தியால் என் கழுத்தை வெட்டிக் கொள்வேன், தேவ்.' கத்தியும் கைக்கெட்டாத தூரத்தில் இருந்தது. அவன் புரட்டித் தூக்கப்பட்டான்.

பிரகாஷ் குப்தா, காவலர்கள் நெருக்கமாகப் புடைசூழ பரபரப்பாக மேடையிலிருந்து விலகுவது தெரிந்தது. மோகனன் ஒரு கைக்குட்டை போட்டு, கோப்பையின் அடிப்பாகமாக இருந்த கத்தியை கைரேகை கலையாமல் எடுத்தது தெரிந்தது. மேடையிலிருந்த மற்ற பிரமுகர்களும் இறங்கி ஓடினர்.

கைலாஷின் கண்கள் அலைபாய்ந்தன. என்ன செய்ய வேண்டும் என்று அரைக்கணத்தில் முடிவு செய்தான். மேடையின் உள்ளே விளக்குகள் அமைக்க மின்சார ஒயர்கள் மரச்சட்டங்களில் அங்கங்கே ஆணி அடித்து கொண்டு வரப்பட்டிருந்தன. ஒட்டுப் போட்ட ஒரு ஒயர் சந்திப்பைப் பிடித்து இழுத்தான். இன்சுலேஷன் டேப் அறுந்து விலக, மின்சாரம் அவன் உடலில் ஆசையோடு பாய்ந்தது. கைலாஷைப் பிடித்திருந்த காவலன் உதறியெறியப்பட்டான். கைலாஷ் ஒயரை விடாமல் இறுக்கமாகப் பிடித்துக்கொள்ள, அவன் உடல் உதறி நடுங்கி சிலிர்த்து எகிறிவிழுந்தது.

மோகனன் அவசரமாகக் குனிந்து அவன் மூக்கில் விரல் வைத்தார். "க்விக்... உடனே இவனை ஆம்புலன்ஸில் ஏற்றுங்கள். இவன் எனக்கு உயிருடன் வேண்டும்!"

(○—வரும்—○)

**சுபா**

---

# கவியரசுவின் சுயசரிதை

**31**

**கவியரசு கண்ணதாசன் எழுதிய—அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டிகள்' இவை....**

அவரை மத்தியஸ்தராக வைத்துக் கடன்களைப் பைசல் செய்வதென்று எல்லோரையும் அவன் அங்கே கூட்டியிருந்தான். சிலர் வந்தார்கள். சிலர் வரவில்லை. வந்தவர்களிடம் கொஞ்சங் கொஞ்சமாகக் கொடுத்து விடுவதென்று முடிவு செய்யப்பட்டது. வராதவர்கள் அனைவரும் நேரே கோர்ட்டுக்கே சென்றுவிட்டார்கள்.

மூன்று மாதங்களுக்குள்ளாக 34 வழக்குகள் கோர்ட்டுக்கு வந்துவிட்டன. நேரே வழக்கறிஞர் வி.பி. இராமனிடம் சென்றான் அவன். அவரை அவன் தன் வாழ்நாளில் மறக்கமுடியாது. அவர் அவனுக்குப் பெரும் உதவி செய்தார். "ஒரு வருஷத்துக்குள் சம்பாதித்துக் கட்ட முடியுமா?" என்று கேட்டார். "முடியும்" என்றான் அவன்.

ஒரு பக்கம் கடன் வந்தால் ஒரு பக்கம் வரவு வரவேண்டும் அல்லவா? அந்தப் பக்கம் அடி விழுந்தபோது, இந்தப் பக்கம் அவனுக்கும் ஏராளமான படங்களுக்கு சந்தர்ப்பம் வந்தது. நோட்டெழுதி வாங்கிய கடனுக்குப் பாட்டெழுதி வாங்கிய பணம் போகத் தொடங்கிற்று.

திரு.வி.பி. இராமன் வழக்குகளுக்கென்று அவனிடம் பணம் வாங்கி இருந்தால் பல்லாயிரம் ரூபாய்கள் அவனிடம் வாங்கியிருக்க வேண்டும். ஆனால் கடைசி வரையில் அவர் காலணாக்கூட வாங்கவில்லை!

தனக்கு வரும் பணத்தைத் தான் சேர்த்து வைத்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை அவன் இழந்துவிட்டான். அரசியலில்



அண்ணாதுரையும் அவரது ஜாதி வெறியும் தன்னை ஒதுக்குவதை எண்ணிக் கலங்கினான். எல்லாத் துன்பங்களும் ஒரே நேரத்தில் வந்து சேர்ந்தன.

உலகத்தில் தான் சில காவியங்களைப் படைக்க முடியும் என்று நம்பிக்கொண்டிருந்த அவனை– அந்த நம்பிக்கையும் கைவிடத் தொடங்கிற்று. நிம்மதியில்லாத நெஞ்சில் கற்பனை எங்கிருந்து வரும்? சினிமாப் பாடல்களுக்கே அந்தக் கற்பனை பயன்படத் தொடங்கிற்று.

இனியும் பலனற்ற கட்சி வேலை செய்து கட்சித் தலைவரின் பாவங்களுக்கு உடந்தையாக இருக்கக்கூடாது என்று அவன் முடிவு கட்டினான். ஊட்டி-குன்னூர் பகுதிகளில் ஒப்புக்கொண்டிருந்த கூட்டங்களைத் தவிர-மற்றக் கூட்டங்களை ரத்து செய்தான்.

தன் மனக்கிடக்கையை ஒரு தத்துவக் கட்டுரையாக வடித்தான். அதுவரை அவன் மனத்தில் அப்படியொரு கவனம் இருப்பதாகக் கட்சியில் யாருக்கும் தெரியாது. ஆனால் அந்த ஆண்டு அவன் கட்சியில் உறுப்பினராகப் பதிவு செய்துகொள்ளவில்லை என்பது மட்டும் அனைவருக்கும் தெரியும்.

அந்தக்கட்டுரை கட்சித் தோழர்களிடையே ஒரு பரபரப்பை உண்டாக்கிற்று. உட்கிடக்கையைச் சரிவரப் புரிந்துகொள்ள அவர்களில் பலரால் முடியவில்லையென்றாலும்– அதன் தலைப்பு அவர்களைச் சங்கடப் படுத்திற்று.

'போய் வருகிறேன்' என்பதே அந்தத் தலைப்பாகும்.

அந்த நேரத்தில் கட்சிக்குள் ஒரு பெரிய குழப்பம் உருவாகிக்கொண்டிருந்தது உண்மையில் அவனுக்குத் தெரியாது. கட்சிக்குக் கருணாநிதியைப் பொதுச் செயலாளராகக் கொண்டுவர வேண்டுமென்று சம்பத் முயற்சித்ததாகவும், சம்பத்துக்குத் தெரியாமல் கருணாநிதியை அண்ணாதுரை அழைத்துக் கொண்டுபோய், மனத்தை மாற்றிவிட்டதாகவும், கருணாநிதி மறைமுகமாக சம்பத்தைத் தாக்கிப் பத்திரிகையில் எழுதியிருப்பதாகவும் அவனிடம் கூறப்பட்டது. அவன் இந்தமாதிரி விவகாரங்களில் எல்லாம் தலையிட்டுக் கொள்வதில்லையாகையால் இவற்றைக் கூடப் பிறரிடம் கேட்டே அறிந்து கொண்டான்.

அப்பொழுதுதான் கட்சியில் பொதுக்குழு உறுப்பினர் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவன் சாதாரண உறுப்பினராகக்கூட ஆகாமலேயே இருந்துவிட்டான். ஆகவே அவனுடைய இராமனாதபுர மாவட்டத்தில் இருந்து வழக்கமாகப் பொதுக்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படும் அவன், அந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்படவில்லை.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுக் குழு உறுப்பினர்கள் புதிய பொதுச் செயலாளரைத் தேர்ந்தெடுப்பதற்காக லாயிட்ஸ் ரோடில் ஒரு கட்டடத்தில் கூடினார்கள். அன்றைக்குச் சம்பத்தின் கைதான் வெகுவாக ஓங்கியிருந்தது. அன்று அவர் விரும்பியிருந்தால்– அவர்தான் பொதுச் செயலாளர். அப்படி இருந்தது அன்றைய நிலைமை. அண்ணாதுரையே நடுங்கிக் கொண்டிருந்தார். துணைக் குழுக்களுக்கான தேர்தல் அங்கு நடந்தபோது, எல்லாக் குழுக்களிலும் சம்பத்தின் ஆதரவாளர்களுக்கே ஏராளமான வாக்குகள் கிடைத்தன.

மதியழகனைப் பொதுச் செயலாளராக்குவது என்று சம்பத் எடுத்துக்கொண்ட முடிவிற்கு; அங்கே பெருத்த ஆதரவிருந்தது. கருணாநிதியும் அவரது ஆதரவாளர்களும் கலங்கிப்போய் இருந்தார்கள். எல்லோரும் சம்பத்தையே சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள். அண்ணாதுரை சம்பத்தை தனியே அழைத்துக் கொண்டு போனார். உண்மையிலேயே கண்ணீர்விட்டு அழுதார். "இந்தத் தடவை மட்டும் நான் பொதுச் செயலாளராக இருந்துவிடுகிறேன். நமக்குள்ளே தகராறு இருப்பதாக யாருக்கும் தெரியவேண்டாம்," என்றார்.

தன்னாலே ஏற்றிவைக்கப்பட்ட ஒரு மனிதர், தன் கையைப் பிடித்துக்கொண்டு அழுகிறார் என்ற உடனேயே சம்பத் செய்த முதற் பெருந் தவறு இதுதான். அவரைச் சுற்றி இருந்த பல பேரும் உறுதியாக நின்றபோது– அவரது இளகிய நெஞ்சம் அண்ணாதுரையின் கண்ணீருக்குப் பணிந்து விட்டது.

*(சரிதம் தொடரும்)*



படிப்பகம்

www.padippakam.com

# சொந்தங்கள்

'சரியா 12 மணிக்கு வரவேண்டிய பஸ் 12.10 ஆகிட்டுது- இன்னும் காண யில்லை... சீ எங்கட நாட்டிலதான் பஸ்சுகள் சரியான நேரத்துக்கு வாறதில்லை எண்டா, இந்த நாட்டிலயுமா...?' ஜீவா அந்த பஸ்சை மனசுக்குள் திட்டிக் கொண்டான். 'ஸ்னோ' கடுமையாகக் கொட்டிக்கொண்டிருந்தது. ஜீவா ஜக்கற்றுக்குள் கைகளை இழுத்து மூடிக்கொண்டு வீதியைப் பார்ப்பதும், பஸ் ஹோல்ட்டுக்குள் வருவதுமாகத் தவித்துக் கொண்டிருந்தான். பஸ் ஹோல்ட்டுக்குள் காதில் வோக்மன்னுடனும், கையில் சிகரட்டுட னும் நின்றிருந்த இரண்டு கறுவல்கள் தன்னை ஒரு விதமாகப் பார்ப்பது ஜீவாவுக்கு ஒருவிதமான பயத்தை ஏற்படுத்தியது. கடந்த சில தினங்களுக்கு முன் சில பகுதிகளில் தமிழினத்தவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் ஜீவாவுக்கு நினைவுக்கு வந்தது. 'சீ... இந்த ரெஸ்ரூறன்ற் வேலைய முதல்ல விட்டுட்டு வேற வேலை பார்க்க வேணும்...' ஜீவா வழமைபோல மனதுக்குள் நினைத்துக் கொண்டான். தூரத்தில் பஸ் வருவது தெரிகிறது. மனதுக்குள் ஒரு சந்தோஷம்.



நெடுந்தீவு குகன்~கனடா

'ஒரு மணிக்கெண்டாலும் வீட்ட போயிட லாம்..' என்று தனக்குள் நினைத்தபடியே ஜீவா பஸ்சுக்குள் ஏறுகிறான். 'போன உடன கொழும்புக்கு ஃபோன் அடிக்க வேணும்... பாரதியும், பிள்ளையும் யாழ்ப்பாணத்தில இருந்து ஃபிளைற்றில வந்திருப்பினம். இந்த முறை ரெண்டு சீட்டையும் எடுத்தெண்டா லும் பாரதியையும், பிள்ளையையும் கூப்பிட வேணும்... என்ன செய்யிறது என்ர கஷ்ட காலம் கேசையும் றிஜெக்ற் பண்ணிப்போட் டாங்க... எத்தினை வருசமாச்சு நான் கனடா வந்து. இப்ப மாதிரி இருக்கு... பிள்ளைக்கு ஆறுமாசமா இருக்கைக்க வெளிக்கிட்டனான். இப்ப அவளுக்கு மூண்டர வயசாச்சு. எப்பிடி வளர்ந்திருப்பாள்...' ஜீவா கண்களைத் துடைத் துக்கொண்டான். அவனால் பழைய நினைவு களைத் துடைத்துவிட முடியவில்லை.

★★★

அன்று ஒரு வெள்ளிக்கிழமை. பள்ளிக் கூடத்திலிருந்து வீட்டுக்கு வந்தவனுக்கு அங்கே பாரதியின் அப்பாவும், அம்மாவும் இருப்பது ஆச்சரியமாக இருந்தது. 'கடந்த ஒண்டர வருசமா இந்தப்பக்கம் வராதவர்கள் இண்டைக்கு ஏனோ பேரப்பிள்ளையை பார்க்க வந்திருக்கினமாக்கும்..' என்று தனக் குள் நினைத்துக்கொண்டே சம்பிரதாயத்துக்காக புன்னகைத்து விட்டு உள்ளே நுழைகிறான்.

அவன் பின்னே வந்த பாரதி, "ஜீவா அப்பாவும், அம்மாவும் வந்திருக்கினம்..." சந்தோசத்துடன் சொல்கிறாள்.

"ஓமோம்.. பார்த்தனான்... ஏன் நான் உம்மை எப்பிடி வைச்சிருக்கிறன் எண்டு பார்க்க வந்தவையளாக்கும்...?" ஜீவா சாறத்தை மாற்றியபடியே கேட்கிறான்.

"ஏன் ஜீவா இப்பிடி கதைக்கிறீங்க...? அவையளுக்கு இப்பதான் கோவம் குறைஞ்சு பேரப்பிள்ளையப் பார்க்க வந்திருக்கினம்... அதோட அக்காவும், அத்தானும் உங்கள கனடாக்குக் கூப்பிட விரும்புகினமாம். அது தான் உங்களக் கேட்டுப்போட்டு ஒழுங்கு செய்யலாம் எண்டு வந்திருக்கினம். ஏன் ஜீவா உங்களுக்கு விருப்பம்தானே..?" அவனை ஆவலுடன் கேட்கிறாள் பாரதி.

"இஞ்ச பாரும் எனக்கு ஒருத்தற்ர உதவியும் தேவையில்லை. உம்மையும், என்ர பிள்ளையையும் பாக்க என்னால ஏலும்..." ஜீவா கோபமாய் சொல்லிக்கொண்டே வெளியே வந்தான்.

சோபாவிலிருந்த பாரதியின் அப்பா நிலமையை உணர்ந்து, "தம்பிக்கு எங்கள்ள இன்னும் கோவம் போல இருக்கு... உங்கட கோவம் ஞாயமானதுதான். நாங்களும் உங்க ளுக்கு ஒண்டும் செய்யயில்லை. அதுதான் இதயாவது செய்வமெண்டு... இப்ப நாடு இருக்கிற நிலமையில நீங்க இஞ்ச இருந்து என்ன செய்ய ஏலும்...? கனடா போய்ட்டா நாளைக்கு இவளையும் கூப்பிடலாம்தானே..?" ஜீவாவைப் பார்த்துச் சொன்னார்.

"இஞ்ச... மாமா... உங்கள்ல எனக்கு ஒரு கோவமும் இல்லை... இப்பவெண்டாலும் நீங்க இங்க வந்தது எனக்குச் சந்தோசம்... ஆனால் உங்கட உதவிய எதிர்பார்த்தோ, இல்லை உங்கட சீதனத்த எதிர்பார்த்தோ நான் பாரதிய விரும்பயில்லை... எனக்கு இந்த ரீச்சிங் வேலையில நல்ல சந்தோஷம். இந்த நாட்டை விட்டுப்போக எனக்கு விருப்ப மும் இல்லை..." ஜீவா முடிவாகக் கூறினான்.

"இல்லைத் தம்பி... இப்ப நாடு போற போக்கப் பார்க்க பயமாயிருக்கு. அதுதான். நீங்க எதுக்கும் அவசரப்படவேணாம். ஆறு தலா யோசிச்சுச் சொல்லுங்கோ..." பாரதி யின் அம்மாவும் தன் பங்கிற்குக் கூறினாள்.

திடீரென பஸ் போட்ட பிரேக்கினால் ஜீவா சுயநினைவுக்கு வருகிறான். தான் இறங்க வேண்டிய இடம் நெருங்கி விட்டதை உணர்ந்து 'நல்லவேளை இப்பவாவது றோட்டப் பார்த்தது. இல்லாட்டி இந்தக் குளிரில இறங்கி நடக்க வேண்டியிருந் திருக்கும்...' என்று நினைத்தபடியே பஸ்ஸிலிருந்து இறங்குகிறான்.

'பஸ் ஹோல்ட்டுக்கருகில் வீடிருப்பது எவ்வளவு நல்லது. குளிரில கனதூரம் நடக் கத் தேவையில்லை... என்ன இது... இண் டைக்கு வித்தியாசமா வீட்டில லைற் எரியுது..? 10 மணிக்கெல்லாம் படுத்திருவினமே...' வீட் டிற்குள் எரிந்துகொண்டிருந்த லைற் வெளிச் சம் ஜீவாவுக்கு வித்தியாசமாக இருந்தது.

திறந்திருந்த கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைகிறான். அங்கே ஒரு மூலையில் பாரதியின் அக்கா அழுதுகொண்டிருக்க அத்தான் யாருடனோ ஃபோனில் கதைத்துக் கொண்டிருந்தவர் ஜீவாவைக் கண்டதும், "சரியண்ணை அப்ப நான் பிறகு எடுக்கி றன்..." என்று ஃபோனை வைத்துவிட்டு ஜீவாவைப் பார்க்கிறார்.

ஜீவாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. "என்னண்ணை... ஏன் அக்கா அழுகிறா...? நீங்களும் ஒரு மாதிரி இருக்கிறீங்க... என்ன நடந்தது...?" ஜீவா ஏதோ விபரீதமாக உணர்ந்தவனாகக் கேட்கிறான்.

"அது வந்து ஜீவா... கொழும்பில இருந்து ஃபோன் வந்தது... யவ்னாவில இருந்து வந்த பிளைற்ரைக் காணயில்லையாம். பாரதி யும், பிள்ளையும் அதிலதான் வந்தவையாம். எங்கட றேடியோவில பேரும் சொன்னவர்கள்." அவர் வார்த்தைகளை விழுங்கிக் கொண்டிருக்க,

"என்னண்ணை சொல்லுறீங்க...!" ஜீவா வுக்கு தலையெல்லாம் சுற்றுவது போலிருந் தது. அப்படியே சோபாவில் சாய்கிறான்.

"ஜீவா... நீர் எதுக்கும் கண்டபடி யோசிக் காதையும்..." என்றபடி அத்தான் அருகில் வருகிறார். "இனி என்னத்த யோசிச்சு...! நாங்க கேக்கைக்க அவள் இங்க வந்திருந்தா இப்பிடி நடந்திருக்குமா...? காதலும், கத்தரிச் காயும் எண்டு கண்டதுகளோட ஓடிப் போனாள். கடைசியா இப்ப கண்காணாமலே போய்ட்டாள்..." அமைதியாக அழுதுகொண் டிருந்த அக்கா சொன்ன வார்த்தைகள் ஜீவாவின் நெஞ்சில் முள்ளாய்க் குத்தின.

"இஞ்சேரும்... உமக்கு எந்த நேரம் என் னத்தக் கதைக்கிறது எண்டு தெரியாதே...?" அத்தான் கோபமாய் கேட்க, "நீங்க கொஞ்சம் பேசாம இருக்கிறீங்களே... உங்களுக்கு ஒரு தங்கச்சி இருந்து இப்பிடி நடந்திருந்தா தெரியும்... இஞ்சேருங்கோ... அவளே போய்ட் டாளாம் இனி என்ன சொந்தமா...? பந்தமா...? அவர வேற வீடு பார்த்துக்கொண்டு போகச் சொல்லுங்கோ...!" அக்காவின் வார்த்தைகள் ஜீவாவின் நெஞ்சில் இடியாய் இறங்கின. ◘

# நிலவு

ஜெ.சூரியன்

யோசனையுடன் அலையடிக்கும் கரையை ஆழப்பார்வை பார்த்துக் கொண்டிருந்த மோகன் அருகாமையில் உரசலான அழுத் தத்தை உணர்ந்து திரும்பினான்.

நீண்ட நாட்களின் பின்னர் நண்பன் சுமன். அவனுடன் ஒன்றாகப் படித்தவன். தளர்வான மூச்சுடன் சலித்தவனாக உட் கார்ந்தான்.

"என்ன, என்னடா சுமன்... இத்தனை நாள் எங்கே போயிருந்தாய்? ஆளையே காணோமே?"

"காணாமல்தானே போனேன். ஒரேயடி யாப் போகலியே..."

"அட என்ன வாழ்க்கையே வெறுத்த வனாக சலிச்சுக் கொள்ளுகிறாய்? ஏன், என்னாச்சு?"

"ஒண்ணுமில்லைடா!"

"த்சொ. ஒண்ணுமில்லைன்னு மழுப் புறதே இருப்பதை மறைக்கத்தான். சொல் லுடா ஏன் இப்படி எதிலுமே ஒட்டாமல் பேசுகிறாய்.

"அப்ப நீ எதுக்காக இப்படி அலை யோடு பேசிக்கொண்டிருக்கிறாய்? ஒண்ணு மில்லாததுக்கா?"

"ம். ஒண்ணுமில்லாததுக்குத்தான்!"

"உன் கதையும் என் கதையும் ஒண்ணு தானா?"

மோகன் கூர்ந்து பார்த்தான் சுமனை, "கதை என்றால்?"

"உன் கதையை முதலில் சொல்லு!"

"சொந்தக் கதை சோகக்கதை, நீதான் பெரிதும் தவிக்கிறாய். மனப்பாரம் குறையும் முதலில் சொல்லு!" என சுமனை தூண்டி னான் மோகன்.

ஜனவரி நிலவாக அவள் தெரிந்தாள் அவன் விழிகளுக்கு. மயூரி என்று மனசு எந்நேரமும் பஜனை பாடியது. அவளது விவரங்களைத் திரட்ட முயன்று சிலவற்றை பெற்றுக்கொண்டான். அப்பா வெளி நாட்டில். பணத்துக்கு தட்டுப்பாடு கிடை யாது. ஏ.எல். இரண்டாம் ஆண்டு. படிப்பில் சுட்டி, கலையில் ஈடுபாடு. சரளமாக ஆங்கிலம் பேசினாள். பஸ் ஸ்டாண்டில் அடிக்கடி காணக்கூடியதாக இருக்கும். அவள் ஸ்பெஷல் கிளாஸ் போனாள்.

எப்படியாவது மனசில் இடம்பிடிக்க வேணும். அழகாக, அசத்தலாக ட்ரஸ் போட்டு அவனும் கையில் ஒரு நோட்புக் குடன் பஸ் ஸ்டொப்பில் அவள் வரவுக்காக இரண்டு, மூன்று மணி நேரமானாலும் காத்திருந்து வந்ததும், அதே நம்பர் பஸ் ஏறி அவளது ரியூஷன் சென்ரருக்கு அருகி லுள்ள ஸ்போக்கன் இங்கிலீஷ் கிளாசுக்குப் போவான்.

சுமனுக்கு ஆங்கிலம் நன்றாக வராது. அத்தோடு கொன்னிக், கொன்னிப் பேசுவதும் அவனுள் ஒரு தாழ்வுச் சிக்கலை ஏற்படுத்தி யிருந்தது. எப்படியும் நிலாவை கையால் ஒரு தடவை தொட்டுவிட்டால் போதும் அப்புறம் வசப்பட்டுவிடும். ஆசை கொளுந்து விட்டெரிந்தது.

சிநேகமான சிரிப்பு, லயிப்பான பார்வை, வரவுக்கான மகிழ்ச்சிகள் இவையென தன் முயற்சியின் வெற்றியென தப்பர்த்தம் கற் பித்துக்கொண்டு தொடர்ந்து கொண்டி ருந்தான்.

பல மணிக்கணக்காக கண்ணாடி முன் நின்று தன்னுருவத்தை திருத்தம் பண்ணுவது போலவே தனது கொன்னைப் பேச்சை அப்படியிப்படி மெருகேற்றி கொழும்புத் தமிழில் மழலை பேசுவதுபோல மென்மையாக அலங்காரமான ஆங்கில வார்த்தைகளை சேர்த்து, சேர்த்து பேசிப் பழகிக் கொண்டான்.

திருப்தி! மனசில் புதிதான நம்பிக்கை. வானம் கிட்டத்தில் நின்றது. நிலவு எட்டும் தூரம்தான். இளமை துள்ளிக் குதித்தது.

மறுநாள் காதலர்கள் தினமான 'வலன்ரைன் டே' எப்படியும் அந்த நிலவைத் தொட்டுவிட வேண்டியதுதான்.

அழகாக, அருமையாக பார்த்துப்




பார்த்து செலக்ட் பண்ணியெடுத்த வெளிர் நீல முழுக்கை ஷர்ட், நீள-அகல வாட்டில் கோடிட்ட கடும் வர்ண நீல ட்ரவுஸர்- கனத்த ஷுவுமாக ஒரு கதாநாயகன் தோற்றத் தில் மிடுக்காக நடந்து வந்து பஸ் ஸ்டொப்பில் அவள் வரும்வரை காத்து நின்றான்.

அன்றாடம் காண்பவர்கள் எல்லோரது பார்வையும் அதிசயமாக விரிவதைப் பார்த்து தன் தோற்றப் பொலிவில் தானே பெரிதும் மகிழ்ந்தான்.

அடிக்கடி டைம் பார்த்தான். வியர்த் தான். சே. என்ன டென்ஷன். அவளுக்கான நிமிஷம் ஐந்து பாக்கியிருந்ததில் விநாடி முள்ளாக மனசு தாவியது. சங்கடமான தவிப்பு.

ஆ...அதோ நிலவு தெரிகிறது. அவள் வந்து கொண்டிருந்தாள். அவன் பரபரப்பா னான். கிட்டத்தில் வந்ததும் "ஹலோ" சொல்லிப் புன்னகைக்கிறான். பதிலுக்கு அந்தப் பார்வை. சிரிப்பு அவளிடமிருந்து கிடைக்கிறது. அவன் சந்தோஷத்தில் திளைக்க முனையும்போது, "மயூரி... என்ன இது... தெரிஞ்ச நண்பன் வந்தா பேசக்கூட நிற்கக் கூடாதா? நீ பாட்டுக்கு வந்துட்டே. கல்யாணம் பண்ணிக்கொள்ள இருக்கிற உன்னை அறி முகப்படுத்த திரும்பினால் உன்னை காணோம்!"

அவள் தோள்களை உரிமையுடன் தொட் டுப் பேசினான் ஒருவன். அவள் முன்னுச்சி முடிகளை ஒதுக்கிய வண்ணம் அழகாகச் சிரித்தபடி அவனுடன் பஸ்ஸில் ஏறிக்கொண் டாள். இப்போது பஸ்ஸின் நம்பர் வேறாக இருந்தது. திரும்பிக் கையசைத்தவள் கேள்வி யுடன் பார்த்த தன் காதலனிடம், "இவர் என் பக்கத்து ரியூட்டரியில் படிக்க வருபவர்," என்றாள்.

அவனுள்ளே எழுப்பப்பட்டிருந்த நிலா வைத் தொடும் படிக்கட்டுக்கள் இடிந்து விழுந்ததில் நசுங்கிப் போனான். 'சே' என்று மனம் சலித்தவனாக ஏமாற்றத்தைத் தாள முடியாது அவமான உணர்ச்சியிலிருந்து விடுபட எண்ணி, அண்ணனின் ஊருக்குச் சென்றான். ஆறுமாதங்களாக இருந்துவிட்டு மறுபடி வந்துள்ளான்.

"உன் கதை என்ன?" என்றான் நண்ப னிடம்.

"ம். கிட்டத்தட்ட அதே ஜாடைதான். பெண்கள் வாத்ஸல்யத்துடன் பேசி சிரித்து விட்டால் நாம் நினைப்பது அவர்கள் நம்மைக் காதலிக்கிறார்களென்று. இஷ்டத்திற்கு கன்னா பின்னாவென்று கற்களை அடுக்கி கோட் டையை கட்டுறது. கையை சுட்டுக்கொண்டு உதறும்போது அவர்கள் அதே ஜாலியான சிரிப்போடு கையசைத்துக்கொண்டு போய் விடுவார்கள். இல்லியாடா...?"

மோகன் தத்துவம் பேசினான்.

"இனிமேலும் அந்த மாதிரியான எண் ணம் ஏதேனும்..?"

"வேண்டவே வேண்டாம்." அவசரமாக மறுத்தான் சுமன்.

"வேலைக்கு ட்ரை பண்ணினியா?"

"ட்ரை பண்ணியிருக்கேன். அநேகமாக மாசத் தொடக்கத்தில் ஜொயின் பண்ணிடலாம்."

"நான்கூட பழைய கொம்பனியை விட் டுப் புதிய வேலையொன்றில் சேர்ந்துட்டேன்."

"அப்போ ஃப்யூச்சரிலை குறிக்கோள் என்ன?"

"மாமூல்தான். கல்யாணம், குழந்தை குட்டி, பிக்கல், பிடுங்கல், நோய், மூப்பு, சாவு- வேறு என்னத்தை சாதிக்க?"

"ஆமாடா பின்ன கிளிண்டன் ரேஞ்சுக்குப் போகவா? முதலே கோணல்." மனம் விட்டு அவர்கள் சிரித்த சிரிப்பு வெளியே கேட்காத படி கலகல என்ற சிரிப்பொலி வந்து அமுக்கியது.

திரும்பிப் பார்த்தனர்.

இரண்டு இளம் பெண்கள். அழகு. அத்தனை அழகு. தம்மை மறந்த நிலையில் பேசி மகிழ்ந்தபடி அவர்களைக் கடந்து போய்க் கொண்டிருந்தனர்.

நண்பர்களிருவரும் ஒருத்தரை ஒருத்தர் அர்த்தத்துடன் பார்த்தனர். மனம் மறுபடியும் குரங்காகியது. ஆசை வேர் விட்டது. ஆர்வம் துளிரடித்தது.

"ட்ரை ஒண்ணு குடுப்பமா?"

வயசு மறுபடி மனசைப் புரட்டியது. பின் தொடர்ந்தனர். வானத்தில் முளைத் திருந்த முள்நிலவு அவர்கள் முதுகின் பின் புறமாக பின்னோக்கி நகர்ந்து கொண்டி ருந்தது. ⊖

# பாடம்

"அடியே சின்னாச்சி! உனக்குச் சூடு சுறணை எண்டு ஏதும் இருக்கே..? எவ்வளவு நாளா உன்னட்டச் சொல்றது உன்ர மர மண்டையில ஏறமாட்டுதே?"

செல்லம்மா முந்தானையை வரிந்து கட்டிக்கொண்டு மதிலுக்குமேல் எட்டிச் சின்னாச்சியிடம் எரிந்து விழுந்தாள்.

"அதக்கேக்க நீ ஆர்ரி? வர வர நானுந் தான் பாக்கிறன் நாக்கு நீளுது." சின்னாச்சி யின் உச்ச ஸ்தாயி மதிலுக்கு மறுபுறமிருந்து ஒலித்தது.

"கேக்க நான் ஆரா? உன்ர வீட்டு மாமரத்திர இலகுள முழுக்க என்ர வீட்டு முத்தத்தில் குப்ப கொட்டுதெண்டு எத்தனை நாளாச் சொல்றன். காதில விழுகுதில்லயே? சே நீயும் ஒரு பொம்பளயா?" செல்லம்மா தன் வயிற்றெரிச்சலைக் கொட்டினாள்.

"அடியே இதுக்குமேல வாயத் திறந் தியோ விளக்குமாறுதான் அங்கால வரும்!" மதிலுக்குமேல் பாயாத குறையாகச் சின் னாச்சி கத்தினாள்.

"அங்க என்ன சத்தம்? பொழுது விடி ஞ்சா உனக்கும் சின்னாச்சிக்கும் சண்டையாக் கிடக்கு..." செல்லம்மாவின் கணவர் திண் ணைக் கட்டில் இருந்து சத்தமிட்டார்.

கதிராமரின் குரல் கேட்ட சின்னாச்சி மதிலுக்கு மேலிருந்த தலையை ஆமையைப் போல் உள்ளிழுத்துக் கொண்டாள். அவ ளுடைய வாய் மறுபடியும் திறக்க மறுத்தது.

செல்லம்மா அவிழ்ந்து கிடந்த தன் கூந்தலைக் கோதி உச்சியில் ஒரு முடி போட்டுத் தன் கணவர் கதிராமரின் பக்கத் தில் போய் உட்கார்ந்தாள்.

"செல்லம்மா மனிசனுக்குக் காலங்காத் தால தலைக்குமேல வேல கிடக்கு. விட்டுப் போட்டு உங்கட வேலையப் பாருங்க."

"என்னத்த விடுறது? நீங்களும் ஒரு ஆம்பிளயா? உங்களுக்கு இருள்றதும் தெரியா, விடியிறதும் தெரியா. சின்னாச்சிர மரத்துக் குள முழுக்கக் கிணத்தடிப் பக்கம் கொட்டுது. இதக் கூட்டிக் கூட்டி எண்ட இடுப்பு முறிஞ்சி போச்சி!" செல்லம்மா தன் இரண்டு கையாலும் இடுப்பைத் தடவினாள்.

கதிராமர் ஆவேசம் வந்தவராய்க் குசினிக் குள் பாய்ந்தார். அரிவாள் கத்தியை எடுத்த தும் செல்லம்மாவுக்குப் பகீரென்றது. "இஞ்ச பாருங்க சனியன் தொலையட்டும்ப்பா. நீங்க ஒண்டுக்கும் போகாதீங்க!" செல்லம்மாவின் குரல் கதிராமரின் காதில் ஏறுமுன் அவர் மதிலில் ஏறி தன் வீட்டுப் பக்கம் சாய்ந்திருந்த சின்னாச்சியின் மாமரத்துக்கிளையை ஒரே வெட்டில் சாய்த்தார்.

சத்தங்கேட்டு வந்த சின்னாச்சியின் கணவர் தம்பருக்கும் கதிராமருக்கும் கார சாரமான வாக்கு வாதமும் கை கலப்பும் ஏற்பட்டது. இதைக் கண்ட பக்கத்து வீட்டு




ஏகாம்பரம் ஜே.பி. ஓடிவந்து இருவருக்கு மிடையில் அமைதியை நிலை நாட்டினார்.

அன்று பூரண நிலவு வானத்தில் பவனிவந்து கொண்டிருந்தது. அந்த நிலவைக் காட்டி அழுகிற தன் பேத்திக்குச் சோறு ஊட்டிக் கொண்டிருந்தாள் சின்னாச்சி.

குப்பி லாம்பு வெளிச்சத்தில் பேரன் ஔவையாரின் நீதிநெறி வாக்கியங்களை மனப்பாடம் பண்ணிக் கொண்டிருந்தான். எதிலும் ஒட்டிக்கொள்ளாமல் தம்பர் யோச னையில் ஆழ்ந்திருந்தார். கதிராமர் தன்னு டைய மாமரத்துக் கிளையை வெட்டி வீழ்த் தியது. அவருடைய நெஞ்சில் நீறுபூத்த நெருப்பாய் இருந்தது. தம்பரின் மூளை சுறுசுறுப்பாய் வேலை செய்தது.

மண்டபம் பூரா இருள் பரவிக் கிடப் பதைப் பார்த்து 'இந்தப் பாழாப்போன யுத்தம் எப்ப நிக்கிறது? எப்ப கறண்ட் வாறது?' தனக்குள்ளே தம்பர் அலுத்துக் கொண்டார்.

அவருடைய மகள் அம்பிகா சாப்பாட் டுத் தட்டை அவர்முன் நீட்டினாள். "புட்டுக்கு தேங்கா போடல்ல" என்று அவள் முணு முணுத்தது தம்பரின் காதில் தெளிவாக விழுந்தது. அதன் விலை இருபது ரூபாய் என்றால் என்ன செய்வது? என்று தனக்குள் எண்ணமிட்டபடி அவசர அவசரமாக அள்ளி வாயில் போட்டு விட்டுப் படுக்கச் சென்றுவிட்டார். வெடிச்சத்தங்களின் தாலாட் டில் தம்பரால் உறங்க முடியவில்லை.

பொழுது விடிந்தது. தம்பர் சின்னாச் சியை அவசரமாக அழைத்தார்.

"செல்லம்மாட மகன் எங்க வேல செய்யிறான்?"

"கல்விக் கந்தோர்ல. அதுக்கென்ன இப்ப?" சின்னாச்சியின் புருவங்கள் கேள்விக் குறியாகின.

"கதிராமர்ர குடும்பத்துக்கு ஒரு பாடம் படிப்பிச்சிக் காட்றன்."

"நம்மட சொக்கலிங்கத்தார்ர மகன் நல்லாச் சிங்களம் எழுதப்படிக்கத் தெரிஞ் சவன். அவனக்கொண்டு சிங்களத்தில் கதிரா மர்ர மகன் புலிகளுக்கு சப்போட் எண்டு ஒரு மொட்டக் கடுதாசி எழுதிப் பொலிசுக்குப் போடப்போறன். பிறகு புதினத்தப் பாரன்." சின்னாச்சியின் பதிலை எதிர்பார்க்காமல் தம்பர் குடையை எடுத்துக்கொண்டு சொக்க லிங்கத்தாரின் வீட்டை நோக்கி விரைவாக நடந்தார்.

காலை வெயில் அவர் முகத்தில் அறைந் தது. கன்னத்தில் வியர்வை, முத்து முத்தாய் அரும்பியது.

ஆலையடிச் சந்தியைக் கடந்து சொக்க லிங்கத்தாரின் ஒழுங்கைப் பக்கம் திரும்பிய போது சருகுகள் சரசரக்க யாரோ ஓடி வருவதுபோல் இருந்தது. தம்பர் நடையை நிறுத்தித் திரும்பினார். சொக்கலிங்கத்தின் மகன் சிவநேசன். தம்பரால் நம்ப முடிய வில்லை. கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்த மாதிரித்தான் என்று எண்ணினார் தம்பர்.

"ஐயா என்ன கன காலத்துக்குப் புறகு இந்தப் பக்கம்?"

"உங்கட வீட்டுக்குத்தான். உன்ர உதவி ஒண்டு வேணுந் தம்பி. அதுவும் அவசர மாய்..."

"என்ர உதவியா?" சிவநேசன் பல்வரிசை தெரியச் சிரித்தான்.

தம்பர் சிவநேசனின் காதில் விஷயத்தைக் கிசு கிசுத்தார்.

இருவரும் பேசிக்கொண்டே வீடு போய்ச் சேர்ந்தனர். சொக்கலிங்கம் கடைக்குப் போன தாக வேலைக்காரப் பொடியன் செய்தி சொன்னான்.

சிவநேசன் தம்பர் சொன்ன விஷயத்தை ஒன்று விடாமல் சிங்களத்தில் எழுதி, அதன் பொருளைத் தமிழில் மொழி பெயர்த்துச் சொன்னான். தம்பர் பரமதிருப்தியுடன் எழும்பினார். அவர் பர்சில் இருந்த ஐம்பது ரூபாய் கைமாறியது. தம்பர் புறப்பட்டு மகிழ்ச்சியுடன் வீறு நடைபோட்டார்.

ஒழுங்கையைக் கடந்து அவர் வீதிக்கு வந்தபோது... எதிரே சைக்கிளில் வந்த மாணிக்கவாசகரின் மகன் மகேந்திரன் அவ சரமாக ஓட்டத்தை நிறுத்தினான். அவன் முகத்தில் பீதி அப்பிக் கிடந்தது. வியர்வையில் அவன் சேட் தெப்பமாய் நனைந்திருந்தது.

தம்பர் ஒன்றும் தெரியாமல் 'திரு திரு' என்று முழித்தார்.

"அங்கிள்! ரியூஷன் கிளாசில வச்சி உங்கட மகன் கணேஷனை ஆமிக்காறன் புடிச்சிற்றுப் பொயிற்றான்!" திக்கித் திணறிச் செய்தியைச் சொல்லிவிட்டுச் சைக்கிளை மிதித்துப் பறந்தான் மகேந்திரன்.

தம்பரின் கையிலிருந்த கடிதம் நழுவி நிலத்தில் விழுந்தது. அவரால் ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியவில்லை. ⊖

www.padippakam.com



# சிற்றினம்

## இலக்கிய நயம்

சோழர் கொடி
பிறந்த மண்ணில்
மராட்டிய கொடி
பறந்தது!

ராஜா பிரதாப்சிம்மனின்
வாரிசு சரபோமி
ஆட்சிக்கட்டிலில்
ஆடிக்கொண்டிருந்தான்!

பஞ்சமில்லாத
பச்சைப் பூமி
தஞ்சை!

வஞ்சகம் இல்லாத
கொஞ்சும் குமரிகள்போல
நெற்பயிர்கள்
கொஞ்சி விளையாடும் பூமி!

கலை பல வளர்ந்து
ஆலயம் பல அமைத்து
ஆலமரமாய் நின்ற
சோழப் பேரரசின்
தலை நகரும் அதுதான்!

அந்த தன்மான
பூமியில்தான்
அவமானச் சின்னமாய்
அந்நியராட்சி!

வேழங்கள்
நடமாடிய பூமியில்
கூழாங்கற்களாய்
அந்நிய சிப்பாய்கள்!

மராட்டியர்கள்
பெண் பித்தர்கள்!
மானத்தோடு விளையாடும்
எத்தர்கள்!

சரபோமி மன்னனுக்கு
தினமும் சுரம் மீட்ட
சரச மண்டபம்!
அங்கு சிரம் தாழ்ந்தபடி
சில நூறு பெண்கள்!

பூக்களை கொய்து
அந்தக் குரங்கு
பிய்த்துப் போட்டது!

சந்தனக் குடங்களை
அந்தக் கழுதை
சாக்கடைக்குள்
வீசிக்கொண்டிருந்தது!

மானமிழந்த
தஞ்சைத் தமிழர் சிலர்
சரபோமிக்கும்
அவன் படைகளுக்கும்
'கூட்டிக் கொடுப்பு'
நடத்திக் கொண்டிருந்தனர்!

"கட்டுக் குலையாத
மேனிகளை
தொட்டுத் தழுவு!
எங்களுக்கு தேவையானதை
கொட்டிக்கொடு!"

மராட்டியரிடம்
குட்டுப் பட்டுக்
குனிவதற்கு
வெட்கப்படாதவர்களிடம்
விட்டுக் கொடுக்க
வேறு எதுவுமிருக்கவில்லை!

ஈனத் தமிழர் சிலரது
உதவியோடு
மானத் தமிழர்மீது
சவாரி செய்தான்
மன்னன் சரபோமி!

தஞ்சை கொஞ்சம்
கொஞ்சமாக கோலமிழந்தது!

காமக் கண்ணனான
சரபோமிக்கும்
காதல் பிறந்தது!

ஒரு முறை சூடிவிட்டு
தூக்கியெறியும்
பூக்கள் என்று
பெண்களை நினைத்தவன்,
அவளைக் கண்டபின்னரே
நிரந்தரமாக நேசிக்கவும்
கற்றுக் கொண்டான்!

அவள் பெயர்
கல்யாணி!
பெயருக்கு ஏற்பவே
மங்களமாணவள்!

அவள் சம்மதம்
கேட்கப்படவில்லை!
அதிகாரத்தால்
வாங்கப்பட்டாள்!

தேக்கிவைத்த
ஆசையை எல்லாம்
அந்த பூங்கொடிமீது
கொட்டினான்!

"எத்தனையோ பெண்களில்
காமுற்றிருக்கிறேன்.
உன்மீது மட்டுமே
காதலுற்றிருக்கிறேன்!"
என்று பிதற்றினான்!

அந்த பூமேனியின்
கதகதப்பில்-மன்னனின்
காம வேட்கையும்
காணாமல் போய்க்
கொண்டிருந்தது!

தினம் ஒரு விருந்து
தேடுவதை நிறுத்தினான்!

வண்ணத்திப் பூச்சிகளின்
சிறகுகளை
முறிப்பதை நிறுத்தினான்!

அப்போதுதான் வந்தனர்
இரண்டு சாமியார்கள்!
காவியுடை, கழுத்தில்
ருத்திராட்ச கொட்டை!

"மன்னா நீ மாமன்னன்
ஆகிவிடலாம்!
நீ நினைத்தது பலிக்கும்
வழி இருக்கிறது!
என்றனர் பழிகாரர்.

"என்னவழி"
என்றான் ஆர்வமாய்!

"பலி, நரபலி
கொடுக்க வேண்டும்!"
என்றனர் வேடதாரிகள்!

"ஆடா, மாடா
கோழியா?"
வினா தீட்டினான்.

"அல்ல, மனிதப்பலி
அதுவும் மலிவுப்பலியல்ல,
மொத்தம் 108
நிறைமாத கர்ப்பிணிகள்
பலியாக வேண்டும்!"

ஊரையாளவே
ஒற்றைக்காலில் நிற்கிறார்கள்!
உலகையாள்வதற்கு
யார் ஒழிந்தால் என்ன?
மன்னன் சம்மதித்தான்!

மறுபடி வண்டு
மலர் தேடியது!

கல் ஒன்று
மாங்காய்கள் இரண்டு!

மகரந்தமும் கிடைக்கும்
நரபலிக்கு
வரவும் இருக்கும்!

பாலில் விஷத்தை
கலப்பதைப் போல,
கருப்பையில் தன்
விந்தை கலந்து
அந்தப் பெண்களையெல்லாம்
அந்தரப்புரத்தில்
சிறை வைத்திருந்தான்!

நிறைமாத
கர்ப்பிணியாகும்வரை
கடும் காவல்!

அப்போது பார்த்து
கல்யாணியும்
கருவுற்று நிறைவுற்றாள்!

அவளை மட்டும்
கண்ணாய் போற்றினான்!
அவள் கருப்பையில்
தன் வாரிசு இருப்பதாக
ஊர் அறிய கூறினான்!

நரபலிக்கான
நாளும் வந்தது!

107 பலி
கொடுத்தாகிவிட்டது!
நிறைமாத கர்ப்பிணிகளின்
குருதியில்
கைகளை கழுவியாயிற்று!

"108 வது பலி
எங்கே?"

"இதோ நான்
இங்கிருக்கிறேன்!"

முன்னே வந்தவளை
பின்னே இருந்து
ஓங்கி வெட்டினர்
கழுத்தில்!

குருதி தெறித்தது
சிரம் உருண்டது!
அந்த சிரம்மீது
மன்னன் கண்பட்டது!

"ஐயோ கல்யாணி
நீயா?
என் உயிரே
நீ ஏன்
உன்னைத் தந்தாய்?

என் பூக்காடே - நீ
முக்காடு போட்டிருந்ததால்
முழுமதியாம் - உன்னை
வீழ்த்த இந்தப் பாவி
அனுமதி அளித்து விட்டேனே!"

அரற்றினான். புரண்டான்,
அரற்றி, அரற்றி
உயிர் துடித்தான்.

மன்னன் சரபோமி
பைத்தியமானான்!
சாமிகள் இருவரும்
காவியைக் களைந்து
ஆசாமிகள் ஆயினர்!

அவர்கள் இருவரும்
சரபோமியின் சகோதரன்
அமீர்சிங்
அனுப்பிய அம்புகள்!

சரபோமி மடிந்த செய்தி கேட்ட
அரசவைப் புலவர்
உரத்துக் கூறினார்:

"சிற்றினத்தோடு
சிற்றினம் சேர்ந்தது
அதனால் கெட்டழிந்தது!"

"யார் சிற்றினம்?
யார் பெரும் இனம்?"
கேள்வி பிறந்தது.

"உலகை ஏய்க்கும்
கூட்டம் சிற்றினம்!
மன்னனை மயக்கிய
சாமியார் கூட்டமும்
சிற்றினம்!
முறை தவறி ஆடிய
மன்னனும் சிற்றினம்!

சிற்றினம் என்பதால்
சிற்றினம் நாடினான்
முற்றிய பைத்தியமாகினான்!"

சிற்றினத்துடன்
சேர அஞ்சுவோரே
பெரும் இனம்!"
விளக்கினார் புலவர்

இதையேதான் திருவள்ளுவரும்
கூறுகிறார்:

"சிற்றினம் அஞ்சும் பெருமை
சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்!"

அதிகாரம்: 46 குறள்: 451

தருவது

---

## சிந்தியா பதில்கள்

* "இந்திய கடற்படை தளபதி நீக்கத்துக்கு புலிகள்தான் காரணம்" என்று சுப்பிரமணியம் சுவாமி கூறியுள்ளாரே?

ஏ.ஷர்மிளா, புத்தளம்.

இந்திய அரசியல்வாதிகளில் சிறந்த ஜோக்கர் அவர்தான்! அதுதான் பாண்டிய ராஜன் படம் ஒன்றுக்கு 'சுப்பிரமணிய சுவாமி' என்று பெயரிடப்பட்டது! பெயரைக் கேட்டதுமே மக்கள் ஜோக் படம் என்று நினைப்பார்கள் என்பதால் அவ்வாறு பெயரிடப்பட்டது. அவர் கூறுவதை யாரும் பொருட்டாக எடுப்பதில்லை.

❑○

* பொது நலம் என்றால் என்னவென்றே தெரியாதவர்கள் பொதுநல விரும்பிகளாக நாடகம் ஆடுகிறார்களே?

கா.ரகுவரன், நுவரெலியா.

அதனை மக்களும் நம்புகிறார்களே! சமீபத்தில் சஞ்சிகை ஒன்றில் சீனக்கவிஞர் அய்குங் எழுதிய 'குடை' என்ற கவிதை கண்டேன். பகிர்ந்துண்போமா?

"ஒரு நாள் காலை
குடையிடம் கேட்டேன்
"நீ விரும்புவது
மழையில் நனைவதையா?
வெயிலில் காய்வதையா?"
குடை புன்னகை
புரிந்துவிட்டுச் சொன்னது:
"என் கவலை
இதைப் பற்றி அல்ல;
என் கவலையெல்லாம்
எத்தகைய மழையானாலும்
என் மக்களை
நனையவிடக்கூடாது;
எத்தகைய வெய்யிலானாலும்
என் மக்களைக்
காயவிடக்கூடாது!"

❑○

* சிந்தியா! பத்திரிகைகளை திறந்தால் விளம்பரம். வானொலியைத் திறந்தால் விளம்பரம். இது என்ன விளம்பர யுகமா?

கே.பரமேஸ், வத்தளை.

அதில் என்ன சந்தேகம்!

இரும்புக்கடை நடத்திய தந்தை ஒருவர் தனக்கு வயதாகிவிட்டது என்பதால், தன் மகனை அழைத்து கடையை ஒப்படைத்தார்.

"புது விளம்பரங்கள் மூலம் விற்பனையை அதிகரியுங்கள்!" என்று யோசனை கூறினார். மகனும் அதுமாதிரி புது உத்திகளைக் கையாண்டான்.

தந்தை ஒருநாள் காரில் போகும்போது வித்தியாசமான விளம்பரத்தைப் பார்த்தார். அதில் இயேசு சிலுவையில் அறையப்பட்டிருக்கும் படம் வரையப்பட்டு, அதற்கு கீழே, 'எல்லாவித உபயோகங்களுக்கும் எங்கள் டைகர் ஆணிகளையே உபயோகியுங்கள்' என்று எழுதப்பட்டிருந்தது.

தந்தை வீட்டுக்குப் போய் மகனோடு சண்டை போட்டார்:

"இப்படி மடத்தனமாக விளம்பரம் செய்திருக்கிறாயே. நம்முடைய கம்பனி ஆணிகளை உபயோகித்து இயேசுவை சிலுவையில் அறைந்தார்கள் என்று விளம்பரம் செய்தால், கிறிஸ்தவர்களின் மனம் புண்படாதா?" என்று சத்தம் போட்டார்.

"சரி மாற்றுகிறேன்!" என்றான் மகன்.

ஒரு மாதம் சென்றபின்னர் காரில் போகும்போது, தந்தையின் கண்ணில் அந்த விளம்பரம் தெரிந்தது. அதில் இயேசு சிலுவையில் இருந்து கீழே விழுந்து கிடந்தார். பக்கத்தில் பின்வரும் வாசகம் எழுதப்பட்டிருந்தது.

"அடுத்த தடவையாவது டைகர் ஆணிகளையே உபயோகியுங்கள்!"

❑○

* தம்மைத் திருத்தாமல் அடுத்தவருக்கு புத்தி சொல்லலாமா?

ஆர்.சந்தானம், கந்தப்பளை.

கூடாதுதான். புத்தி சொல்லப்போய் கெட்டுப்போனவர்களும் இருக்கிறார்கள். அரட்டை அரங்கில் கேட்ட ஜோக் ஒன்று:

ஒரு சாமியார் இருந்தார். மதுவிலக்கைப் பற்றி ஊர்கள் தோறும் பிரசாரம் செய்யக் கிளம்பினார்.

சாராயத்துக்குள் புழு ஒன்றை போட்டார். அது துடிதுடித்து செத்துப்போனது.

"பார்த்தீர்களா? இதில் இருந்து என்ன தெரிகிறது?" என்று கூடியிருந்தோரை பார்த்துக் கேட்டார்.

கூட்டத்தில் இருந்த 'குடிமகன்' ஒருவர் முன்னால் வந்து, "இதில் என்ன தெரிகிறது என்றால் இதனைக் குடித்தால் வயிற்றில் உள்ள புழுக்களெல்லாம் செத்துப்போய் விடும். வயிறு சுத்தமாகிவிடும். இது நல்ல மருந்துபோல தொழிற்படுகிறது என்பது தெரிகிறது!" என்று கூறினான்.

சாமியாருக்கு அவன் கூறியது புதுக் கோணமாகத் தெரிந்தது. அன்றிலிருந்து சாமியாரும் குடிக்க ஆரம்பித்துவிட்டார்.

❑○



'கள்ளழகர்' படத்தில் விஜயகாந்த்–லைலா

* 'குருபார்வை'யின் வெற்றிக்கு என்ன காரணம்?

என்.பௌசர், மருதானை.

இனிப்பையே சாப்பிட்டுக் கொண்டிருந்ததால் காரத்தை கண்டதும் நா நாடும்தானே? காதல் கதைகள் ஒரே இனிப்பு. 'குருபார்வை' காரம். ஆகவே ஹிட்டாகிவிட்டது.

❑○

* மதிமுகராசா இருந்தால் கூட்டணி வளர்ந்து விடும் என்று பயந்துதான் சுடப்பட்டாரா?

சா.விஸ்வலிங்கம்,
யாழ்ப்பாணம்

யாழ் மாநகர தேர்தலில் கூட்டணி வெற்றிபெற்ற பின்னர்தான் அதனுடன் மறுபடி ஒட்டியவர் மதிமுகராசா. அவருக்குத்தான் செல்வாக்கு என்றால் அவரையே சரோஜினிக்கு பதிலாக கூட்டணி நிறுத்தியிருக்கலாமே? ஏன் நிறுத்தவில்லை? குறைந்த பட்சம் வேட்பாளர் பட்டியலில்கூட போட முடியாதளவு தூரத்தில் தான் இருந்தார். இறந்தவரை தூற்றாதே என்பவர்கள், ஒருவர் இறந்து விட்டார் என்பதற்காக இல்லாததையெல்லாம் கூறிப் போற்றவும் கூடாது. ●

* "புலிகளின் போக்கில் மாற்றம் ஏற்பட்டால் ஒன்றுபடத் தயார்!" என தமிழ்க் கட்சிகள் கூறியுள்ளனவே?,

எஸ்.திவாகரன், கொழும்பு-13.

அப்படியானால் இந்தக் கட்சிகள் தமக்குள் ஒன்றுபட யார் போக்கில் மாற்றம் தேவையாம்?!

❑○

* மதிமுகராசா கொலைக்கு பத்திரிகைகள்மீது பழி போட்டுள்ளாரே ஆனந்தசங்கரி?

செ.கிருஷ்ணன், வவுனியா.

அப்படிப்பார்த்தால் துரையப்பா, தியாகராசா, தாடித் தங்கராசா, பெற்றோல் நடராசா,ராஜசூரியர் என்று பலரது கொலைகளுக்கு அவர்களைத் திட்டித்தீர்த்த கூட்டணிதான் காரணமா? பத்திரிகைகள் கூட்டணியைத் திட்டவில்லை, தவறுகளைச் சுட்டிக்காட்டுகின்றன.

❑○

* சுசந்திகா இலங்கையை விட்டுப் போய் விட்டாரே? பயந்து ஓடிவிட்டதாக கூறுகிறார்களே?

இ.விஜய், ஹட்டன்.

அவருக்கு நேர்ந்தது அநியாயம். அதற்கு பரிகாரம் செய்ய முடியாதவர்கள்- "ஓடிவிட்டார்" என்று பரிகாசம் செய்ய முடியாது! தங்கப்பதக்கம் பெற்றுத் தந்தவரை, போதை மருந்து பாவித்தவராக அந்த நாட்டு மருத்துவரே தப்பாகக் கூறும் அநியாயம் வேறு எங்காவது நடக்கமுடியுமா?

❑○

* அடுத்த பொதுத்தேர்தலுக்கு முன்னர் புதிய அரசியலமைப்பு அமுலாக்கப்படும் என்று ஜனாதிபதி கூறியுள்ளாரே?

பி.சசிகலா, மாத்தளை.

அடுத்த மாதம் என்ற வரையறைகள் அடுத்த ஆண்டு என்றாகி, இப்போது "அடுத்த தேர்தலுக்குமுன்பு" என்று கூறுமளவுக்கு வந்திருப்பது ஒருவகையில் முன்னேற்றம்தானே!

❑○

* பொங்கல் படங்களின் பட்டியல் ஒன்று தருக?

எம்.நசீர், வெலிமட.

'கள்ளழகர்', 'என்றென்றும் காதல்', 'நினைவிருக்கும் வரை', 'எனக்கும் உனக்கும் கல்யாணம்', 'சூரியப் பார்வை', 'தொடரும்', 'மாயா' என்று பட்டியல் நீள்கிறது.

❑○

* ரஜினி அரசியலுக்கு வருவாரா?

எஸ் வைத்தியநாதன்,
தெமட்டகொட.

வந்துவிடக்கூடாது என்பதற்காகவே தன் வார்த்தைகளால் அவரை வருடிக் கொடுத்து வருகிறார் கலைஞர் கருணாநிதி.

❑○



'நினைவிருக்கும் வரை' படத்தில் பிரபுதேவா–கீர்த்திரெட்டி

---

ஸ்போர்ட்ஸ்

# உலகக்கோப்பை மீண்டும் எமக்கே!

"உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் இலங்கை மீண்டும் வெற்றி பெறும்!" என்று இலங்கைக் கிரிக்கெட் அணித்தலைவர் அர்ஜுன ரணதுங்க கூறியுள்ளார்.

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் வருகின்ற மே மாதம் இங்கிலாந்தில் தொடங்குகிறது. அதற்கு முன் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, இலங்கை ஆகிய மூன்று நாடுகள் பங்குபற்றும் கார்ல்டன் அன்ட் யுனைட்டட் உலகத் தொடர் ஒருநாள் போட்டிகள் அவுஸ்திரேலியாவில் நடைபெறுகின்றன.

இப்போட்டிகளில் பங்குபற்றச் சென்ற இலங்கை அணியுடன் அவுஸ்திரேலியா சென்றிருந்த இலங்கை கிரிக்கெட் அணியின் மேலாளர் ரஞ்சித் பெர்னாண்டோ கூறியதாவது:

"1998ம் ஆண்டு 23 ஒருதினப் போட்டிகளில் இலங்கை அணி விளையாடியது. இதில் 12 போட்டிகளில் தோல்வியும், 11 போட்டிகளில் வெற்றியும் கிடைத்தது. இருப்பினும் ஒருதினப் போட்டிகளில் இலங்கை அணி வலுவான நிலையில்தான் உள்ளது.

ஷார்ஜாவில் ஸிம்பாப்வேயிடம் இலங்கை இரண்டுமுறை தோற்றது. இதிலிருந்து ஒருதினப் போட்டிகளில் எந்த அணியும் ஜெயிக்க வாய்ப்பிருக்கிறது என்று தெரிகிறது.

எது எப்படி இருப்பினும் இந்தத் தடவையும் உலகக் கோப்பையைக் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்குடன்தான் நாங்கள் திட்டமிட்டு செயற்பட்டு வருகிறோம்.

சென்ற உலகக் கோப்பைப் போட்டியில் அர்ஜுன ரணதுங்காவின் தலைமைப் பொறுப்பு அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. அவரின் அணுகுமுறை அணிக்கு வெற்றியைத் தேடித்தந்தது. இந்தமுறையும் அவர்தான் அணிக்குத் தலைமை ஏற்றுச் செல்கிறார். நிச்சயம் இம்முறையும் உலகக் கோப்பையை வெல்வோம்!" என்று அவர் தெரிவித்தார்.

அணித்தலைவர் அர்ஜுன ரணதுங்கவும், "நாங்கள் உலகக் கோப்பையை வெல்வோம்!" என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார். அத்துடன் அணியில் இளம் வீரர்களை சேர்க்க முயற்சி எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளார். ■

## கைது உத்தரவு

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது ஆட்டத்தின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்க பாகிஸ்தான் வீரர்கள், அவுஸ்திரேலிய வீரர்களுக்கு இலஞ்சம் கொடுக்க முயன்றதாக புகார் கூறப்பட்டது.

இது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, நீதிபதி மாலிக் அப்துல் கயாம் தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைத்து, குற்றஞ்சாட்டப்பட்ட வீரர்களை விசாரித்தது.

இந்த விசாரணைக்கு ஆஜராகாத முன்னாள் கேப்டன் ரஷீத் லத்தீப் உட்பட இரு பாகிஸ்தான் வீரர்களைக் கைதுசெய்ய பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது. ■

## இந்தியாவில் சுற்றுப்பயணம்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இம்மாதம் 21ம் திகதி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறது. 11 ஆண்டு இடைவெளிக்குப் பின் இந்தியாவில் டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது பாகிஸ்தான்.

பாகிஸ்தான் அணிக்கு வாஸிம் அக்ரமை கேப்டனாக்கும்படி முன்னாள் கேப்டன் இம்ரான் கான் வற்புறுத்தியுள்ளார்.

"கடந்த ஆண்டு மேற்கிந்தியத்தீவு அணிக்கெதிராக 3-0 என்ற கணக்கில் தொடரை பாகிஸ்தான் வெல்ல காரணமாக இருந்தவர் வாஸிம் அக்ரம்.

ஆனால் துரதிஷ்டவசமாக அந்தத் தொடருக்குப்பிறகு கேப்டன் பதவியில் இருந்து அக்ரம் தூக்கியெறியப்பட்டார்.

பாகிஸ்தான் அணியை மீண்டும் வெற்றிப்பாதைக்கு அழைத்துச் செல்ல வாஸிம் அக்ரமை கேப்டனாக்க வேண்டும்; அவர்தான் அதற்குச் சரியான நபர். வீரர்களை ஒருங்கிணைத்துச் செல்லக்கூடிய திறமை அவருக்குண்டு." என்று இம்ரான் கான் கூறியுள்ளார். ■

## 9 முதல் 18 வரை

இந்தியா-நியூஸிலாந்து அணிகளுக்கிடையேயான டெஸ்ட் போட்டிகள் முடிந்து, 5 ஒருநாள் போட்டிகள் இம்மாதம் 9ம் திகதி முதல் 18ம் திகதிவரை நடைபெறுகின்றன.

ஒருநாள் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக தமிழக வீரர் ரொபின் சிங், மும்பை வீரர் ரிஷிகேஷ் கனித்கர், டெல்லி சுழற்பந்து வீச்சாளர் நிகில் சோப்ரா ஆகியோர் நியூஸிலாந்து சென்றுள்ளனர்.

இவர்கள் மூவரும் முதலில் நியூஸிலாந்து சென்ற இந்திய அணியில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ■


படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 43

ஆண்டவருடைய அரவணைப்பினையும் அனுசரணைகளையும் பெற்றிருந்தபோதும் இஸ்ரயேல் மக்கள் சமுதாயமோ யூதா மக்களோ ஆண்டவருக்கு விரோதமான நடவடிக்கைகளிலேயே ஈடுபடலாயினர். இதனால் ஆண்டவருடைய கோபத்துக்கு ஆளாகி வந்தனர்.

தென்பகுதி அரச பீடமான யூதாவில் ரெகபெயாம் கி.மு. 922ல் அரசரானார். ரெகபெயாம் முடிசூடிக்கொண்ட ஐந்தாம் ஆண்டில் எகிப்து நாட்டின் மன்னனான சீசாக்கு என்பவன் எருசலேம்மீது படையெடுத்து வந்தான். நகரை நிர்மூலமாக்கியதுடன் மன்னர் சாலமோனால் கட்டப்பட்ட ஆண்டவருடைய கோவிலையும் கொள்ளையிட்டான். அங்கிருந்த விலைமதிப்பற்ற செல்வங்களைக் கொள்ளையடித்துக் கொண்டு போனான்.

ரெகபெயாமின் பின் அவனுடைய மகன் அபியாம் அரசரானார். அபியாமைத் தொடர்ந்து யூதாவின் அரியணையில் ஆசா, யோசபாத்து ஆகியோர் அமர்ந்தனர். இதே காலகட்டத்தில் இஸ்ரயேல் மக்களின் அரசர்களாக விருந்த எரோபவாம், நாதாபு, பாசா, ஏலா, சிம்ரி, ஓம்ரி ஆகியோர் ஒருவர் பின் ஒருவராக ஆட்சி புரிந்தனர்.

ஓம்ரி இஸ்ரயேலின் மன்னராக

# எலியாவின் அற்புதங்கள்



இருபத்திரண்டு ஆண்டு காலம் ஆட்சி புரிந்தார். இதன் பிறகு கி.மு. 869ம் ஆண்டு ஓம்ரியின் மகன் ஆகாபு அரச கட்டிலேறினார்.

ஆகாபுவின் மனைவியான ஈசபேலின் தூண்டுதலினால் பாகால் என்ற தெய்வத்துக்கு ஒரு கோவிலைக் கட்டுவித்தார். இவருடைய முன்னோர்கள் ஆண்டவருக்கு விரோதமான செயல்களில் ஈடுபட்டதைவிட மிக அதிகமாகவே தகாத செயல்களில் ஈடுபடலானார். இதனால் இறைவனின் கடுங்கோபத்துக்கு ஆளானார்.

ஒருநாள் ஆகாபு மன்னரிடம் எலியா என்ற இறைவாக்கினர் வந்தார். ஆகாபுவின் செயல்களினால் சினமுற்ற ஆண்டவர் மீது

## இராஜகுமாரன்

ஆணையிட்டு, எலியா இவ்வாறு கூறினார்:

## பசியும் பட்டினியும்

"இந்த நாட்டில் இனிவரும் பல ஆண்டுகளுக்கு பனியோ, மழையோ பெய்யப்போவதில்லை; எங்கும் பஞ்சம் ஏற்படப்போகிறது. பசியும் பட்டினியும் மக்களை வாட்டப்போகிறது!"

இதனைக் கேட்ட மன்னரும் பிரதானிகளும் அரசி ஈசபேலும் கடுங்கோபமுற்றனர். எலியா, ஏனைய இறைவாக்கினர்களைப்போல் நல்லாடைகள் புனைந்து வரவில்லை. காடுகளில் வசிப்பவர்களைப்போல் கரடுமுரடான தோற்றத்துடன் காணப்பட்டார். அவரை ஒரு பைத்தியக்காரன் என்று நினைத்த அதிகாரிகள் எலியாவைப் பிடிக்கக் காவலர்களை ஏவினர். இதற்கிடையில், அங்கிருந்து தப்பி ஓடிவிடுமாறு ஆண்டவரின் ஆணை எலியாவுக்குப் பிறந்தது. அவரும் எவரிடமும் பிடிபடாமல் தப்பிக்கொண்டார்.

யோர்தானுக்கு அப்பாலுள்ள கெரீத்து நீரோடைக்கு அருகிலுள்ள பாறைகளில் ஒளிந்து கொள்ளுமாறு எலியாவுக்கு ஆண்டவர் கூறினார். அங்கே சென்றவருக்கு, வேளா வேளைக்கு காகங்கள் அப்பமும் இறைச்சியும் கொண்டுவந்து கொடுத்தன. கெரீத்து ஓடையில் நீர் அருந்தினார்.

நாட்டில் மழை பெய்யாமையால் அந்த நீரோடையிலும் தண்ணீர் வற்றிவிட்டது. அங்கிருந்து சீகோனிலுள்ள சாரிபாத் என்ற இடத்துக்குச் செல்லுமாறு ஆண்டவரின் ஆணைபிறந்தது. அங்கிருந்த ஏழை விதவைப் பெண்ணிடம் சென்றார். தனக்கு உண்பதற்கு அப்பமும் குடிப்பதற்கு தண்ணீரும் கேட்டார். அப்பெண்ணிடம் அவளுடைய மகனுக்கும் தனக்கும் ஒரேயொரு வேளைக்கான மாவும் எண்ணெய்யும் இருந்தன. தன் நிலமையை எலியாவிடம் எடுத்துக்கூறினாள்.

கடும்பசியுடனும் தாகத்துடனுமிருந்த எலியா, எப்படியாவது தனக்கு உண்பதற்கு அப்பம் தருமாறு கோரினார். அந்தப் பெண்ணும் தயங்காமல் அப்பத்தைச் சுட்டு எலியாவுக்குக் கொடுத்தாள். எலியா அப்பத்தை உண்டு தண்ணீரைக் குடித்த பின்னர், மா வைக்கப்பட்டிருந்த பானையையும் எண்ணெய் வைக்கப்பட்டிருந்த பாத்திரத்தையும் பார்த்த அப்பெண் திகைத்து நின்றாள். எலியாவுக்கு அப்பம் தயாரிப்பதற்கு முன்னர் அப்பானையில் இருந்த அதே அளவு மா அப்பானையில் இருந்தது. எண்ணெய் வைக்கப்பட்டிருந்த பாத்திரத்திலும் எக்குறைவும் காணப்படவில்லை. அக் குடும்பத்தினர் அதே மாவையும் எண்ணெயையும் பயன்படுத்தி பல காலம் உணவு தயாரித்து உண்டனர்.

## உயிர் மீண்ட பையன்

இதேவேளை ஒருநாள் அப்பெண்ணின் மகன் கடும் நோயுற்றான். அவனுடைய சுவாசமும் அடங்கி விட்டது. அப்பெண் அழுது புலம்பினாள். எலியாவிடம் தனது மகனுக்கு நேர்ந்த கதியையிட்டுக் கலங்கி முறையிட்டாள். எலியா அப்பையனைத் தூக்கிக் கொண்டு போய்த் தனது விடுதியில் கிடத்தி ஆண்டவரிடம் பிரார்த்தித்தார். ஆண்டவரின் ஆணைப்படி அந்த ஏழை விதவையிடம் வந்து, இத்தனை நாட்கள் அவள் தயாரித்துக் கொடுத்த அப்பத்தை உண்டு வந்த தனக்கு இத்தகைய சோதனை தரலாகாது. பையனின் உயிரை மீட்டுத் தருமாறு ஆண்டவரிடம் முறையிட்டார்; பிரார்த்தித்தார். சிறிது நேரத்தில் அப்பையன் உயிருடன் எழுந்தான். அவன் தாய் அளவிட முடியாத மகிழ்ச்சியடைந்தாள்.

பஞ்சம் ஆரம்பித்து மூன்றாம் ஆண்டில் ஆண்டவர், எலியாவிடம், மன்னர் ஆகாபுவிடம் போகுமாறு கூறினார். அதன்படி ஆகாபுவின் உதவியாளரான ஒபதியாவை எலியா கண்டார். தான் மன்னர் ஆகாபுவைக் காணவேண்டும் என்று கூறினார். மன்னருடன் நெருக்கமாக உறவாடும் ஒபதியா எலியாவின் கூற்றைக் கேட்டுப் பயந்தார். மன்னர் ஆகாபுவைப்போல் அல்லாது, ஒபதியா ஆண்டவர்மீது நம்பிக்கை வைத்திருந்தார். ஆகாபுவின் மனைவி ஈசபேல் ஆண்டவரின் இறைவாக்கினர் பலரை கொல்வதற்கு நடவடிக்கை எடுத்தவள். அதேவேளை ஒபதியா, இறைவாக்கினர் நூறு பேரைக் குகைகளில் வைத்துப்பாதுகாத்தவர்.

எலியா, மன்னர் ஆகாபுவைக் காணவேண்டும் என்று கூறியபோது, அவ்வாறு எலியா மன்னரைக் காணநேர்ந்தால், மன்னர் அவரைக் கைது செய்து துன்புறுத்தக்கூடும் என்று ஒபதியா கவலை கொண்டார். நாட்டில் மழை பெய்யாது, பெரும் பஞ்சம் ஏற்படப்போகிறது, என்று இறைவாக்கினை மன்னர் முன்னிலையில் கூறியபோது, கோபங்கொண்ட மன்னர் எலியாவைப் பிடிக்க முயன்றார். ஆனால் அவர் தப்பிச்சென்றுவிட்டதை எண்ணிப்பார்த்தார். அவ்வாறு சிந்தித்துக் கொண்டிருந்த ஒபதியாவிடம் எலியா, "இம்முறை நான் தப்பி ஓடமாட்டேன்!" என்று வாக்களித்தார். இதனைத் தொடர்ந்து மன்னரிடம் எலியாவைப் பற்றி ஒபதியா கூறினார்.

## மன்னரைக் கண்ட எலியா

எலியாவின் வாக்குப்படி மழை பெய்யாமல் பஞ்சம் ஏற்பட்டது என்பதை மன்னர் ஆகாபு அறிந்திருந்தமையினால் எலியாவைச் சந்தித்தார். எலியாவை நோக்கி, "இஸ்ரயேல் மக்களிடம் கலகமூட்டுபவன் நீ!" என்று மன்னர் குற்றஞ் சாட்டினார். ஆனால் எலியா, "மக்களிடையே குழப்பம் விளைவிப்பவர் நீர்தான். நிரூபிக்க வேண்டுமானால், இறைவாக்கு என்று பொய்கூறித்திரியும் நூற்றுக்கணக்கான உமது பொய்வாக்கினரையும் இஸ்ரயேல் மக்களனைவரையும் ஒன்று கூடச் செய்யும்!" என்று மன்னர் ஆகாபுக்குக் கட்டளையிட்டார்.

மக்களனைவரும், 'பாகால்தான் கடவுள்' என்று பொய்வாக்குரைக்கும் நாநூற்றைம்பது பேரும் கார்மேல் மலைமீது குழுமினர். அவர்களைப் பார்த்து எலியா இவ்வாறு கூறினார்:

"எகிப்து நாட்டிலிருந்து இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மோசேயால் விடுதலை பெற்று, உங்களுக்காக அதே இறைவனால் அருளப்பட்ட இப்பரந்த பிரதேசத்தில் வாழ்ந்து வரும் இஸ்ரயேல் மக்களே! உங்களில் பாகாலைத் தெய்வமாக இன்றும் கருதுபவர்கள் ஒருபுறம் நில்லுங்கள். இஸ்ரயேலின் ஆண்டவர்மீது பற்றுக்கொண்டுள்ள விசுவாசிகள் என்னிடம் வாருங்கள். இரு காளைகளைக் கொண்டு வாருங்கள். முதலில் பாகால்மீது பற்றுக்கொண்டவர்கள் ஒரு காளையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். அதனைத் துண்டு துண்டாக வெட்டி, விறகுகளை அடுக்கி, வெட்டப்பட்ட இறைச்சித் துண்டுகளைப் பரப்பி, பாகாலை-வேண்டி- தீமூட்டாமலே- அவற்றை எரியச் செய்யுங்கள்!"

எலியா கூறியவாறு பாகால் பக்தர்கள் செய்தனர். பலி பீடத்தை வளைத்து நின்று கூக்குரலிட்டு பாகாலின் பெயரைச் சொல்லி பேரொலி எழுப்பினர். மாலையாகும்வரை எதுவுமே நடைபெறவில்லை.

எலியா அடுத்த காளையைத் துண்டு துண்டாக வெட்டுமாறு பணித்தார். இஸ்ரயேல் சமுகத்தின் பன்னிரண்டு குலங்களையும் குறிக்குமுகமாக பன்னிரண்டு கற்களை எடுத்து பலிபீடம் ஒன்றினை அமைத்தார். அதன் மேல் விறகுகளையும் பரப்பும்படி கூறினார். இறைச்சித்துண்டுகளும்பரப்பப்பட்டன. அவற்றின்மீது பல தடவைகள் தண்ணீர் ஊற்றப்பட்டது.

எலியா ஆண்டவரை நோக்கிப் பிரார்த்தித்தார். அப்போது வானிலிருந்து இறங்கிய தீப்பிளம்பாகக் கீழே இறங்கி பலிபீடத்தில் தாவியது. இக்காட்சியைக் கண்ட இஸ்ரயேல் மக்கள் அனைவரும் ஆண்டவரைப் பிரார்த்தித்து ஆரவாரித்தனர்.

(தொடர்ந்து வரும்)

**குறிப்பு:** 'கிறிஸ்துவுக்குமுன்' உள்ள ஆண்டுகள் கணக்கிடும்போது பின்னோக்கித்தான் கணக்கிடப்படும் என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

**திருமறை 41 விடை** ☛ நானூற்றெண்பது ஆண்டுகளின் பின்னர்

**பரிசு பெறுவோர்:**

1. ஏ. அமலராஜன், 4வது ஒழுங்கை, கல்லடி, மட்டக்களப்பு.
2. மனோ கோபாலன், இல.16, நவீன சந்தைக் கட்டடம், ஹப்புத்தளை.
3. ஸஹாப்தீன் முஹம்மது றியாஸ், 308/1, மக்காமடி வீதி, மருதமுனை-03.
4. டொ. ஷோபிகா ஷிரோமினி, 35/2, 2ம் குறுக்குத் தெரு, பாஷையூர்,யாழ்ப்பாணம்.
5. லோ. சிறீதரன், ப.நோ.கூ.சங்கம் முன்பாக, கூமாங்குளம், வவுனியா,

**திருமறை 43** வினா:- இஸ்ரயேல் மக்கள் வணங்கிய போலித் தெய்வத்தின் பெயர் என்ன?

ஜன. 16க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 43— தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

---

# பயோடேட்டா



| | |
|---|---|
| பெயர் | : சுரேஸ் பிரேமச்சந்திரன் |
| தொழில் | : அரசியல் |
| உபதொழில் | : இந்தியாவில் ரியல் எஸ்டேட் பிஸினஸ். |
| ஒரே சாதனை | : எம்.பியாக இருந்தது. |
| வேதனை | : எம்.பியாக இல்லாதது |
| எரிச்சல் | : தனக்கில்லாத பதவியில் அமர்ந்திருக்கும் தமிழ் எம்.பிகள். |
| சந்தோசம் | : மீன்பிடி அமைச்சின் ஆலோசகர் பதவி. |
| பிடித்த ஆயுதம் | : தூண்டில் |
| பிடிக்காத ஆயுதம் | : இந்தியப் படை காலத்தில் பயன்படுத்தி தோல்விகண்ட துப்பாக்கிகள். |
| சேகரித்தது | : இந்தியப் படை கொடுத்த நிதியை சொந்தக் கணக்கில்! |
| விரும்புவது | : கட்சிச் சொத்துக்களை தன் பெயரில் வைத்திருப்பதை! |
| நண்பர்கள் | : தோழர்களல்ல. |
| எதிரிகள் | : கட்சிக்குள் கணக்கு கேட்பவர்கள். |
| பொழுதுபோக்கு | : அறிக்கை விடுதல். |
| கனவு | : மீண்டும் இந்தியப் படை காலம்! |
| எம்.பியாக இருந்த போது சாதித்தது | : இராஜதந்திர கடவுச் சீட்டோடு வெளிநாடுகளுக்கு வியாபாரச் சுற்றுப்பயணம்! |
| ஒரே இலட்சியம் | : மறுபடி எப்பாடுபட்டாவது எம்.பியாவது! |

---

# மீண்டும் மோனிகா



மோ: ஹலோ! டியர்! என் குரல் கேட்கிறதா? உம் உயிர் துடிக்கிறதா?

கிளி: ஐயோ நீயா? கிலாரி அடித்த அடி வலிக்கிறது. கன்னத்தில் வடு இன்னும் இருக்கிறது. இன்னொரு அடி வாங்கினால் தாங்காது. முன்னாள் உயிரே! ஃபோனை வைத்துவிடு.

மோ: முடியாது, கண்ணாளா முடியாது. உமக்கு வேண்டுமானால் நான் முன்னாள் உயிராக, முன்னாள் இதயமாக இருக்கலாம். எனக்கு எந்நாளும் நீர்தான் உயிர். நீர்தான் இதயம்!
(பாடுகிறார்)
கொலம்பஸ் கொலம்பஸ் விட்டாச்சி லீவு
கொண்டாட கண்டுபிடித்து கொண்டுவா ஒரு தீவு.
அங்கிள் கொலம்பஸ் கொலம்பஸ் -விட்டாச்சி லீவு
கொண்டாட கண்டுபிடித்து கொண்டா ஒரு தீவு

கிளி: நிறுத்து கண்ணே நிறுத்து! என் நினைவை குடைந்து, இனிய அந்த நாட்களை வெளியே எடுத்துப் போடாதே!

மோ: (தொடர்ந்து பாடுகிறார்)
தக்க தையா தையோ தையோ தையோ
நெஞ்சி உச்சி கொட்டி துடிக்குது தையா
உயிர் தட்டு கெட்டு தவிக்குது கிளின்ரா.

கிளி: இப்படியெல்லாம் பாடி ஆடித்தானே வெள்ளை மாளிகைக்குள் என்னை கொள்ளையடித்தாய்! பின்னர் எங்கள் களியாட்டத்தை ,கோர்ட்டில் கூறி என்னை கிளித்தாய்! இப்போது ஏன் அழைத்தாய்? என் நிம்மதியை ஏன் குலைத்தாய்?

மோ: பொது நலம் என்னைப் போ என்கிறது. எங்கே போக என்று கேட்டேன். கிளின்ரனிடம் போ என்கிறது.

கிளி: என்ன பொதுநலம்? என் பலமே போய் விட்டதே பாவி.

மோ: அவசரப்படாதீர்கள் கண்ணாளா. உங்கள் அவசரமெல்லாம் நானறியாத்தா? வெள்ளை மாளிகையில் விளையாட தடை என்பதற்காக, ஈராக் மக்களுடன் விளையாடுகிறீர்கள்! பெண்களை நெருங்கப் பயம் என்பதால், பிளேன்களை அனுப்பி வேடிக்கை பார்க்கிறீர்கள்! வீட்டிலே கிலாரி வெறுப்பில் இருப்பதால், உங்கள் பொழுதைப் போக்க போர் முழக்கம் செய்கிறீர்கள்!

கிளி: அபாண்டம். அபாண்டம்.

மோ: நான் கூடஇருந்தவரை நீர் ஏன் குண்டு போடவில்லை? என்னோடு நீர் இருந்த ஒவ்வொரு நொடியும் உலகையே மறந்திருந்தீரே. ஈராக்கையா நினைத்திருப்பீர். நோ. நோ.நெவர்.

கிளி: மோனிக்கா என்னை மோசம் பண்ணாதே! என் எதிர்காலத்தை நாசம் பண்ணாதே! உன் வாசம் இனி வேண்டாம். பாசம் என்பாயே அது பகல் வேசம்!.

மோ: கண்ணாளா! கிலாரி உங்கள் கன்னத்தில் அறைந்தாராமே. நான் எப்போதாவது அறைந்திருக்கிறேனா? உங்கள் கன்னத்தில் நான் தந்த ஒவ்வொன்றும் இனித்திருக்குமே. மறந்து போனீர்களா?

கிளி: இறக்கும்வரை மறக்காது கண்ணே! ஆனால் சிறக்கும் என் மதிப்பை வானில் பறக்கும் நிலைக்கு கொண்டு வந்து விட்டாயே! எனக்கில்லையடி உறக்கம்.

மோ: உங்கள் மனம் வானத்தில் பறக்கலாம், அதனை பிடித்துவர போர் விமானமா பறக்கவிட வேண்டும்? இது நியாயமா நேசா? சொல் நேசா சொல்!

கிளி: கண்ணே, கிட்டகிட்ட வந்து என்னை முட்டி மோதி என் புகழை வெட்டிப் போட்ட சூப்பர் குதிரையே! என் புகழை மீட்பாரடி ஈராக்கில் குண்டு போட்ட எம் படைவீரர்!

மோ: இனிப்பானவரே, இறுதியாக என்ன உரைக்கிறீர்?

கிளி: போட்ட குண்டு போட்டதுதான்! போட்ட தடை போட்டதுதான்! நமக்குள் முறிந்த உறவு முறிந்ததுதான். மோனிக்கா நீ ஒரு மோகினிதான்!

மோ: (பாடுகிறார்)
என்னுயிரே! என்னுயிரே! என் ஆருயிரே
என்னுயிரே! என்னுயிரே! என் ஒருயிரே
கண்கள் தாண்டிபோகாதே என் ஆருயிரே
-என் ஒருயிரே
ஒரு காதலிலே மொத்தம் ஏழு நிலை
இது எந்த நிலை என்று தோன்றவில்லை
என் ஆறறிவில் ரெண்டு காணவில்லை...

கிளி: ஐயோ, அப்படியானால் உனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? ஆறறிவாய் உள்ளபோதே என்னை உலகறிய நாற வைத்தவளே! என்னையும் பைத்தியம் என்று உலகம் கூறவைத்துவிடாதே!

மோ: நீர் ஒரு காமப் பைத்தியம்! பெண் பைத்தியம்! போர் பைத்தியம் என்று உலகம் கூறுகிறதே உம் காதில் விழவில்லையா? கன்னத்தில்தானே கிலாரி அறைந்தார் காதில் அல்லவே!
பாடுகிறார்
உன்னைப் பார்த்து-இந்த
உலகம் சிரிக்கிறது- உன்
செயலைப் பார்த்து
உலகம் வெறுக்கிறது!

**காதிலை பூ கந்தசாமி**

**யாவும் கற்பனை**



படிப்பகம்

www.padippakam.com






அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11

3 செட்டியார் தெரு, கொழும்பு 11

433631




## கேட்கலாம், பார்க்கலாம்

நீருக்கடியில் சுழியோடுபவர்கள் முன்பெல்லாம் ஒருவரோடு மற்றவர் கருத்துப்பரிமாறிக் கொள்வதற்குக் கைச் சைகைகளே பயன்பட்டு வந்துள்ளன.

இப்போது சுழியோடிகள் கருத்துப் பரிமாற உரையாடும் சாதனம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. வாயில் சுவாசத்துக்காகப் பொருத்தப்படும் சாதனத்துடன் உரையாடலுக்கான கருவியும் பொருத்தப்பட்டிருக்கும்.

அடுத்தவரின் காதுகளில் துல்லியமாக ஒலி அலைகள் வந்து முட்டக்கூடிய கருவியும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடலில் 99 மீட்டர் ஆழம் வரையில் சுழியோடுவோர் இதனைப் பயன்படுத்தி உரையாடலாம். இதன் ஒலி 45 மீட்டர் தொலைதூரம் வரை கேட்கும்.

இச்சாதனத்தில் பொருத்தப்படும் பட்டரி 4 மணிநேரம் பயன்படுத்தப்படலாம். அக் கருவிகளையே படத்தில் காண்கிறீர்கள்.

கடலின் ஆழத்தை கண்களால் ஆராய்ந்தபடியே தமக்குள் காதோடு பேசிக்கொள்ளலாம். ஜாலியான கடலடிப் பயணத்திற்கு கச்சிதமான சாதனம்.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

5 செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


## வானுயரம்

இன்றைய உலகில் விமானப் பயணம் என்பது மிக மிகச் சாதாரணமான சமாச்சாரம். உலகின் எந்தப்பாகத்துக்கு வேண்டுமானாலும் கணவேகத்தில் போய்ச்சேர்ந்துவிடலாம். ஆனால் ஒரு விமானத்தை வடிவமைத்து உருவாக்குவதென்பது சாதாரணமான ஒரு விடயமல்ல.

விமானம் எத்தகைய வடிவத்தில் அமைய வேண்டும் என்பதை முடிவெடுக்க வேண்டும். இதற்காக ஒரு குழுவினர் தங்கள் மூளைகளைப் போட்டுக் குடைவார்கள். பின்னர் தங்கள் மூளைகள் சேகரித்த கணிப்புக்களை இயந்திர மூளையான கணனியிடம் ஒப்படைக்கிறார்கள். அக்கணனி வேண்டிய தரவுகளைத் தருவதுடன் விமானத்தையும் வடிவமைத்துக் கொடுத்து விடுகிறது.

கணனி தரும் தரவுகளை வைத்து முதலில் சிறிய மாதிரி வடிவ விமானம் உருவாக்கப்பட்டு பல தரப்பட்ட பரிசோதனைகளுக்கும் உட்படுத்தப்படுகிறது. இதன் பின்னர்தான் பகுதி பகுதியாக-பாகம் பாகமான-துண்டு துண்டாக வெவ்வேறு இடங்களில் விமானத்தின் துண்டுகள் உருவாக்கப்படுகின்றன. இறுதியில் துண்டுகளாகப் (பாகங்கள்) ஒன்றிணைப்புக் கூடங்களுக்குக் கொண்டுவரப்பட்டுப் பொருத்தப்படுகின்றன.

விமானங்கள் ஒவ்வொன்றாகக் கட்டப்படுவதில்லை. ஒரே தரத்தில் பல விமானங்களை ஒரே வேளையில் உருவாக்குகிறார்கள். ஒவ்வொரு பாகத்தையும் உருவாக்கும் பணியில் பலநூறு நிபுணர்களும் பணியாளர்களும் ஒன்றிணைந்து செயற்படுகின்றனர்.

நவீனரக போயிங் 747 விமானத்தில் ஆணிகள் போன்றவை நீங்கலாக மொத்தம் 60 இலட்சம் பாகங்கள் உள்ளனவாம். இவ்விமானங்கள் அமெரிக்காவின் வாஷிங்டனிலுள்ள பரந்த விஸ்தீரணமுள்ள பிரதேசத்தில் அமைந்துள்ள கூடங்களில் கட்டப்படுகின்றன.



மொத்தம் பத்தாயிரம் தொழிலாளர்கள் இந்நிறுவனத்தில் பணி புரிகின்றனர்.

தொழிற்கூடங்களுக்குள் ஒருவர் மற்றோர் பிரிவுக்குச் செல்ல வேண்டுமானால் சைக்கிள் வண்டியில்தான் செல்ல வேண்டுமாம்.

ஒவ்வொரு மாதமும் 5 ஜம்போ ஜெட் விமானங்கள் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன.

இதில் ஆச்சரியமான தகவல் என்ன தெரியுமா? இவை ஒன்றன்பின் ஒன்றாக உருவாக்கப்படுவதில்லை.

இவற்றுக்கான உற்பத்தித் தொடக்கம் ஒரே நாளில்- அதேபோல் இந்த 5 விமானங்களும் ஒரே நாளில் உற்பத்திக் கூடத்தைவிட்டு வெளியேறுகின்றன.

படத்தில் காணப்படுவது ஒரு விமானத்தின் பெரும்வால்பகுதி. முக்கிய பணிமுடிவடைந்து ஒன்றிணைப்புக் கூடத்துக்கு எடுத்துச் செல்லப்படுவதற்கு முன் இறுதிநேரப் பணிகள் பார்க்கப்படுகின்றன.

வாயைப் பிளக்க வைக்கும் தகவல் ஒன்று: அமெரிக்கா வின் குண்டுவீச்சு விமானங்களில்பாரியது நோத்து றொப் விமானம். இதன் விலை என்ன தெரியுமா? 20 கோடி அமெரிக்க டொலர்கள். நம்நாட்டு மதிப்பில் சுமார் 1300 கோடி ரூபாய். இதில் மட்டும் 40 விமானங்கள் அமெரிக்கா வைத்திருக்கிறது.

தருவது—ரி. தாசன்

## சீவிச் சிங்காரித்து



நாம்மட்டுமா சீவிச்சிங்காரிக்கிறோம்? பொதுவாகப் பறவைகள் தங்கள் கூடுகளில் அதிகாலை கண் விழித்ததும் தமது உடல்களை ஒருதடவை சிலிர்த்து தமது இறகுகளை ஒழுங்கு படுத்திக் கொள்கின்றன. சில பறவைகள் இறகுகளைச் சீர் செய்யத் தமது சொண்டையே பயன்படுத்துகின்றன.

படத்தில் காணப்படும் 'இராஜநாரை' அதிகாலை தனது அன்றாடப் 'பணிகளுக்குப் புறப்படுமுன்'-தனது தலை மற்றும் உடலிலுள்ள இறகுகளைச் சீர் செய்வதற்கு முன்னதாக படப்பிடிப்பாளர் படம் பிடித்துவிட்டார். சீவிசிங்காரிக்காத நேரத்தில் படம்பிடித்துவிட்டாரே என்று கோபத்தில் முறைக்கிறது பாருங்கள். காலை எழுந்ததும் தலை விரி கோலமாக நடமாடும் மனிதர்களும் இருக்கிறார்கள். அவர்கள் இந்த இராஜநாரையிடம் பாடம் படிக்கலாம்.

## நீர் உலா

உடலிலுள்ள உறுப்புக்கள்- அவயவங்கள் அளவோடு இருந்தால்தான் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். உலகிலுள்ள பிராணிகளுள் ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாத உறுப்புக்களைக் கொண்டது 'ஹிப்போ' என்றழைக்கப்படும் நீர்யானைகள்தாம்.

ஆபிரிக்காவின் எடைகூடிய மிருகங்களுள் ஒன்றாகக் கணிக்கப்படும் நீர் யானைகள்- நிலயானைகளைப்போன்று தாவர பட்சிணிகள்தான். வெறும் புல்லையும் தளிர்களையும் தின்றே மிகப் பெரிய கொழுத்த உடம்பைக் கொண்டுள்ளன.

நீரில்தான் பெரும்பாலும்- தலையை மேலே உயர்த்திக்கொண்டு திரியும் இப்பிராணி நிலத்தில் அதன்பாரிய உடம்பை, குட்டையான கால்களால் அசைத்து அசைத்து நடக்கும். மிகப் பெரிய தலை, கண்களும் காதுகளும் மிகச்சிறியன. ஆனால் வாயோ மிகப் பெரியது. இதன்வாலோ மெல்லியதாகவும் சற்று நீண்டும் காணப்படும்.

இதன் உடல் உரோமமற்றது. எப்போதும் வழுவழுப்பாக இருக்கும். நீரைவிட்டு வெளியே வந்தால் ஆக ஓரிரு மணி நேரம் மட்டும் தாக்குப் பிடிக்கும்.



காதல் சமாச்சாரத்தில் நீர்யானைகளின் பாணியே தனிதான். ஆண் நீர்யானைகள் இணை தேடும் காலம் வந்ததும், ஆளமில்லாத நீர் நிலையின் கரையில் ஓரிடத்தைத் தெரிவு செய்து, தனது மலத்தை- வாலை விசிறிய வண்ணம் பரப்பிக்கொண்டு தனது எல்லையை அடையாளமிடும். இதனை அவதானிக்கும் இதனை விரும்பும்- பெண் நீர் யானை ஆணுடன் வந்து சேர்ந்துகொள்ளும்.

## சுழல் உருளி



புதுவகையான சைக்கிள் அமெரிக்காவின் சில நகரங்களில் அறிமுகமாகியிருக்கிறது. ஒரு மோட்டார் இயந்திரத்துக்கு இரு சக்கரங்கள் பொருத்தப்பட்டிருக்கும். அந்த இயந்திரத்துடன் தொடர்புடைய நீளமான குழாயின் முன்புறம் சாதாரண ஸ்கூட்டர்களுக்கு இருப்பதுபோன்ற உள்வளைந்த கைபிடி உண்டு. அக்கைபிடியை இடுப்பில் இணைத்துக்கொண்டு ஒருவர் முன்புறம் (படத்திலுள்ளது போல்) நின்றவாறு இயந்திரத்தை முடுக்கி விட்டால் அவர் முன் நோக்கித் தள்ளப்படுகிறார். வெறுமனே இயந்திரத்தால் உந்தித்தள்ளப்பட்டால் அந்நபர் விழுந்து கைகால்களை முறித்துக்கொள்ளத்தான் நேரிடும்.

படத்திலுள்ளவரின் கால்களை உற்றுப்பாருங்கள். அவற்றில் உருளைகள் பொருத்தப்பட்ட அணிகள் உள்ளன. இயந்திரத்தின் உந்துதலால் கால் உருளைகளின் உதவியுடன் உருண்டு செல்லலாம். மணிக்கு 40 கிலோமீட்டர் வேகத்தில் உருண்டு போகலாம். செலவு அதிகமில்லாத சௌகரியமான இச்சாதனம் வாகன நெரிசலுள்ள சாலைகளிலும் தங்கு தடையில்லாமல் புகுந்து ஓடிக்கூடியது. ஆனால் நம் நாட்டின் நோயுற்ற சாலைகளில் ஓட முடியுமா தெரியவில்லை.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து

திருகோணமலையைச் சேர்ந்த ரவீந்திரன்-ஜீவரஞ்சனி தம்பதியினரின் செல்வப் புதல்வன் வித்தியாதர் தனது 1வது பிறந்த நாளை 27.11.1998 அன்று 282, BRIDLE TOWNE CIR, SCARBOROGH, ONT, M1W 2G8, CANADA, வில் உள்ள தனது இல்லத்தில் கொண்டாடினார்.

விதுக்குட்டியை அன்பு அம்மா, அப்பா, அப்பப்பா, தேருமாமா, ஜெயந்தி அத்தை, ஜெயபால் பெரியப்பா, சந்திரிகா பெரியம்மா, மோகனதாஸ் அங்கிள்,

செல்வன் வித்தியாதர்



ஆதித்தியா மச்சான், சாம்ஷுரி மச்சான், கனிஷ்டிலுள்ள தீவன் மாமா, இலங்கையிலுள்ள (திருமலை) தீவன், அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பா, சித்திமார், அக்காமார்களான சரண்யா, சாம்பவி, அபிஷேனா, தம்பி ஆதித்தியன் மற்றும் இலங்கையிலும் கனடாவிலும் இருக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் அருளும், நல்லாசியும் பெற்று பண்பின் பிறப்பிடமாய், செல்வச் செழிப்புடன் சகல கலைகளும் கற்று கலைஞனாக பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென அன்புடன் வாழ்த்துகின்றனர்.